பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 16 வியாழக்கிழமை (31.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 035

# இ.தொ.காவின் அணிகளில் ஒன்று விலகியது; சரத்துக்கு ஆதரவு

## பிள்ளையானுக்கு உள்ள துணிவுதானும் இல்லை என்கிறார் யோகராஜன்

கொழும்பு டிசெம்பர் 31

மலையகத் தமிழர்களின் பலம்வாய்ந்த அமைப்பான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி பிளவுற்றது. ஆர்.யோகராஜன் தலைமையிலான அணி அக்கட்சியிலிருந்து விலகியுள்ளது. அவருடன் பிரதிக் கல்வி அமைச்சர் மு.சச்சிதானந்தனும் விலகினார்.

தமது அணி ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் என்று யோகராஜன் கூறினார்.

பிள்ளையானுக்கு உள்ள அரசியல் துணிவு கூட இ.தொ.க. தலைமைப்பீடத்திடம் இல்லை என்றும் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் சொன்னார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கம்

யாழ்ப்பாணம் ,டிச. 31

யாழ்ப்பாணத்தில் இன்று முதல் ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்படுவதாக அரச தகவல் திணைக்களத்தின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் உத்தியோகபூர்வ ஊரடங்குச் சட்டங்கள் அனைத்தும் நீக்கப்படும் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் மூவர் கொழும்பில் கைது

கொழும்பு, டிச. 31

கொழும்பில் நேற்றுக் காலை பொலிஸார் நடத்திய திடீர் தேடுதல் சோதனை நடவடிக்கையின் போது மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை ஆகிய இடங்களில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை இடம் பெற்ற தேடுதலில் நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பம்பலப்பிட்டியில் கைது செய்யப்பட்ட ஓர் இளைஞனும் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். (சி)

உள்ளே
2010 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டி.
முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் சங்கரி 15 அம்சக் கோரிக்கை

### அவை குறித்து முடிவை அறிவிக்க வேண்டுகிறார்

கொழும்பு, டிச.31

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களின் கவனத்துக்குமாகப் பதினைந்து அம்சங்கள் அடங்கிய கோரிக்கைப் பட்டியல் ஒன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி முன்வைத்திருக்கின்றார்.

தாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அவற்றை நிறைவேற்றுவார்கள் என்பது குறித்து முற்கூட்டியே அறிவிக்குமாறும் அவர் வேட்பாளர்களைக் கேட்டுள்ளார்.

* இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்கு அப்பால் தீர்வு.
* வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிய விடயத்தை அந்த மக்களிடமே விட்டுவிடுவது.
* இடம்பெயர்ந்தோரின் மீள் குடியேற்றத்தை இனியும் தாமதமின்றி முன்னெடுப்பது.
* போரழிவுகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்கல்.
* அழிவுகள், உயிரிழப்புகள் குறித்து உண்மை விவரங்களைத் திரட்டுதல்.
* தமிழ்க் கைதிகளை விடுவித்தல்.
* பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## டீசல், ம.எண்ணெய் விலைகளும் குறையும்

கொழும்பு,டிச. 31

பெற்றோலின் விலையைத் தொடர்ந்து 'லாவ்' எரிவாயுவின் விலையையும் அரசு 60 ரூபாவரல் இன்று நள்ளிரவு முதல் குறைக்கவுள்ளது.

இதன்படி 'லாவ் காஸ்' சிலிண்டர் ஒன்றின் விலை (20ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாசியாவில் இலங்கையிலேயே பத்திரிகையாளருக்கு அதிகம் பாதிப்பு

### இவ்வாண்டு நிலைமை குறித்து தென்னாசிய ஆணைக்குழு தகவல்

கொழும்பு, டிச. 31

தென்னாசிய நாடுகளில் இலங்கைப் பத்திரிகையாளர்களே 2009 ஆம் ஆண்டில் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தென்னாசிய ஊடக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தென்னாசிய சுதந்திர ஊடக அமைப்புடன் ('சவ்மா') இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானில் வெளியிட்டுள்ள தனது ஏழாவது ஊடக கண்காணிப்பு அறிக்கையிலேயே ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

'இந்து' பத்திரிகையாசிரியர் என்.ராமைத் தலைவராகக் கொண்ட தென்னாசிய ஊடக ஆணைக்குழு 2009ஆம் ஆண்டில் 12 பத்திரிகையாளர்கள் பிராந்தியத்தில் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளது.

சகல விதத்திலும் நோக்கும்போது இலங்கைப் பத்திரிகையாளர்களே 2009 ஆம் ஆண்டில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். பாகிஸ்தானிலுள்ள அவர்களது சகாக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை விட அதிகமாக இலங்கைப் பத்திரிகையாளர்கள் எதிர்கொண்டுள்ளனர். உயிர் அச்சம் காரணமாகப் பல சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர். - என ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தலைசிறந்த நன்கு அறியப்பட்ட பத்திரிகையாளர்கள் லஸந்த விக்கிரமதுங்க பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டதும், கடத்தல் பாணியில் என்.வித்தியாதரன் கைதுசெய்யப்பட்டமையும், (20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு செல்லும் வடபகுதி மக்களால் நிரம்பி வழிகின்றது அ'புரம் கடவுச்சீட்டு அலுவலகம்

கொழும்பு, டிச. 31

கண்டி - யாழ் ஏ - 9 வீதி திறக்கப்பட்ட பின்னர் வெளிநாடு செல்ல முயலும் வடக்குப் பகுதி வாசிகளால் அநுராதபுரம் குடிவரவு - குடியகல்வு அலுவலகம் கடவுச்சீட்டு விண்ணப்பத்தாரிகளால் நிரம்பி வழிகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வீதி திறக்கப்பட்டு சுதந்திரமான பிரயாணத்துக்கு அனுமதி கிடைத்துள்ளதால் யாழ். - வவுனியா மக்கள் பெரும்பாலும் குடும்ப சகிதம் வெளிநாடு செல்ல முயல்கின்றனர். இதனால் தமது கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நாளாந்தம் ஏராளமான விண்ணப்பதாரிகள் கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு வருகின்றனர் என உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்படி குடும்பத்துடன் வெளிநாடு செல்ல விரும்பும் 23 ஆயிரம் பேருக்கு இதுவரை (20ஆம் பக்கம் பார்க்க)

## பாண்விலை 6 ரூபாவால் இன்றுமுதல் குறைப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.31

குடாநாட்டில் 450 கிராம் நிறையுடைய பாணின் விலை இன்று முதல் 6 ரூபாவால் குறைக்கப்படுவதாக யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் 43 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த பாண் இனி 37 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆட்சிமாற்றத்துக்கு வழிகாண்போம்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,
ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன்,
டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் பொதுவேட்பாளர்
சரத் பொன்சேகாவுடன் யாழ். மரவட்ட மக்களை
02.01.2010 சனிக்கிழமையன்று யாழ் வீரசிங்கம்
மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்குச் சந்திக்கவுள்ளனர்

அனைவரும் வருக ஆட்சிமாற்றம் காண்க !

(சி-56356)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டில் இன்றுமுதல் பாண் விலை 37 ரூபா

யாழ்ப்பாணம்.டிசெ.31

குடாநாட்டில் 450 கிராம் நிறையுடைய பாணின் விலை இன்று முதல் 6 ரூபாவால் குறைக்கப்படுவதாக யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் 43 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த பாண் இனி 37 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிறீம்பணிஸ் (சோடி-150கிராம்) 24 ரூபாவிலிருந்து 22 ரூபாவாகவும், ரீ பணிஸ் (சோடி 130 கிராம்) 22 ரூபாவிலிருந்து 20 ரூபாவாகவும், கொம்புபணிஸ் (70கிராம்) 14 ரூபாவிலிருந்து 12 ரூபாவாகவும், அடைக்கேக் 18 ரூபாவிலிருந்து 17 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ஒ-1)

# முறிகண்டிப் பிள்ளையார் ஆலய புனரமைப்பை பார்வையிட்டார் அமைச்சர் டக்ளஸ்

## ஏ9 வீதி திருத்தப் பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம்.டிசெ.31

சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பகுதிக்கு விஜயம் செய்தார்.

அன்றைய தினம் அமைச்சர் ஏ9 வீதியைப் புனரமைப்பு செய்யும் பணிகளை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் ஆளுநர் மேஜர் ஜி.ஏ. சந்திரசிறியும் கலந்து கொண்டார்.

அதே நாளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று, ஆலய புனர்நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்டார். தொடர்ந்து ஆலயப் பூசகர் மற்றும் அப்பகுதியில் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர் மற்றும் அப்பகுதிக்கான கிராம சேவையாளர்கள் உட்பட பலருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது முறிகண்டிப் பிள்ளையார் ஆலய புனரமைப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் கோயிலை அண்டிய பகுதிகளில் சுத்தம் சுகாதாரம் பேணப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்திக் கூறினார்

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருடனும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தலைவருடனும் இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மேற்படி ஆலய புனரமைப்பு மற்றும் நிதியுதவிகள் வழங்குவது தொடர்பில் அமைச்சர் உரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# கிழக்கில் மேலும் 3 ரயில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.31.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூர் ரயில் சேவையை மேம்படுத்துவதற்காக மேலும் மூன்று ரயில்பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த உள்ளதாகப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

ஏற்கனவே மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் இரு உள்ளூர் ரயில்பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், விரைவில் வாழைச்சேனை உள்ளூர் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் ரயில்வே பொது முகாமையாளர் பி.பி. விஜேசேகர தெரிவித்தார்.

கிழக்கில் ரயில் சேவையை மேம்படுத்துவதற்காக ஐந்து ரயில் பஸ் சேவைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் கூறினார். வாழைச்சேனை உள்ளூர் ரயில் பஸ் சேவையில் ஈடுபடுத்துவதற்காக ரயில் பஸ் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இரு ரயில் பஸ்கள் கந்தளாய் மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

போர் நெருக்கடி காரணமாக கிழக்குப் பிராந்தியத்தில் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டு இருந்ததோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் ஸ்தம்பிதமடைந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ், புலிகளின் பிடியில் இருந்து கிழக்கு மாகாணம் முழுமையாக மீட்கப்பட்டதை அடுத்து கிழக்கில் இயல்பு வாழ்க்கை முழுமையாக வழமைக்குத் திரும்பியுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


A/L தமிழ்க் கருத்தரங்கு

வெள்ளி 2010 - 7.30 - 9.00
2011-11.00 2012 - 9.00 - 11.00

நாக.தமிழிந்திரன்

2012 புதிய பிரிவு (சனி) -10.00
முதல் வகுப்பில் Book Free

T.E.C & Arts Academi
மக்கள் வங்கியருகில்-யாழ்


# ஆருத்ரா அபிஷேகம்

யாழ்.இந்துப் பேரவை ஏற்பாட்டில் பலாலி வீதி, ஸ்ரீ நடராஜ பெருமான் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு ஆருத்ரா அபிஷேகம் ஆரம்பமாகி மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகம் நிறைவு பெறும்.

அதனைத் தொடர்ந்து திரு வெம்பாவை பாடல் ஒதுதலுடன் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமான் தரிசனம் நடை பெறும். பின் வீதி உலா, பஞ்ச புராணப்பாராயணம் இடீம்பெறும். (ஒ)

## மாணவர்களுக்கு பரிசில் வழங்கல்

ஐந்தாம் ஆண்டு புலமைமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தேசிய சேமிப்பு வங்கி அஞ்சல் கிளையில் 'ஹப்பன' கணக்குகள் வைத்துள்ள மாணவர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வு தேச்சிய சேமிப்பு வங்கியின் வட மாகாண அஞ்சல் வங்கிக்கிளை வளாகத்தில் முகாமையாளர் இ.ராஜமகேந்திர ... ளது. (ஒ-7)


31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

மண்ணுலகில் 08 ★ 08 ★ 1930



விண்ணுலகில் 01 ★ 12 ★ 2009

அமரர் திருமதி மனோன்மணி நாகலிங்கம்

ஆணிப்பொன் முத்தாய் அமுதாய் அமைந்தாய்
பேணி எமை வளர்த்தாய் பெருமை பல சேர்த்தாய்
ஏணியதாய் நின்றாய் ஏற்றமுறச் செய்தாய்
வேணியான் பதம்சேர்ந்தாய்நீ எம் மருந்தாய்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சங்குவேலி தெற்கு.
மானிப்பாய். (சி/563593) குடும்பத்தினர்.


# தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்

## கிராமத் தெரிவு - 2009

### கிளிநொச்சி மாவட்டம் கட்டம்-V-II

உலக வங்கியின் நிதியுதவியுடன் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யுத்தம் காரணமாக வீடுகள் அழிவுற்றதும் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதுமான கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளிலே அழிவுற்ற வீடு மீள்நிர்மாண நடவடிக்கைகளுக்காக பின்வரும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

| இல. | பிரதேச செயலர் பிரிவு | கிராம சேவையாளர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 1. | கரைச்சி | ஜெயந்திநகர் | ஜெயந்திநகர் வடக்கு |
| 2. | | | ஜெயந்தி நகர் தெற்கு |
| 3. | | உதயநகர் மேற்கு | உதயநகர் மேற்கு |
| 4. | | | உதயநகர் வடக்கு |
| 5. | | உருத்திரபுரம் கிழக்கு | உருத்திரபுரம் D -08 |
| 6. | | | ஆனந்தம்பண்ணை |
| 7. | | | இரத்தினம் பண்ணை |
| 8. | | பெரிய பரந்தன் | பெரியபரந்தன் |
| 9. | | | D-5,D-6, D-7 |
| 10. | | உதயநகர் கிழக்கு | உதயநகர் கிழக்கு |
| 11. | | | உதயநகர் தெற்கு |
| 12. | | கனகபுரம் | கனகபுரம் |
| 13. | | | கனகபுரக்குளம் |
| 14. | | | கந்தன்குளம் |
| 15. | | திருநகர் வடக்கு | திருநகர் வடக்கு |
| 16. | | திருநகர் தெற்கு | திருநகர் தெற்கு |
| 17. | பூநகரி | பள்ளிக்குடா | பள்ளிக்குடா |
| 18. | | | மணற்காடு |
| 19. | | | செம்பன்குன்று |
| 20. | | | மணற்காடு |
| 21. | | | தெளிகரை |
| 22. | | | 4 ஆம் கட்டை |
| 23. | | | பள்ளாய் |
| 24. | | | நெடுங்குளம் |
| 25. | | | பத்தினிப்பாய் |
| 26. | | | அரசபுரம் |
| 27. | | | செக்காலை |
| 28. | | | கருமாரி |
| 29. | | | பளுவில் |
| 30. | | மட்டுவில்நாடுமேற்கு, தெற்கு, | வாடியடி மேற்கு |
| 31. | | | விளாத்தி |
| 32. | | | கரிகொட்டுக்குளம் |
| 33. | | | நகரக்குளம் |
| 34. | | | நல்லதண்ணீர்க்குளம் |
| 35. | | | உயரிப்பிட்டி |
| 36. | | | நெற்புலவு |
| 37. | பூநகரி | பரமன்கிராய் | பரமன்கிராய் |
| 38. | | | வில்லடி மேற்கு |
| 39. | | | வெட்டுக்காடு |
| 40 | | ஜெயபுரம் தெற்கு | ஜெயபுரம் தெற்கு |
| 41 | | | பண்டிவெட்டி |
| 42. | | பல்லவராயன்கட்டு | பல்லவராயன்கட்டு |
| 43. | | | அமையபுரம் |
| 44. | | | சோலை |
| 45. | | | சோலைநிலா கிராமம் |
| 46. | | | மாதிரிக்கிராமம் |
| 47. | | கிராஞ்சி | கிராஞ்சி |
| 48. | | | மொட்டையன்குளம் |
| 49. | | இரணைதீவு | இரணை தீவு |
| 50. | | | பாலை தீவு |
| 51. | | | சின்னத் தீவு |
| 52. | | ஜெயபுரம் வடக்கு | தும்புறுவில் |
| 53. | | | ஜெயபுரம் வடக்கு |
| 54. | | | திக்குவில் |
| 55. | | | சுண்ணாவில் |
| 56. | | பொன்னாவெளி | வேரவில் |
| 57. | | | வலைப்பாடு |
| 58. | | | பொன்னாவெளி |
| 59. | | | பாலாவி |
| 60. | | முழங்காவில் | முழங்காவில் |
| 61. | | | கரியர்லை நாகபடுவான் |
| 62. | | | 1000 வீட்டுத்திட்டம் |
| 63. | | | விநாயகபுரம் |
| 64. | | | இராசபுரம் |
| 65. | | | கதிரவில்குளம் |
| 66. | | | இரணைமாதாநகர் |
| 67. | | | 31 ஆம் கட்டை |
| 68. | | கரியாலை நாகபடுவான் | கரியாலை நாகபடுவான் |
| 69. | | | கரியாலை நாகபடுவான்கிழக்கு |
| 70. | | | குமுழமுனை |
| 71. | | நாச்சிக்குடா | நாச்சிக்குடா |
| 72. | | | கரடிக்குன்று |
| 73. | | நல்லூர் | காமிப்புலம் |
| 74 | | | நல்லூர் |
| 75. | | | முட்கொம்பன் |
| 76. | | | நீரடம்பன் |
| 77. | | | யட்டன் |
| 78. | | | குமரேசன் தாழ்வு |
| 79. | | | மிதுசன் குடியிருப்பு |
| 80. | | | தியாகம் குடியிருப்பு |
| 81 | | | ஐயனார்புரம் |
| 82. | | | பல்லவராயன்கட்டு |
| 83. | | ஆலங்கேணி | ஆலங்கேணி |
| 84. | | | பூக்குளம் |
| 85. | | | முழையடம்பன் |
| 86 | | | புறக்குளம் |

இக்கிராமத்தெரிவு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்புபவர்கள் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் தங்களது ஆட்சேபனைகளை எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி ஆர். கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி/563590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கழிந்து போகும் துன்பியல் ஆண்டு

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகக் கோரமான - போரியல் பேரழிவுகளையும் நாசங்களையும் தந்த 2009 ஆம் ஆண்டு இன்றுடன் கழிகின்றது. வரலாற்றுப் பதிவில் ஈழத் தமிழர்களின் ஆன்மாவில் நிரந்தர வடுவை ஆழமாகப் பொறித்துவிட்டு நீங்கும் கொடூர ஆண்டாக இது நம்மை விட்டு இன்றுடன் விடைபெறுகின்றது.

அத்துடன் இரண்டாவது மிலேனியத்தின் முடிவின் பின் முதலாவது தசாப்தத்தின் கடைசி நாளும் இன்றுதான். 2000 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம், இன்று 2009 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான இந்த தசாப்த காலம் தமிழர்கள் வாழ்வில் ஏற்றமும் இறக்கமுமாக, நம்பிக்கையையும், அவநம்பிக்கையையும் தந்து பயனற்றுக் கழிவது கண்கூடு.

இந்தத் தசாப்த காலம் புதிய மிலேனியத்தோடு பிறந்தபோது தமிழர் தேசம் பெரும் போர் எனும் அக்கினிச் சுவாலைக்குள் சிக்குண்டு கிடந்தது. எனினும், உரிமைத் தாகம் என்ற உறுதியும், நம்பிக்கையும், திடசங்கற்பமும், பற்றுறுதியும் தமிழர்தம் மனதில் அன்று நிறைந்திருந்தன - அந்தப் போரியல் நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் கூட.

எனினும், அந்தத் தசாப்தத்தின் மூன்றாவது ஆண்டு பிறந்தபோது - 2002 ஆம் ஆண்டின் தோற்றத்தோடு - அமைதியுடன் கூடிய கௌரவ வாழ்வுக்கான வாய்ப்புக்கு, சாத்தியத்துக்கு ஒரு சிறிய ஒளிக்கீற்று, சமாதான முயற்சியின் பெயரால் தோற்றியபோது ஈழத் தமிழர்கள் நன்கு மகிழ்ந்துதான் போனார்கள்.

ஆனால் அந்த சமரச எத்தனங்களும், சமாதான முயற்சிகளும் 2006 மத்தியுடன் கானல்நீராக மாறியபோது ஈழத் தமிழர்களின் வாழ்வு பேரவலமாயிற்று; பேரழிவே முடிவு என்றாயிற்று.

தமிழ்த் தேசியம் எழுச்சி கொண்டு, வளர்ச்சி பெற்று, சுயநிர்ணயத்துக்கான ஆயுதப் போராட்டமாக வடிவம் எடுத்த தமிழ் மக்களின் புரட்சிகரமான அரசியல் வரலாற்றை முற்றாகப் புரட்டிப்போட்டு, அடிமை வாழ்வே இனி சாசுவதம் என்ற நிலையை நிஜமாக்கி, யதார்த்தபூர்வமாக்கிவிட்டு எம்மை விட்டுப் போகிறது மிலேனியம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தத்தின் கடைசி ஆண்டு.

இந்தத் தசாப்தம் பிறந்தபோது தமிழர் தாயகம் பெரும் போர் என்ற கொடூர அக்கினிச் சுவாலைக்குள் சிக்குண்டு கிடந்த போதிலும், அந்த அனர்த்தங்களை எதிர்கொள்ளும் உறுதி அச்சமயம் தமிழர் தாயகத்துக்குத் திடமாகவே இருந்தது.

ஆனால் இன்று, அந்தத் தசாப்தத்தின் முடிவில் போரரக்கனின் கொடூரம் தன் கைவரிசையைக் காட்டி ஓய்ந்துவிட்டது. யுத்தம் என்ற நாசகாரத் தீ தமிழர் தாயகம் முழுவதையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கிவிட்டு அணையத் தொடங்கிவிட்டது. அந்தக் கொடூர நெருப்பில் ஈழத் தமிழர்களின் உரிமை வாழ்வுக்கான உயிர்ப்பும், துடிப்பும், தளராத வேணவாவும், எழுச்சித் திறனும் கூடத் தீய்ந்து அடங்கி, நீறு பூத்துப் போயிருப்பதுதான் வேதனைக்குரிய - மிகக் கவலைக்குரிய - விடயமாகும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். 2010 என்ற புத்தாண்டு நாளை பிறந்தாலும் தமிழர் தம் வாழ்வில் ஆண்டின் தைப்பிறப்பு இன்னும் 14 நாள்கள் கழித்து, தைப்பொங்கல் தினத்தன்றே வருகின்றது.

புதிய ஆண்டின் தை பிறக்கும் போதாவது - வழி பிறக்காதா என்ற ஏக்கத்துடன், வழமைபோல வழிமேல் விழி வைத்துத் தமிழர்கள் காத்திருக்கின்றார்கள்.

அதுவும் முன்னெப்போதும் வரலாற்றில் சந்தித்தேயிராத பேரழிவுகளையும், போரழிவுகளையும், பேரவலங்களையும் சந்தித்து அதன் துன்பச் சுமைகளில் மூழ்கியபடி பற்றுக்கோடு கிடைக்காதா என்று பார்த்திருக்கின்றார்கள் அவர்கள்.

தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவன் ஒரு சிறு துரும்பைப் பற்றியாவது மேலெழுந்து நீரில் மிதந்து மூச்சுக் காற்றை உள்ளெடுக்க முயல்வது போல, இன்று பற்றுக்கோடு தேடிப்பார்த்துத் துடித்து ஏங்கியிருக்கும் தமிழினத்துக்கு தை பிறந்த கையோடு வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தல் என்ற சிறிய வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

இந்தத் தேர்தலும் அதன் முடிவும் தமிழர்களுக்கு நிம்மதியான - நிலையான, நிரந்தரமான அமைதிமிக்க - ஒரு வாழ்வியல் சந்தர்ப்பத்தைத் தந்துவிடப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெளிவான விடயம்தான்.

ஆனால், நீருக்குள் மூழ்கி, சுவாசிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவனுக்கு, நீரின் மேல் வந்து மூச்சு விடுவதற்கு ஓர் இடைக்கால சந்தர்ப்பத்தையாவது - வாய்ப்பையாவது - தரக்கூடிய விளைவை இந்தத் தேர்தலும் அதன் முடிவும் வழங்கக்கூடும்.

போரழிவில் துவண்டு கிடக்கும் தமிழினத்துக்கு எதிர்காலத்தைத் துணிவுடன் எதிர்கொள்வதற்கான வாய்ப்பைப் பெறும் ஒரு பொருத்தமான சந்தர்ப்பமாக இத்தேர்தலைப் பயன்படுத்துவதுதான் உசிதமானது; தந்திரோபாயமானது.

அதைக்கூடச் செய்ய விடாது, குழப்பும் விதத்தில் தமிழர்களின் தலைமைகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சில தற்குறிகள், கோடரிக் காம்புகள் செயற்படுகின்றமை, போர் எனும் பெரும் நெருப்பில் தீய்ந்து போய்க் கிடக்கும் தமிழினத்தைத் தொடர்ந்தும் நிரந்தர அடிமைத் தனத்துக்குள் ஆழ்த்தும் செயற்பாட்டுக்கே உதவும். இதை அவர்கள் புரிந்துகொண்டு திருந்துவார்களா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.............!

# சனியன்று யாழ்.வரும் பொன்சேகா குழுவினர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச ஏற்பாடு

## ரவூப் ஹக்கீமும் இவர்களுடன் வருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் சனிக்கிழமை வருகை தரும் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா குழுவினர் இங்கு பல் வேறு தரப்புக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரத்பொன்சேகாவுடன் யாழ். வரும் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூம் ஹக்கீமும் இடம்பெறுவுள்ளார்.

இவர்களுடன் ஐ.தே.க மற்றும் சில கட்சிகளின் முக்கிய பிரமுகர்களும் யாழ். வருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை யாழ்.வரும் சரத் பொன்சேகா குழுவினர் காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று விசேட வழிபாட்டில் ஈடுபடுவார்கள். பின்னர் முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்துக்குச் செல்லும் அவர்கள் அங்கு ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள்.

பின்னர் யாழ் . பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் அவர்கள் அங்கு பல்கலைக்கழக சமூகத்தினரையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்டப் பிரதம அமைப்பாளர் ஏ.ஏ சத்தியேந்திரா உதயனுக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பொது மக்களையும் இந்தக் குழுவினர் சந்திப்பர். இதன் பின்னர் மாலையில் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் இக்குழுவினர் நடத்துவர் என்றும் அவர் மேலும் கூறினார். (50-224)

# சரத்பொன்சேகாவின் தேர்தல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினம் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் பிரசார அலுவலகம் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.நகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த அலுவலகம் யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் திறந்து வைக்கப்படும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் ஏ.ஏ சத்தியேந்திரா தெரிவித்தார்.

அன்றைய தினம் யாழ். வரும் ஜனாதிபதி வேட்பாளர் சரத்பொன்சேகா இந்த அலுவலகத்தைத் திறந்து வைப்பார்.

இதனைவிட மற்றுமொரு அலுவலகத்தை நல்லூர் பகுதியில் திறப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சத்தியேந்திரா மேலும் தெரிவித்தார். (50-224)

# ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று பஞ்சரத பவனி

காரைநகர்,டிசெ.31

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவத்தில் பஞ்சரதபவனி இன்று வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று காலை 5 மணிக்கு மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும். அடுத்து காலை 9 மணிக்கு நடராஜப்பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளிப் பஞ்சரதப் பவனி இடம்பெறும்.

அன்றைய தினம் நள்ளிரவு 2 மணி தொடக்கம் நடேசர் அபிஷேகமும் அன்று அதிகாலை 6 மணிக்கு நடேசர் ஆருத்திரா தரிசனமும் பிற்பகல் 3 மணிக்குத் திருவூஞ்சல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (சிறப்பிதழ் 10ஆம், 11ஆம் பக்கங்களில்)

# யாழ்.ஆஸ்பத்திரி ஆய்வுகூட நெருக்கடிக்குத் தீர்வுகாண 2 கோடி ரூபா பொருள்கள் கொள்வனவு செய்ய ஏற்பாடு

## பணிப்பாளர் தேவநேசன் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.போதனா வைத்தியசாலையில் பரிசோதனைகள் மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை நீக்கும் நோக்குடன் 2 கோடி ரூபா செலவில் ஆய்வுகூடப் பொருள்கள் எடுத்து வரப்படவுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏ.தேவநேசன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் மற்றும் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை பெறச் செல்கின்ற நோயாளர்கள் இரத்தப் பரிசோதனை, சலப்பரிசோதனை என்பவற்றை வெளியில் தனியார் வைத்தியசாலைகளில் 300 ரூபா பணம் செலுத்தி மேற்கொள்கிறார்கள். இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொதுமக்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏ.தேவநேசனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.போதனாவைத்தியசாலையில் கடந்த இரண்டு மாதங்களாகச் சிகிச்சை பெற வருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது.

அதிகரித்துவரும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப இரத்தப் பரிசோதனை, சலப்பரிசோதனை என்பவற்றை மேற்கொள்வதற்கு ஆய்வுகூடத்தில் பொருள்கள் போதுமானதாக இல்லை.

யாழ்.மாவட்டத்திலுள்ள அநேகமான ஆதார வைத்தியசாலைகளில் ஆய்வுகூட வசதிகள் இன்மையால் அங்கிருந்தும் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால் நோயாளர்களின் எண்ணிக்கை வழமையை விட அதிகமாகியுள்ளது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் எம்மால் முடிந்தவரைக்கும் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களுக்கு தற்சமயம் இரத்தப் பரிசோதனை, சலப்பரிசோதனை என்பவற்றை வைத்தியசாலையில் செய்து வருகின்றோம்.

இதுதவிர வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களுக்குத்தான் இரத்தம், சலம் ஆகிய பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆய்வுகூடத்திற்குச் சுமார் 2 கோடி ரூபா செலவில் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர். (1-9)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 17 | 01.01.2010 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.இ.11.48 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | காலை 08.27 வரை |
| சுபநேரம்: | 06.29-07.59 வரை |
| ராகுகாலம்: | 10.59-12.29 வரை |

# இந்து ஆலயங்கள், நிறுவனங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்க மத்தியஸ்தர் சபை

யாழ்ப்பாணம்,டிசெ.31

இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் முகமாக மத்தியஸ்தர் சபை ஒன்றை அமைப்பதற்கு அகில இலங்கை இந்துமா மன்றம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்து ஆலயங்களில் அல்லது இந்து நிறுவனங்களில் ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால் அதில் சம் பந்தப்பட்டவர்கள் ஒருமனதாக அந்தப் பிணக்குகள் விடயத்தில் மத்தியஸ்தம் செய்து தீர்ப்பு வழங்குமாறு இந்துமாமன்ற மத்தியஸ்த சபையிடம் விண்ணப்பிக்கலாம்.

அந்த விண்ணப்பங்கள் இந்து மாமன்ற மத்தியஸ்த சபையின் விதிகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

அவ்வாறு மத்தியஸ்தம் செய்யப்பட்டு வழங்கப்படும் தீர்ப்புகள் 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க மத்தியஸ்த சட்டப்படி நீதிமன்றங்களால் அமுல்படுத்தமுடியும்.

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்புபவர்கள் ''அகில இலங்கை இந்துமாமன்றம், இல, 91/5 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-02'' எனும் முகவரி ஊடாகத் தொடர்பு கொள்ளவும் என்றுள்ளது. (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லைப்பிட்டி, பொன்னாலையில் படையினரின் சோதனை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

தீவுப்பகுதிகளுக்குச் செல்பவர்களைச் சோதனை செய்வதற்காக அல்லைப்பிட்டி மற்றும் பொன்னாலையில் அமைக்கப்பட்டிருந்த சோதனை நிலையங்களின் செயற்பாடுகள் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

தீவகத்துக்குச் செல்பவர்கள் பண்ணைச் சந்தியிலும் அல்லைப்பிட்டிச் சந்தியிலும் சோதனைகள் மற்றும் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை 1990 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையில் இருந்து வந்தது.

நேற்றுமுதல் அல்லைப்பிட்டிச் சந்தியில் சோதனைகள், பதிவுகள் போன்றவை நிறுத்தப்பட்டுள்ளன. எனினும் பண்ணைச் சந்தியில் சோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டது தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப் பகுதிகளுக்குச் செல்லும் அல்லைப்பிட்டி மற்றும் பொன்னாலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த சகல சோதனை நடவடிக்கைகளும் முற்றாக நீக்கப்பட்டுள்ளதுடன், தீவுப் பகுதிக்கான கடற்தொழில் 'பாஸ்' அனுமதியும் அகற்றப்பட் டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளால் யாழ். குடாநாட்டில் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படாதிருக்கும் பிரதேசங்கள், பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் தடைகள் மற்றும் வீதிச் சோதனைகள் உட்பட பொதுமக்களுக்கு இடையூறாகவுள்ள காவலரண்கள் என்பன அண்மைக் காலத்தில் கட்டம் கட்டமாக அகற்றப்பட்டு வருகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸர சமரசேகர, வடபிராந்திய கடற்படைக் கட்டளைத் தளபதி ரியஸ் அட்மிரல் ஏ.எஸ்.ஏ. கொலம்பகே மற்றும் அதிகாரிகளுடன் தொடர்ந்து நடத்திவரும் பேச்சு வார்த்தைகளை அடுத்தே இந்தத் தடைகள் நீக்கப் பட்டு வருகின்றன - என்றுள்ளது.

(ஓ-01-267)

## ஈழத்துச் சிதம்பர தேர், தீர்த்த விழாக்கள் இலங்கை வானொலியில் நேரடி அஞ்சல்

யாழ்ப்பாணம், டிசெ.31

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத் தேர், தீர்த்தத் திருவிழாக்களின் நேரடி அஞ்சல் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையில் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள தேர்த்திருவிழா காலை 7 மணியிலிருந்து 8.30 மணி வரையும், நாளை நடைபெறவுள்ள தீர்த்தத்திருவிழா நிகழ்வுகளை காலை 6.15இல் இருந்து 7 மணி வரையும் தமிழ்ச் சேவை, தென்றல் மற்றும் www.slbc.lk என்ற இணையத் தளத்தினூடாகவும் உலகெங்கும் வாழும் இந்துமக்கள் கேட்பதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்ச் சேவை மேற்கொண்டுள்ள தென தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் பணிப்புரைக்கு அமையவும் கூட்டுத்தாபன ஆலோசகர் வீ.ஏ.திருஞானசுந்தரத்தின் ஆலோசனைப் படியும் மேற்படி சேவை வழங்கப்படுகின்றது. இந்த நேரடி நிகழ்வுகளை தமிழ்ச் சேவையின் அறிவிப்பாளர் மு.ரவீந்திரன் தொகுத்து வழங்க தயாரிப்புப் பணிகளை ஜீ.சிவசங்கர் மேற்கொள்வார்.

## ஆலயத் திருப்பணிக்கு 2 இலட்சம் ரூபா நிதி

சுழிபுரம்,டிசெ.31.

தொல்புரம் துரையன்வளவுப் பிள்ளையார் ஆலயத் திருப்பணிக்கு இந்துசமய விவகார அமைச்சு இரண்டு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இந்நிதியைக் கொண்டு கோயில் உள் பிரகார மண்டபம் உள்வீதி வேலைகள் நடைபெறவுள்ளன. மேலும் ஊர் மக்கள் உதவியைப் பெற்றும் இத் திருப்பணிகளை ஆலய பரிபாலன சபையினர் நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளனர்.(ஓ-28)


### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**பாண், பணிஸ் வகைகளின் புதிய விலைகள்**

நாளை (01.01.2010) வெள்ளிக்கிழமை முதல் பாண், பணிஸ் வகைகளின் புதிய விலைகளை விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

*01 றாத்தல் பாண் (450 கிராம்) 37.00*
*01 சோடி கிறீம் பணிஸ் 22.00*
*01 சோடி ரீ பணிஸ் 20.00*
*01 சங்கிலி பணிஸ் 20.00*
*01 கொம்பு பணிஸ் 12.00*
*01 அடை கேக் 17.00*

(அரச அதிபரின் பணிப்புக்கு அமைவாக)

அனைத்து அங்கத்தவர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் , பாவனையாளர்கள் யாவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ந.நவரஞ்சன் செயலாளர்,
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(சி/563596)



### புதுவருட விழிப்பிரவு ஆராதனை

தேவ மகிமையின் ஆண்டு Year of God's Glory

"உன்னை அதிசயங்களைக்காணப் பண்ணுவேன். மீகா.7.15"

பிரியமானவர்களே, பிறக்கப்போகிற 2010 ஆம் ஆண்டிற்குள் தேவனுடைய ஆசீர்வாதத்தோடு கடந்துபோக விரும்பு கிறீர்களா? எங்களோடு நீங்களும் தேவனை ஆராதித்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கொக்குவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் விழித்திருப்பு ஆராதனை இடம்பெறும். ஆராதனையின் முடிவில் குடும்ப ஆசீர்வாத யெபத்தோடு வாக்குத்தத்தம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**புதுவருடச் சிறப்புச் செய்தி**

போதகர் L.J. மத்தியூஸ் (கொக்குவில்)
போதகர் S. ஜெனோ (மானிப்பாய்)

இடம் :- கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்.
இல. 89, பிறவுண் வீதி, கொக்குவில்/உடுவில் வீதி, மானிப்பாய்.
காலம் :- இன்று (31.12.2009) வியாழக்கிழமை.
நேரம் :- இரவு 10 மணிக்கு

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

பிறக்கும் புதிய வருடம் உங்கள் யாவருக்கும் தேவ மகிமையின் ஆண்டாக இருப்பதாக என வாழ்த்துகிறோம்.

-கல்வாரி குடும்பம்-

(சி/563592)

**புதுவருட காலை ஆராதனை**
கொக்குவில், மானிப்பாய், அளவெட்டி ஆகிய இடங்களில் காலை 8.30 மணிக்கு. அன்புடன் அழைக்கின்றோம்.


## மரண அறிவித்தல்கள்

### மகேந்திரலிங்கம் டிசியந்தன் (அண்ணா)



பிளாக் றோட், சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரலிங்கம் டிசியந்தன் 19.12.2009 சனிக்கிழமை டுபாயில் அகால மரணமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கராச்சி இந்து மயானத்திற்கு எடுதுச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளாக் வீதி, சங்கானை. (சி/563597) தகவல்: குடும்பத்தினர்.

### மயிலு கந்தையா



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயிலு கந்தையா நேற்று (30.12.2009) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலு- இலட்சுமி தம்பதியினரின் பாசமிகு மகனும், புஸ்பமணி அவர்களின் அன்புக் கணவரும், புஸ்பராசா (பிரான்ஸ்), கனகராசா (பிரான்ஸ்), விஜயராணி (ஆனைக்கோட்டை), விமலராணி (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னையா, காலஞ்சென்ற மகாலிங்கம் (ஆனைக்கோட்டை) அவர்களின் அன்புச் சகோதரனும், சிவானந்தராசா (ஆனைக் கோட்டை), தவராசா (சண்டிலிப்பாய்), சந்திரா (பிரான்ஸ்), சுபாசினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (92051)

தகவல்: புஸ்பராணி (மனைவி).

### ஆறுமுகம் கதிரவேலு



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோயிலாமனை, கொடிகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கதிரவேலு (28.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - பாரிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் சகோதரனும், யோகம்மாவின் மைத்துனரும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், மகேந்திரன், தெய்வேந்திரம் (லண்டன்), இராசதுரை, வல்லிபுரநாதன் (சுவிஸ்), கந்தசாமி (சுவிஸ்), குமாரவேலு (லண்டன்), சிறீதரன் (லண்டன்), அமரர் பரமானந்தன், அமிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாசன், வசந்தா (சுவீடன்), சிவதாசன் (சுவிஸ்), நளினி (அமரர்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், மீனாட்சி, சுந்தரகுமாரி, ஞானமணி (அமரர்), லோகேஸ்வரி, சிவலோகநாயகி, மீனவேணி, ராஜேஸ்வரி, அமிர்தலிங்கம் (திருநெல்வேலி - குமார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தினேஷ் (அமரர்), பிரதீபா, கருணா, கோடீஸ்வரன், சரிதா, பிரசாந், திருலோகன், சுதாகரன், ரஜனி, சர்மினி, கௌதமி, ஜானுசா, கௌசல்யா, நிலானி, நிலக்ஷன், நிசானி, கிருத்திகன், குணாளன், விஷாலினி, கிஷாந், யதுசனா, தர்மினா, திலக்ஷனா, கோபிகா, ஜனுவிந், வசந், சுரேகா, மிலேனியா, பூமிகா, மதுலிகா ஆகியோரின் பேரனும், தியானா, லக்ஷியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனகன் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயிலாமனை,
கொடிகாமம். (சி/563594)

தகவல் குடும்பத்தினர்.


**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
புதிய கல்வி ஆண்டு 2010
Gr 1 முதல் O/L வரை
**Gr 10 & 11 T/m**
MATHS: F.அருள்வேள்
SCIENCE. T.ராகவ்
TAMIL-G.ஜனகன்
HISTORY. GeoGRAPHY ] A.ராஜு
ENGLISH. ENG.LIT ] K.ஜெயக்குமார்
COMMERCE.T.நிஷாந்
CIVICS.J.கணேஸ்
I.C.T.-D.பிரசாந்
Gr6 TO 11 Eng. med.
MATHS: W. NANTHY F.ARULCHELVAN.
SCIENCE- S. GOBINATH
HISTORY - S. JEENSIYA
✱ புலமைப்பரிசில் 5
J.கணேஸ்



**NEC**
Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
A/L 2012 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் 02-01-2010
சனி காலை 8.00 மணி

**வர்த்தகப்பிரிவு**
கணக்கீடு : P. பகீரதன் பொருளியல் : NB. கஜீதரன்
வணிகக்கல்வி : S. யசோ

**கலைப்பிரிவு**
தமிழ் : A.K. கீர்த்திராஜன் அளவையியல் : P. கமல்
பொருளியல் : NB. கஜீதரன் புவியியல் : S.R. பாலா
இந்து. நாகரீ : S. ஜெயக்குமார் வரலாறு : S. சத்தி
அரசியல் : A.K. றொபின்சன் கிறிஸ்தவம் : S.K யூட்
நாடகஅரங்கியல்: N.மயூரன் விவசாயம் : S. ஜெயந்தன்
புள்ளிவிபர/கணிதம் : T. தவசேகர் English : S. Jaisan

**கணித உயிரியல் பிரிவு**
இரசாயனவியல் : S. [illegible] பௌதிகவியல் : [illegible]
இணைந்தகணிதம் : P. [illegible]
உயிரியல : V.A ஞானேந்திரன்


## மரண அறிவித்தல்கள்

### செல்வி கஸ்தூரி அருளானந்தம்



(யாழ்.இந்து மகளிர் கல்லூரி - தரம் 6)

யமுனா வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருளானந்தம் கஸ்தூரி நேற்று (30.12.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தம்- சுசிலாமணிதேவி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நி.முகவரி: 6 ஆம் வட்டாரம், மண்டைதீவு.
த. முகவரி: யமுனா வீதி, நல்லூர். (92052)

தகவல்: குடும்பத்தினர்.

### செல்வி யசோபாரதி தில்லையம்பலம்

(கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யசோபாரதி தில்லையம்பலம் (28.12. 2009) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லையம்பலம்-புவனேஸ்வரி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும், புவிபாரதி (U.K), ஜயபாரதி (ஆசிரியை, கரவெட்டி ஞானாசிரியார் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜியவிந்தனின் மைத்துனியும் தருணின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று மட்டுவில் நேரியதூது இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.தில்லையம்பலம் (தந்தை)
(ஓய்வுபெற்ற கணக்கு லிகிதர், கல்வியலயம் - சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு,
மட்டுவில். (92000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'சிறுவர் மகிழ் களம்' நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கே.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வோதயம் அமைப்பின் இணைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரு படங்களிலும், சிறுவர்களின் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
(படங்கள்: சுகந்தன், நந்தன்)

# யாழ்.மக்களின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மேலும் 7மின் பிறப்பாக்கிகள் வந்துசேர்ந்தன

## ஒவ்வொன்றும் ஒரு மெகாவாற்ஸ் உற்பத்தித் திறன் கொண்டவை

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.மாவட்ட மக்களின் மின்சாரத் தேவையினைப் பூர்த்தி செய்யும் முகமாகப் 7புதிய மின்பிறப்பாக்கிகள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த மின் பிறப்பாக்கிகளைப் பொருத்தும் பணிகள் தற்போது சுன்னாகம் மின் நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன.

1250 கிலோ வாற்ஸ் வலுவுடைய ஒவ்வொரு மின்பிறப்பாக்கி மூலமும் ஒரு மெகா வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும். எனவே இந்த மின் பிறப்பாக்கிகள் மூலம் 7 மெகா வாட்ஸ் மின்சாரம் பெறக்கூடியதாக இருக்கும்.

இதன் மூலம் சுன்னாகம் மின்நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கிகளில் ஏற்படும் கோளாறுகளுக்கு மாற்றீடாக இந்தப் புதிய மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தின் சில பகுதிகளில் அவ்வப்போது இடம்பெற்றுவந்த மின் வெட்டினை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை மின்சாரசபையின் தலைவருடன் நடத்திய தொடர் பேச்சுவார்த்தையின் பயனாகவே இந்த மின்பிறப்பாக்கிகள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதேவேளை, ஏற்கனவே இவ்வாறு 03 புதிய மின்பிறப்பாக்கிகள் எடுத்துவரப்பட்டு அவை சுன்னாகம் மின்நிலையத்தில் இயங்கி வருகின்றன. இப்போது வந்துள்ள 7 புதிய மின்பிறப்பாக்கிகளிலிருந்தும் பெறப்படும் மின்சாரம் யாழ்.மின்வலை அமைப்பில் விரைவில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது - என்றார். (50-14)

# ஜி.சீ.ஈ. சாதாரண விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள் இன்று ஆரம்பம்

அச்சுவேலி, டிசெ.31

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் பொதிகள் தரைவழியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இதனையடுத்து பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 17 மதிப்பீட்டுக் குழுக்களும், யாழ்.மத்திய கல்லூரி மதிப்பீட்டு நிலையத்தில் 16 மதிப்பீட்டுக் குழுக்களுமாக 33 மதிப்பீட்டுக் குழுக்கள் பணியில் ஈடுபடவுள்ளன.

500 ஆசிரியர்கள் வரை இதில் பங்குபற்றவுள்ளனர்.

இன்று வியாழக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 10 தினங்களுக்கு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு மதிப்பீட்டுக் குழுவிலும் பிரதம பரீட்சகர்கள், எண்கணிதப் பரிசோதகர் உட்பட 15 ஆசிரியர்கள் வரையில் பணியில் ஈடுபடுகின்றனர். இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் 500 ஆசிரியர்கள் வரை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுகின்றனர்.

விடைத்தாள் பொதிகள் ஏற்கனவே தரைவழியாக யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி தொடர்பான பணிகளைச் செய்வதற்கு இலங்கை பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 83 நிலையங்களில் சமகாலத்தில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. 500 மதிப்பீட்டுக்குழுக்கள் வரையில் பணியில் ஈடுபடவுள்ளன.

(50-11)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### திருவாதிரை உற்சவம்

வடமராட்சி, டிசெ.31

தொண்டைமானாறு ஸ்ரீசெல்லச்சந்நிதி கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை திருவாதிரை விசேட உற்சவம் நடைபெறவுள்ளது.

(50-236)

### பொஸ்கோ வித்தியாலய தரம்-1 வகுப்புகள் 6ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.31

யாழ்.புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலயத்தின் தரம் ஒன்றுக்கான வகுப்புகள் ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் அருட்செல்வி ம.ஜீவந்தி அறிவித்துள்ளார். (50-16)

### கணபதி ஹோமப் பெருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.31

உசன், மிருசுவிலில் அமைந்துள்ள கஜகேணிப் பிள்ளையார் ஆலயத்தில் கணபதி ஹோமப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு ஷோடச உபசாரப் பூசை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறும்.

நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்குமாக நடத்தப்படும் இந்த ஹோமப் பெருவிழாவில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-204)

### சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை நிகழ்வுகள்

வடமராட்சி,டிசெ.31

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் வைத்தியசேவை மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கென முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், யாழ்., கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி.மகேஸ்வரன் நினைவாகக் கட்டப்பட்ட புதியகட்டடத்திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (50-236)

# காரைநகரில் மணிவாசகர் விழா இறுதிநாள் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.31

காரைநகர் மணிவாசகர் சபையின் அனுசரணையில் மணிவாசகர் விழா காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்த மண்டபத்தில் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இறுதிநாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருவாசகத் திருமுறையை ஆலய நிர்வாக உறுப்பினர் தி.சண்முகசுந்தரம் ஓதுவார். வரவேற்புரையை நிர்வாக உறுப்பினர் க.சிவஸ்ரீசாந்திநாயகம் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தினரின் பண்ணிசை இடம்பெறும்.தொடர்ந்து காரைநகர் மணிவாசகர் சபைப்போட்டியில் முதலிரு இடங்களைப் பெற்றவர்களின் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சொற்பொழிவு வரிசையில் 'விளங்குதில்லை' என்னும் தலைப்பில் செல்வன் விசுவநாதன் பாலேந்திரனும், 'சிரிப்பார்' என்னும் தலைப்பில் காரைநகர் மணிவாசகர் சபை உப தலைவர் பாலபண்டிதர் க.பாலசுப்பிரமணியனும், 'அருளாதொழிந்தால்' என்னும் தலைப்பில் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி மற்றும் வவுனியா தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் தலைவர் தமிழ்மாமணி த.சிவகுமாரனும், திருவாசகப் பேருரையை தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள முத்தமிழ் சிவச்செல்வியும், திருமுருக கிருபானந்தவாரியாரின் வாரிசுமான தேச. மங்கையர்க்கரசியும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனையடுத்து சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளையின் பஜனை இடம்பெறும். (50)

# நெற்பயிர்களுக்கு கிருமி நாசினிகளை விசிறும் நடவடிக்கையில் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.மாவட்டத்தில் உ ள்ள வயல்களில் நெற்பயிர்களில் ஏற்பட்டிருக்கும் நோய்த் தாக்கங்களுக்கு கிருமி நாசினிகளை விசிறுவதுடன் களைகளைப் பிடுங்குவதிலும் பசளை இடுவதிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரத்தில் பெய்த கனத்த மழையால் தாழ்ந்த வயல் நிலங்களில் வெள்ளம் தேங்கியிருந்தது. தற்போது இந்த வயல்களில் வெள்ளம் ஓரளவு வற்றியுள்ளது.

சில நெல் வயல்களில் கடுமையான நோய்த் தாக்கம் ஏற்பட்டிருந்தது. எனினும் கடந்த வாரம் தொடர்ந்து பெய்த மழையினால் கிருமிநாசினிகளை விசிற முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டனர்.

தற்போது மழை ஓய்ந்துள்ளதையடுத்து கிருமிநாசினிகளை விசிறி வருகின்றனர். அத்துடன் வயல்களில் களைகளை அகற்றுவதிலும், பசளைகளை இடுவதிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. (50-224)

# கரையோரப் பகுதிகளுக்கு ரெலிக்கொம் தொலைபேசி இணைப்புக்களை வழங்குகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் குருநகர், நாவாந்துறை ஆகிய இடங்களின் கரையோரப் பகுதிகளிலிருந்து விண்ணப்பித்தோருக்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

புதிய தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்காகத் தற்போது கேபிள்களைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குருநகர், கடற்கரை வீதி உட்பட சில பகுதிகளுக்குப் புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் நாவாந்துறைப் பகுதிக்கும் புதிய இணைப்புக்களை வழங்குவதற்காகக் கேபிள்களைப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (50-224)

# சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் போதிய இடவசதிக ள் இல்லை

## நகருக்கு வரும் மக்கள் பெருஞ் ...மம்

யா... ...ணம்,டிசெ.31

யாழ். நகரில் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளமையால் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்குப் போதிய இடவசதி இல்லாமையால் நகருக்கு வரும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நகருக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்யவரும் மக்களும் ஏனையோரும் தமது சைக்கிள்களை நிறுத்துவதற்கு இடவசதி இன்றி சிரமப்பட்டு வருகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையம், நவீன சந்தைப் பகுதியில் உள்ள சைக்கிள் தரிப்பிடம் ஆகியவற்றில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. யாழ். நகருக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையாலேயே சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நெருக்கடியால் தமது சைக்கிள்களை நிறுத்துவதற்கு ... ...ிரமப்பட்டு வருகின்றனர். (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN LONDON

JAFFNA மாநகரத்தில்
CITY COLLEGE ஆரம்பம்



UK INTAKE Feb,May,Jul

MEMBER OF UCAS

- O/L சித்தி மாத்திரம் போதுமானது
- சாதாரண ஆங்கில அறிவு போதுமானது
- University / College Admission
- தேவையான Document ஒழுங்குகள்
- நேர்முகப்பரீட்சை (Interview இல்லை)
- மூன்றே வாரத்தில் விசாவுக்கான ஒழுங்குகள்
- பணரீதியான ஒழுங்குகள் (Sponsor)
- 100% விசாவுக்கான ஒழுங்கமைப்புகள்



DIPLOMA IN ENGLISH
DIPLOMA IN PROFESSIONAL ENGLISH
யாழ் நகரில் புதிய வகுப்பு ஆரம்பம்

100% Guarantee Job, Boarding Arrangements

LAWYERS: Mr M. DINESH - Mr.M.ZAHIR - Miss.SUBASINY

100% GUARANTEE

HND-BBA-BA-BSc-MA-MSc-BEng-B.Com-MBBS, PhD-IT-LLM-LLB-PGDip-MPharm-computer& ect

ISO CERTIFIED INSTITUTION

INTERNATIONAL CITY COLLEGE

No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06,
10 METERS FROM GALLE ROAD Tel : 0114 594 104 , fax: 0112 582722
தமிழ் மொழிமூல அழைப்புக்கு – 0772 955 977
Jaffna Branch: 21 Stanly Rd, (Near People's Bank)
தமிழ் மொழிமூல அழைப்புக்கு – 0774 032 051 - 0214 901464


# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்குமான 'டெங்கு' தொடர்பான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (50-201)


## மாபெரும் பொது அறிவுப்போட்டி



அன்பார்ந்த சிறுவர்களே!
11-15 வயது
மாணவர்களுக்கு இடையில் நடைபெறவிருக்கும்
மாபெரும் பொது அறிவு புதிர்ப்போட்டி

1ஆம் பரிசாக 15000 ரூபா
2ஆம் பரிசாக 12000 ரூபா
3ஆம் பரிசாக 8000 ரூபா

இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும் 15 மாணவர்களுக்கு பெறுமதி மிக்க சான்றிதழ் வழங்கப்படும். இதில் கலந்து கொள்ள சிறுவர்களே உங்களுக்கு விருப்பமா உங்கள் சுயவிவரக்கோவையை 10.01.2010ஆம்திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்
இல.8, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 2228131, 021 3215212
(91993)

# லீலா

பஞ்சாங்க சித்திரக் கலண்டர் டயறிகள்

சித்திரங்களுடனும் இருவர்ணங்களில் அச்சிடப்பட்டு வெளிவந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் துரிதமாக விற்பனையாகின்றன

இதுவரை கிடைக்காத அன்பர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள், இன்றே கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்,கொள்கின்றோம்.

எங்கும் கிடைக்கும் ஒரேயொரு சித்திரக் கலண்டர்

2010 லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

தயாரிப்பாளர்கள் :
லீலா பிறஸ் பிரைவேட் லிமிட்டட்
இல. 400, கே. சிறில். சீ பெரேரா மாவத்தை, கொழும்பு – 13.
தொலைபேசி : 2325930, 2325933 பக்ஸ் : 2446077

## தேவை

உரப்பைத் தையல் வேலைக்கு இருபாலாரும் தேவை.
ஸ்ரீ ராமராஜ் அக்சஸ்ஸ்
603, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 2225986
(91986)

## பாலன் மில்

தேங்காய் எண்ணெய் } ஆலை
நல்லெண்ணெய் }

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித் தரப்படும். நாடவேண்டிய ஒரேஇடம்.
பாலன்மில், மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.
(91987)


# பருத்தித்துறை இ.போ.ச. பஸ் நிலையம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.31

பருத்தித்துறை தெருமூடிமடப் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச்சபை பஸ் நிலையம் மீளவும் நாளை வெள்ளிக்கிழமை நவீன சந்தையின் கிழக்குப் பக்கத்திற்கு மாற்றப்படுவதாக பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பஸ் நிலையம் நவீன சந்தை அமைப்பதற்காகவே மாற்றப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (50-1)

## இருபதாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 19 02 1945
அரக்கர் பிடியில் 31 12 1989

## அமரர் மனவல் எஸ்பீரியல்

*(யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர்)*

பொழுதொன்று விடிந்தது மாயக் கழுகொன்று விரைந்தது
பொன்னான நாயகன் இன்னுயிர் பறித்திட
பொல்லாத நாளது பொய்யாகிப் போகாதோ
பொங்கிடும் குமுறல்கள் மங்கியே தீராதோ
தாய்க்குத் தலைமகன் தங்கத்தமிழ் மகன்
வாய்த்த மனைவிக்கு வல்ல காவலன்
சேய்கள் சோதரர் மருகர் யாவரையும்
வாய்மை நெறி காட்டி வளர்த்த வல்லவன்
ஊருக்கு உழைத்தவர் உலகிற்கோர் உத்தமர்
அரசியற் துறையிலே அருங்கரை கண்டவர்
மாநகர சபை தனிலே நீர் வகித்த பதவிதான்
மாபாவி அவர்களது மனதை உறுத்தியதோ?
மாவீரன் போன்று நீர் நடந்து சென்றதுதான்
மாசுபட்ட நீசர்களின் நெஞ்சை நெருடியதோ
அஞ்சா நெஞ்சன்நீர் ஆண்மையிற் சிங்கம் நீர்
விஞ்சு புகழ்கொண்ட இலட்சிய வேங்கை நீர்
கஞ்சத்தனம் கொண்ட காடையர் கைபட்டு
துஞ்சாத உம் விழிகள் தூக்கம் கண்டனவோ
நெஞ்சம் கனக்கிறது உங்கள் நினைவுகள் அகல மறுக்கிறது
இருபது ஆண்டென்ன இருபது யுகம்தான் சென்றிடினும்
தீராது எம் துயர் நீங்காது உம் நினைவு.

'அறிவகம்'
3,2ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

உயிருள்ளவரை உங்களை மறவாத
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பற்றிமாதா ஜெயமணி மரியநாயகம்

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பற்றிமாதா ஜெயமணி மரியநாயகம் நேற்று (30.12.2009) புதன்கிழமை நித்திய மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து - இருதயநாயகி தம்பதியரின் அன்பு மகளும் மரியநாயகத்தின் மனைவியும் மருத்துவ கலாநிதி அன்ரன் சுதாகரன், கத்தரின் சுரனுதா (இறுதியாண்டு மருத்துவபீட மாணவி, யாழ்.மருத்துவபீடம்) ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.12.2009) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் வல்வெட்டித்துறையிலுள்ள இல்லத்திலிருந்து இறுதி ஆராதனைக்காக பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்பு வல்வெட்டித்துறை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருத்துவ கலாநிதி
ம.அன்ரன் சுதாகரன்.
வல்வெட்டித்துறை. (91992)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்




திதி: 31.12.2009

மு.பரமானந்தன், வி.தர்சன், பீ.ராம்குமார், இ.தயாபரன்,
அ.யதீசன், அ.காங்கேசன், மு.அற்புததேவன்

ஏணிபோல் இருந்து எம்மை வழிகாட்டிய
எம் இனிய உறவுகளே எதிர்பாராத அந்நிமிடத்தில்
ஆதிசிவன் கடலில் ஆதிரையில் சங்கமித்து
ஆண்டுகள் ஐந்தாகின்றன. ஆண்டுகள் ஐந்தென்ன
ஆயிரம் தான் சென்றாலும் அழியாத அகல் விளக்குகளாய்
என்றும் எம் மனங்களில் ...

சுவைப்புலம்,
...ராகம். (91983)

நெஞ்சு கனத்த நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியுடன் பகிரங்க விவாதத்திற்கு பொன்சேகா தயார் என்கிறது ஜே.வி.பி.!

கொழும்பு, டிசெ. 31

நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பகிரங்க தொலைக்காட்சி விவாதத்தில் ஈடுபட எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா தயாராக இருக்கின்றார் - என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் எம்.பியுமான அனுரகுமார திஸநாயக்க நேற்று முன் தினம் கூறினார்.



இதற்காக ஜனாதிபதி அவர் விரும்பிய எந்தத் தொலைக்காட்சி அலைவரிசையையேனும் தெரிவு செய்யலாம் என்றும், ஜனாதிபதி தவிர்ந்த அரசில் உள்ள வேறு எவருடனும் விவாதம் நடத்த பொன்சேகா தயாராயில்லை என்றும் அனுரகுமார திஸநாயக்க கூறினார்.

சரத் பொன்சேகாவின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெய் ஹில்டன் ஹோட்டலில் அண்மையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போது கலந்துகொண்டு உரையாற்றிய எமது தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, சரத் பொன்சேகாவுடன் பகிரங்க தொலைக்காட்சி விவாதத்தில் ஈடுபட வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு விருத்டுத்திந்தார்.

அந்த அழைப்புக்கு எந்தவொரு பதிலும் ஜனாதிபதி சார்பில் இருந்து வரவில்லை. இந்த நிலையில் அரசில் உள்ளவர்கள் விவாதம் செய்ய வருமாறு சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பொன்சேகா விவாதத்திற்கு தயார். சிங்கங்கள் சிங்கங்களுடன் மோதட்டும். பன்றிகளுக்கு அங்கு வேலை இல்லை. ஜனாதிபதியுடன் விவாதம் நடத்தவே பொன்சேகா தயாராக இருக்கின்றார். ஜனாதிபதிக்கு நாம் மீண்டும் அதற்காக அழைப்பு விடுக்கின்றோம்.

ரெலிகொம் நிலையத்தை மக்ஸ் நிலையத்துக்கு வழங்கியமை, மிஹின் லங்கா ஊழல் மோசடி, மிக் விமானக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடிகள், தெனியாய மற்றும் கடுவல போன்ற இடங்களில் அமைக்கப்படும் ஜனாதிபதி மாளிகைகள் போன்றவை தொடர்பாக விவாதம் நடத்த பொன்சேகா தயார்.

மேற்படி விடயங்களில் நான்கு விடயங்களை விவாதத்திற்குத் தெரிவு செய்து ஜனாதிபதி எம்மிடம் அறிவிக்க வேண்டும். அவர் விரும்பும் தொலைக்காட்சியிலேயே விவாதம் நடத்த பொன்சேகா தயாராகியிருக்கின்றார் - என்றார். (சி)

# சுவரொட்டிகள், பதாகைகளை அகற்ற பொலிஸ் திணைக்களத்திற்கு நிதி

கொழும்பு, டிசெ. 31

நாடெங்குமுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களின் சுவரொட்டிகள், பதாகைகள், விளம்பரங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்காக 128 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அப்பணியை உடனடியாக ஆரம்பிக்குமாறும் தேர்தல்கள் திணைக்களம் பொலிஸ்துறையைப் பணித்துள்ளது.

இப்பணிக்கு 128 லட்சம் ரூபா தேவைப்படுமெனப் பொலிஸ்துறை தேர்தல்கள் செயலகத்துக்கு அறிவித்திருந்தமையையடுத்து அக்கோரிக்கையை திறைசேரிக்கு சமர்ப்பித்தது எனத் தேர்தல்கள் செயலகம் பொலிஸ் திணைக்களத்துக்கு கடந்த திங்களன்று எழுத்துமூல அறிவித்தல் கொடுத்துள்ளது.

அதற்கமைய தேவையான பணியாளர்களை நியமித்துப் பணியை உடனடியாக ஆரம்பிக்கும்படி தேர்தல்கள் திணைக்களம் பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்கள் இருவரின் சுவரொட்டிகள், பதாகைகள், விளம்பரங்கள் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன எனவும், நாடெங்கும் இருந்து இதுவரை எண்பது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. இம்முறைப்பாடுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன எனவும் தேர்தல்கள் செயலக உயரதிகாரி யொருவர் தெரிவித்தார். (சி)

# அதாவுல்லாவின் பிரதேசவாதமே கல்முனை மாவட்டம் உருவாகத் தடை

## குற்றம் சுமத்துகின்றார் ஹக்கீம்

கொழும்பு, டிசெ. 31

அமைச்சர் அதாவுல்லாவின் பிரதேசவாதத்தினாலேயே கல்முனைக் கரையோர மாவட்டம் இன்று வரை உருவாக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



அரசியல்விவகார ஆய்வகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுடனான கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு ஹக்கீம் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

"ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு கல்முனை கரையோர மாவட்டத்தை அமைப்பதற்கு முன்பு அனுமதியளித்திருந்தது.

ஆனால், அதாவுல்லா அக்கரைப்பற்றிலேதான் அது அமைய வேண்டும் என பிரதேசவாதத்தை தூண்டி தடை போட்டதினால் தான் அன்று இந்த கரையோர மாவட்டம் சாத்தியமாகவில்லை.

இருந்தும் சரத் பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நிச்சயமாக இந்தக் கரையோர மாவட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுத்தரும். இது விடயத்தில் யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை. தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு கரையோர மாவட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிந்துள்ளோம்." (சி)






ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் தேர்தலில் ஆதரிக்கும் முஸ்லிம், தமிழ்க் கட்சிகள் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது...

# பிரசாரத்துக்கு மக்களின் பணமா? அடியோடு மறுக்கின்றது அரசு

கொழும்பு, டிசெ. 31

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்காக பொது மக்களின் பணம் செலவிடப்படுகின்றது என்ற குற்றச்சாட்டை ஜனாதிபதி செயலகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காகப் பொது மக்களின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என சில ஊடகங்களில் வெளிவந்த தகவல்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அரச செலவில் உணவு வழங்கப்படுவது, வேட்பாளர்களின் பிரசாரத்திற்காக அரச கட்டடங்களும், வாகனங்களும் பயன்படுத்தப்படுவது குறித்தே முக்கியமாக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அலரி மாளிகையில் இடம்பெறும் விருந்துபசாரங்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரத்திற்காக பொது மக்களின் நிதி எதையும் பயன்படுத்தவில்லை என தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.

சமீபத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளுக்கான சகல செலவுகளையும் அரசியல் கட்சிகளும் நலன்விரும்பிகளுமே பொறுப்பேற்றனர்.

ஜனாதிபதி செயலகம் இவ்வாறான அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களை கைவிடுமாறு சகல தனிநபர்களையும், அமைப்புக்களையும் கேட்டுக் கொள்கின்றது - என்றுள்ளது. (சி)

# கிழக்கில் தொடரும் மழையால் தேர்தல் பிரசாரம் மந்தகதியில்

கொழும்பு, டிசெ. 31

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில வாரகாலமாக தொடர்ந்து நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்டு கடந்த 17 ஆம் திகதியுடன் வேட்பு மனுத்தாக்கல் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

எனினும், இரண்டு பிரதான கட்சிகளினதும் வேட்பாளர்கள் பங்குபற்றிய பொதுக் கூட்டங்கள் எவையும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் இடம்பெறவே இல்லை.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்ற போதிலும், கிழக்கு மாகாணத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பொதுக் கூட்டங்களை நடத்துகின்றமையில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா பங்கு பற்றவிருந்த தேர் தல் பிரசாரப் பொதுக் கூட்டம் ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் கடந்த 23 ஆம் திகதி கல்முனையில் இடம்பெறவிருந்த போதிலும் அடைமழை - வெள்ளம் காரணமாக அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றமையால் கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் அதிக வன்முறைகள் ஏற்படவில்லை எனவும், தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் பல இடம்பெறவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (சி)

# அரசுத் தரப்பிலிருந்து 19 பிரமுகர்கள் பொன்சேகா பக்கம் பாயத் தயாராம்

## உறுதிபடக் கூறுகிறார் மங்கள

கொழும்பு, டிசெ. 31

அரசில் உள்ள முக்கியஸ்தர்கள் 19 பேர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளனர் என்றும் அவர்கள் யார், யார் என்பது விரைவில் தெரியவரும் என்றும் மங்கள சமரவீர எம்.பி. நேற்று முன்தினம் உறுதிபடக் கூறினார்.

சரத் பொன்சேகாவின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர எம்.பி. இத்தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவிற்கான ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா கூட குடும்ப ஆதிக்கம் உள்ள இந்த அரசுக்கு ஆதரவு வழங்க மாட்டார் எனக் கூறியுள்ளார்.

[illegible] அரசியலில் ஈடுபட மாட்டார். அவர் லண்டனில் மருத்துவராகக் கடமையாற்றி வருகின்றார். அவர் அரசியலில் ஈடுபடுவார் என்பது பொய்.



தற்போது அரசில் உள்ள பலர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளனர். அரசின் முக்கியஸ்தர்கள் 19 பேர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளனர். அவர்கள் யாரென்று விரைவில் அறிவிக்கப்படும்.

இதேவேளை, 'மஹிந்த சிந்தனை' வாக்குறுதியில் ஒரு வீதமாவது நிறைவேற்றப்பட்டதாக யாராவது நிரூபித்தால் அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா தருவேன் என்று கடந்த வாரம் கூறியிருந்தேன். ஆனால், எவரும் இதுவரை நிரூபிக்கவில்லை.

ஆனால், 'மஹிந்த சிந்தனை' வாக்குறுதியில் 90 வீதம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று ஜனாதிபதி மஹிந்த கூறியுள்ளார். அதை நிரூபித்தால் ஜனாதிபதியின் தேர்தல் பணிகளுக்காக நான் 10 லட்சம் ரூபாவை இலவசமாக வழங்குவேன். - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த வறுமைக்குபட்ட 30 குடும்பங்களுக்கு, வட்டுக்கோட்டை பொலிஸார் தமது சம்பளத்திலிருந்து பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களும், பால் மா வகைகளும் அண்மையில் வழங்கியிருந்தனர். பொலிஸ் நிலைய உதவிப் பொறுப்பதிகாரி அபயரத்னா பொருள்களை வழங்குவதைப்படத்தில் காணலாம்.

(படம்: மு.சந்திரகுமார்)

# தயாசிறி ஜயசேகர எம்.பி. பிணையில் விடுவிப்பு

கொழும்பு, டிசெ.31

குருநாகல் ஹெட்டிப்பொல பகுதியில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தின்போது நபரொருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் பிடியாணைப் பிறப்பிக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் நீதிமன்றினால் ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஹெப்பிட்டிப்பொல பிரசாரக் கூட்டத்தில் நபர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தயாசிறி ஜயசேகரவுக்கு தொடர்புள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து தயாசிறி ஜயசேகர நீதிமன்றில் நேற்று முன்தினம் சமுகமளித்ததைத் தொடர்ந்து அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (அ-சி)

## பொது இடங்களில் குப்பை வாளிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.31

எமது நகரைச் சுத்தமாக வைத்திருப்போம் திட்டத்தின் கீழ் 'சோ ஆ' நிறுவனத்தினர் சாவகச்சேரி நகரசபைக்கு குப்பை போடும் தகர வாளிகளை வழங்கியுள்ளனர்.

இவை சாவகச்சேரி பொதுச்சந்தை, நவீனசந்தை நகர்ப்பகுதி மற்றும் பிரதான சந்திகளைப்போன்ற பொது இடங்களில் வைக்கப்படவுள்ளன.

## அந்தியேட்டி அழைப்பு



### அமரர் தாட்சாயினி நாகராசா

மலர்வு 06.12.1931 உதிர்வு 01.12.2009

கடந்த01.12.2009அன்றுஇறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜகிரி,
பொற்பதி லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (91968)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 0214591290, 0777162673


மஹஜன ஸம்பத
மஹாஜன சம்பத
Mahajana Sampatha

29.12.2009

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2193

வெற்றி எழுத்து S வெற்றி எண்கள் 9 8 9 5 2 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S | 9 | 8 | 9 | 5 | 2 | 0 | ரூபா.11,224,334/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 9 | 8 | 9 | 5 | 2 | 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 8 | 9 | 5 | 2 | 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 9 | 5 | 2 | 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 149 |
| 4 பரிசுகள் | | | | | 5 | 2 | 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1416 |
| 5 பரிசுகள் | | | | | | 2 | 0 | ரூபா. 100/= | பரிசுகள் 14289 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 141337 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 8 | 9 | 5 | 2 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 15 |
| 8 பரிசுகள் | | 9 | 8 | 9 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 140 |
| 9 பரிசுகள் | | 9 | 8 | 9 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1432 |
| 10 பரிசுகள் | | 9 | 8 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 14188 |
| 11 பரிசுகள் | S | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 56652 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 14,937,280.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 11,529,936.00

தேசிய லொத்தர் சபை


## உன்னில் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்துகொள்

எள்ளின் உள்ளே மறைந்திருக்கும் எண்ணெயைப்போல், பாலின் உள் உறையும் நெய்போல, மலரின் மத்தியில் மறைந்து காணப்படும் மதுரமான வாசனை போல், பழத்தினுள் நிறைந்திருக்கும் இனிய பழச்சாறைப்போல், மரத்தினுள் மறைந்திருக்கும் நெருப்பைப் போல எல்லா ஜீவராசிகளிடமும் தெய்வத்துவம் உள்ளே உறைகிறது.

கண்களில் பார்வை இருப்பதுபோல், கேட்கும் சக்தி காதுகளுக்கு இருப்பது போல், நாவுக்கு ருசி அறியும் சக்தி இருப்பதுபோல் எல்லா ஜீவராசிகளிடமும் தெய்வத்துவம் இருக்கிறது.

வெளிப்புறமாகத் தெரியும் இந்த உலகில் கண்களுக்குத் தெரியாத ஒன்றும் இருக்கிறது. அந்த ஞானம் தான் தெய்வத்துவம். பல விலையுயர்ந்த இரத்தினங்களூடே சென்று அவற்றை இணைக்கும் நூலைப் போல் கடவுள் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறார்.

கஸ்தூரிமான் தன் வயிற்றிலுள்ள கஸ்தூரியின் மணத்தை நுகர்ந்துவிட்டு இந்த வாசனை எங்கிருந்து வருகின்றது என்று தெரியாமல் அலைகிறது. தேடித் தேடி அலைந்து ஒரு நிழலில் அமர்ந்து கொள்கிறது. முகத்தை அதன் வயிற்றில் தேய்த்துக்கொள்ளும் பொழுது அதனுள் இருந்துதான் கஸ்தூரி மணம் வருகிறது என்று புரிந்துகொண்டு இது தெரியாமல் எங்கெங்கோ அலைந்தேனே என எண்ணிக் கொள்ளும் கஸ்தூரிமான்போல தன்னுள் இருக்கும் தெய்வீகத் தத்துவத்தை உணராது மனிதன் அலைபாய்கிறான்.

ஒவ்வொரு மனிதனும் தன்னுள் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இதைவிட உயர்ந்த ஆத்மீக சாதனை எதுவும் இல்லை.



சாயி சிந்தனை

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியில் முத்துத்தம்பி பாடசாலைக்கு முன்பாக 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (91963) தொடர்பு: 0714977019

## காணி விற்பனைக்கு

மிருசுவில் புகையிரத நிலையம், சென்.நீக்கிலஸ் கோவில் பின்பக்கமாக 20 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. (91965) தொடர்பு: 0232222378, 0775922230.

## வீடு விற்பனைக்குண்டு

வட்டு. கிழக்கு, குளிப்பன் ஒழுங்கையில் 6 பரப்பு காணியுடன் விடு விற்பனைக்குண்டு.
(91983) தொடர்பு: 0715486725

## 'செவிநுகர் கனிகள்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.31

கலாநிதி மனோன்மணி சண்முக தாஸ் எழுதிய ,செவிநுகர் கனிகள் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை பேராசிரியர் அ. சண்முக தாஸ், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வாழ்த்துரையை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகி யோர் நிகழ்த்த வுள்ளனர்.

வெளியீட்டுரையை திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் என். விஜய சுந்தரம், அறிமுக வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச. வலீசன், நயப்புரையை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வேல் நம்பி ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர். ஜி.சீ.ஈ. உயர்தர தமிழ் புதிய பாடத்திட்டத் திற்கு அமைவாக இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-14)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் ஜெகதீஸ்வரி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஜெகதீஸ்வரி கடந்த 28.12.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், லகுமாரனின் (மலேசியா) அன்புத்தாயும், நாகேஸ்வரி, இராஜேஸ்வரி (நோர்வே), காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், சரோஜினிதேவி, யோகேஸ்வரி, குகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
தொ.பேசி: 0213205497 (91955)

தகவல்:
தெ.நாகேஸ்வரி (சகோதரி),
லகுமாரன் (மகன்).

### செல்லையா வாலாம்பிகை



அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
64/4, இந்து மகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.
021 3008456

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சச்சியானந்தம் இராசநாயகி

தோற்றம் 04.12.1946

மறைவு 01.12.2009

மாதம் ஒன்று ஆனபோதும் மாறவில்லை நம் துயரம்
எம்மிடமிருந்து காலன் உனைப் பிரித்துச் சென்றாலும்
உன் நினைவுகள் என்றும் எங்களிடமிருந்து மறைந்ததில்லை
அனைவரிடமும் அன்பாய் இருந்த நீ
இப்போது அனைவரையும் கலங்கவைத்ததேனோ
உந்தன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோமம்மா.

கடந்த 01.12.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட நேரடி அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை. (91012)

மகன், மருமகன்,பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாகப் புலம் பெயர்ந்த தேசங்களில் வாழும் புத்திஜீவிகள் சிலர் ஒன்றிணைந்து பிரத்தியேகத் தொடர் நேர்காணலை 'ஈழம்நியூஸ்' இணையத் தளத்துக்கு வழங்கி வருகின்றனர். இப்பிரச்சினையை ஆய்வு செய்யும் வகையில் அவர்கள் வெளியிடும் கருத்துகளின் பதிவின் ஐந்தாவது அத்தியாயத்தில் ஒரு சிறு பகுதி இங்கு மீள் பிரசுரமாகின்றது. இன்றைய நிலையில் சமகால அரசியலுக்கு அது மிகப் பொருத் தப்பாடுடையதாக இருப்பதால் இப்பகுதியை இங்கு இடம்பெறச் செய்தோம்.**

**வியன்னா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எட்வேர்ட் இராமநாதன், பரிஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பரணி கிருஷ்ணரஜனி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த யாழினி ரவிச்சந்திரன், வியன்னா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சித்ரலேகா துஷியந்தன், பார்ஸிலோனா பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த பிரியதர்சினி சற்குணவடிவேல் ஆகியோர் கருத்துக்களைக் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். (ஆ-ர்)**

# எதிரிகளைக் கொண்டே எதிரிகளை அழிக்கும் சூழ்ச்சி!

......முள்ளி வாய்க்கால் படுகொலையின் தொடர்ச்சி எமது இனத்திற்கு முரணாக வெடிக்கின்ற, பல ஒவ்வாமைகளை உருவாக்கும் என்பதை நாம் முன்பே கண்டறிந்தோம். அதன் நடப்பு வரலாறுதான் உங்கள் கேள்விகளாக எங்கள் முன் கிடக்கிறது. எமது பதற்றத்தின், பீதியின் பின்புலமும் இதுதான்.

பின்புலத்தினூடாகவே மேற்படி கேள்விகளை அனுக வேண்டும். முள்ளிவாய்க்காலில் வைத்து அழிக்கப்பட்ட தாகக் கூறும் முதன்மைக் கூறுகளில் ஒன்றாக எமது உளவியலும் இருக்கிறது. அத்தோடு நாம் உடனடியாக மீளொழுங்கு செய்யவேண்டிய விடயமாகவும் அதுவே இருக்கிறது.

உண்மையில் உடனடியாகச் செய்யப்படவேண்டிய எமது ஒருமித்த செயற்பாடு என்பது சரணடைந்த போராளிகளை உடனடியாக விடுவிப்பதற்கு முயற்சிப்பதும் எமது விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மரணித்தவர்கள் போக எஞ்சியுள்ள மாவீரர், போராளிக் குடும்பங்களை உளவியல் சிதைவில் இருந்து காப்பதும் அவர்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதுமே ஆகும்.

## இன்றைய அரசியல்

இந்தத் தொடர்ச்சி,இப்போரில் சிக்குண்ட வன்னி மக்கள், பின்பு முழுத் தாயக மக்கள் என்று விரிவாக்கம் செய்யப்படவேண்டும். ஆனால் இங்கு யாரும் இது குறித்து அக்கறைபடுபவர்களாகத் தெரியவில்லை. மாறாக, எல்லோரும் அரசியல் செய்யக் கிளம்பியிருக்கிறார்கள். இதை நாம் குற்றச்சாட்டாக முன்வைக்கவில்லை. இது முள்ளிவாய்க்கால் படுகொலைகளைச் சந்தித்து எஞ்சியுள்ளவர்களின் உளவியல் சிதைவின் அடையாளமாகவே நாங்கள் பார்க்கிறோம். இச் சிதைவே மேற்படி முரணாக எம்மைப் பிளவுபடுத்தியிருக்கிறது.

குற்றங்களின் மூலமும் அடிப்படையும் மனச் சிதைவிலிருந்து அல்லது மனப்பிறழ்விலிருந்துதான் தோற்றம் கொள்வனவாக உளவியல்வாதம் கட்டமைக்கப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கும் பல தரப்பினரதும் வன்முறையையும் அவதூறு, கொலை மிரட்டல், அச்சுறுத்தல்களையும் நாம் பார்க்கிறோம்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குப் பிறகு மேற்படி அரசியல் செய்யும் ஒவ்வொரு தரப்பும் தம்மளவில் தாம் செய்ய முற்பட்டிருக்கும் அரசியலே சரியானது என்று எண்ணத் தலைப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் இன்னொரு அழிவுக்குக் கொண்டே விட்டு விடுவார்கள் என்று நம்பவும் தொடங்கிவிட்டார்கள். சாத்தியம், பொருத்தப்பாடு, தர்க்கம், அறம் எதுவும் இவர்களை இயக்கவில்லை.

சிதைந்துபோன உளவியலே இவர்களை இயக்கிக் கொண்டிருக்கிறது. இதை வேறு ஒரு மொழியில் கூறினால், முள்ளிவாய்க்காலில் வைத்துப் பேரழிவுடன் குரூரமான முறையில் வீழ்த்தப்பட்ட எமது போராட்டத்தினது தோல்வியும், அவலமுமே இவர்களின் அரசியல் மையமாக இருக்கிறது. தலைவர் பிரபாகரன் மீதான - விடுதலைப்புலிகள் மீதான- சேறடிப்புகளின், அவதூறுகளின் மையமாகவும் இந்த ஊனமுற்ற உளவியலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஊனமுற்ற உளவியலிலிருந்து முழுமையான அரசியல் பிறக்க முடியாது. இது சந்தர்ப்பவாத, அடிபணிவு - அவல - அரசியலின் ஒரு வடிவமாகவே இருக்க முடியும்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குப் பிறகு தாயகத்திலும் சரி புலத்திலும் சரி அரசியல் செய்யப் புறப்பட்டிருக்கும் எல்லோருமே விதிவிலக்கில்லாமல் இந்த வாய்ப்பாட்டிற்குள் பொருந்திப் போகிறார்கள். இந்த அரசியல் ஆரோக்கியமானதல்ல.

## அவல அடிபணிவு அரசியல்

நாங்கள் தோற்கடிக்கப்பட்டமை உண்மை. பெரும் அவலம் நிகழ்ந்ததும் உண்மை. விளைவாக மக்கள் போராட்டத்திலிருந்து வெகுதூரம் சென்றுவிட்டதும் உண்மை. அதற்காக இவற்றை மையப்படுத்தி எமது எதிர்கால அரசியலைத் தீர்மானிக்க முடியாது. வருங்கால சந்ததிக்கு இந்த அவல அடிபணிவு அரசியலிலிருந்து எதுவுமே கிடைக்கப்போவதில்லை.

இது ஒரு வரலாற்றுத் தவறாக மாறிவிடும். இன்று இந்த அவல அடிபணிவு அரசியலைக் கையிலெடுத்தவர்களின் வாரிசுகளே வருங்காலத்தில் அவர்களை நோகவேண்டித்தான் ஏற்படும்.

'தம்மை முள்ளிவாய்க்காலில் வைத்து சிங்களவன் கதறக்கதறக் கொன்றான் என்பதற்காக எங்களை அடிமைகளாக இருக்கிறமாதிரி அரசமைப்பை மாற்றிப்போட்டு போய்விட்டார்களே' என்று அந்த சந்ததி கதறப்போவதன் விளைவாக ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுப்பதும் ஒரு தொடர்ச்சியாக இருக்கப்போவதே யதார்த்தம். அடுத்த சந்ததிக்கு இதைக் கடத்துவது ஆபத்தானது.

**கேள்வி:** அப்படியென்றால் அரசியல் நடவடிக்கைகள் எதுவும் செய்யாமல் பேசாமல் இருக்கச் சொல்கிறீர்களா?

**பதில்:** இதற்குப் பதிலளிப்பது கொஞ்சம் சிக்கலானது. மனம் திறந்து உண்மையைச் சொல்வதென்றால் கொஞ்ச நாளைக்குப் பேசாமல் இருப்பதுதான் நல்லது.

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்து முடிந்த ஒரு சில வாரங்களிற்குள் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் விமர்சித்து, எமது அடுத்த கட்ட அரசியல் எப்படி இருக்க வேண்டும் என்று விளித்து, புலிகள் அமைப்போடு வன்னியில் இணைந்து பணியாற்றிய ஒருவர் எழுதிய கட்டுரை என்ற குறிப்போடு தமிழக சிற்றிதழ் ஒன்று ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. அதற்கு நாம் அப்போதே எமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தோம். அக்கட்டுரைக்கு நாம் அளித்த பதில்தான் இங்கும் பதிலாக இருக்க முடியும்.

## மோசமான காலகட்டம்

முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் எமது உரிமைப் போராட்டமும் எங்களின் எதிர்காலமும் மோசமான வரலாற்றுக் காலகட்டத்திற்குள் பிரவேசித்திருக்கின்றமை ஒன்றும் இரகசியமானதல்ல.

வெளிப்படையானது. எல்லாக் கணிப்புகளும், மதிப்பீடுகளும், கனவுகளும் கலைந்துபோனமை மட்டுமல்ல, யூகித்திருக்கவே முடியாத கொடூரங்களுடன் மரண ஓலங்களும் கதறல்களுமாக முள்ளிவாய்க்கால் படுகொலைகள் அரங்கேற்றபட்ட காட்சிப் பதிவிலிருந்து இன்னும் முழுமையாக ஈழத்தமிழன் ஒருவனும் மீண்டுவிடவில்லை. முழுமையாக மீள முடியுமா என்பதும் தெரியவில்லை. என்றென்றைக்கும் மீளவே முடியாத கொடுங்கனவாக ஒவ்வொரு ஈழத்தமிழனது மன அடுக்குகளையும் இக்காட்சிப் பதிவுகள் நிறைத்தபடியே இருக்கும்.

இந்தப் பின்புலத்திலிருந்துதான் ஈழவிடுதலை குறித்த அடுத்தகட்ட அரசியலை வளர்த்துச் செல்லமுடியும். நாம் மேற்படி அரசியல் செய்பவர்கள் எல்லோரையும் விமர்சித்துவிட்டு நாமும் முள்ளிவாய்க்கால் படுகொலையிலிருந்துதான் அரசியல் செய்ய வேண்டும் என்று சொல்கின்றோம் எனத் தவறாகக் கருத வேண்டாம்.

நாம் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமேயொழிய அதை நிரந்தரத் தோல்வியாகவும் நிரந்தர அவலமாகவும் கவனத்தில்கொண்டு அவல அடிபணிவு அரசியலைக் கையிலெடுக்க வேண்டாம் என்றுதான் கூறுகிறோம். உண்மையைச் சொல்வதென்றால், உடனடியாக நாம் அரசியல் செய்யக்கூடிய புறச்சூழலோ யதார்த்தமோ இல்லை.

## சுயபிரக்ஞையுடன் ஆய்வு

உண்மையிலேயே கடந்தகால நிலைப்பாடுகள், அது தொடர்பான அரசியல் நடவடிக்கைகள், அதன் விளைவான சரி-தவறுகள் சார்ந்து சுயவிமர்சனமும் மீள்பார்வையும் இங்கு அவசியமாகின்றன. முள்ளிவாய்க்காலிலிருந்து பீறிட்ட குருதி இன்னமும் காய்ந்துவிடவில்லை. அதன் மணம் இன்னும் நாசியை அடைத்தபடியே இருக்கிறது. இந்த நிலையில் சுயபிரக்ஞையுடன் கடந்த காலத்தை உடனடியாக மறுஆய்வு செய்வதென்பதும் கடினமானது.

இதற்கு ஒரு காலநீட்சி தேவை. அந்த இடைப்பட்ட காலமே ஈழவிடுதலைப் போராட்டம் குறித்த பிரக்ஞைபூர்வமான, தெளிவான மறுவாசிப்பை எமக்குத் தரும். நாம் எல்லோருமே பெரும் உளவியல் சிதைவுக்குள்ளாகியிருக்கிறோம். இந்த மணநிலை யில் தெளிவான அரசியல் கட்டமைப்பை ஒன்றிணைந்து உருவாக்க முடியாது.

இந்த 'உடனடி' நடவடிக்கைகள் இன்னுமொரு மனிதப் பேரவலத்திற்கும் அரசியல் வறுமைக்கும் ஈழத் தமிழினத்தை இட்டுச்செல்லக் கூடாது என்பதே நமது பெரும் கவலையாகவிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதில் ஸ்ரீலங்கா மட்டத்தில் [illegible]களவிலும் நிறைய இராஜதந்திரங்களும் அரசியல் சாணக்கியத் தனங்களும் நிறைந்திருக்கின்றன. இதைப் பலர் மறந்து பிதற்றுகிறார்கள். முள்ளிவாய்க்காலில் வைத்துப் புலிகள் தோற்கடிக்கப் பட்டமையை வரலாறு, புலிகளின் தோல்வியாக என்றைக்கும் பதிவு செய்யாது.

இத் தோல்வியைத் தமிழர்களின் இராஜதந்திரத் தோல்வியாகவே வரலாறு பதிவு செய்யும்.

எனவே, எமது அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்பதில் கொஞ்சம் கவனம் தேவை. உடனடியாக அரசியல் செய்யப் புறப்பட்டு நாம் கண்டது என்ன? பல பிரிவுகளாக முரண்பட்டுப் பிளவுற்று அவதூறுகளையும் காழ்ப்புகளையும் குரோதங்களையும் வன்முறைகளாக வெளித்தள்ளியதுதான் மிச்சம். இந்த அடிப்படையில்தான் அரசியலைச் சற்று ஒதுக்கிவிட்டு மக்கள் பிரச்சினையில் கவனத்தைக் குவிக்குமாறு தொடர்ந்து கூறிவருகின்றோம்.

## பன்மைத்துவம் தேவை

ஒற்றை அணுகுமுறை இல்லாமல், பல பிரிவுகளாக அரசியல் செய்வது நல்லதுதான். இதுதான் பன்மைத்துவத்திற்கு வழி சமைக்கும். அடிப்படை ஜனநாயகத் திற்கும் வழி கோலும். ஆனால் அது இங்கு அவதூறு வன்முறை அரசியலுக்குத்தான் வழி சமைத்திருக்கிறது. தமிழீழ விடுத லைப் புலிகள் என்ற அமைப்பும் பிரபாகரன் என்ற நாமமும் தமிழர் வரலாற்றிலிருந்து என்றைக்கும் துடைத்தழிக்க முடியாதவை. இதைக் கவனத்தில் கொண்டு வரையப்படும் அரசியல் வரைபடமே ஈழ விடுதலைக்கான வழியைக்காட்டும்.

மாற்றுக் கருத்துகளுக்குரிய ஒரு தெளிவான ஜனநாயகச் சூழல் ஈழ அரசியல் சூழலில் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். புலிகளின் பின்னடைவை அடுத்து நாம் தொடர்ச்சியாக முன்வைக்கும் கருத்து இதுதான். அதுவே முரண்பாடுகளற்ற ஒரு தெளிவான அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்கும். முள்ளிவாய்க்கால் படுகொலைகளுக்குப் பின்னான ஈழத் தமிழினத்தின் தீர்க்கமான அரசியல் தீர்வு இதன் வழியேதான் பிறப்பெடுக்கும் - சேறடிப்புகளினூடாகவும் அவதூறுகளினூடாக்வும் அது என்றைக்கும் பிறப்பெடுக்க முடியாது.

## வரலாறு ஓரிடத்தில் தேங்கி நிற்பது இல்லை

**கே:** தற்போதைய நிலையில் எம்மிடையே இருக்கும் பிளவுகளைப் பார்க்கும்போது நீங்கள் சொல்வது சரிபோல்தான் தெரிகிறது. ஆனால் நாங்கள் காலம் வரட்டும் என்று மௌனமாக இருக்க எங்களை ஒரேயடியாக சிங்களம் துடைத்தழித்துவிடாதா?

**ப:** எமது பதிலை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள் என்று நினைக்கிறோம். கால நீரோட்டம் எமக்கான அரசியலை அடையாளம் காட்டும். வரலாறு ஒருபோதும் ஓரிடத்தில் தேங்கி நின்று விடுவதில்லை. அப்படி ஒரு காலகட்டத்தை நாங்கள் இப்போது நெருங்கிவிட்டோம் என்றே நம்புகிறோம். ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பும் அதையொட்டி இனப்படுகொலையின் இரு சூத்திரதாரிகள் எதிர் வேட்பாளர்களாக மாறியிருப்பதும் முள்ளிவாய்க்காலிற்குப் பின்னான எமது அரசியலில் முக்கியமான கட்டம். இந்த இடத்தில் நாம் ஒரு அரசியலைச் செய்ய முடியும்.

புலிகளின் தோல்விக்கு எமது தரப்பிலேயே ஆயிரம் வியாக்கியானங்கள் கற்பிக்கப்படுகின்றன.

அதில் முதன்மையானது - புலிகள் மாறிவரும் உலக ஒழுங்கைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் அதன் நிமித்தமாக 2001 புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு சரணடைந்திருக்க வேண்டும் என்றெல்லாம் வாய்க்கு வந்த வாதமெல்லாம் வைக்கப்படுகிறது. வீங்கிப்பெருத்தமூளைகளை வைத்து 'பிரேத பரிசோதனை' அறிக்கை தயார் செய்துகொண்டிருக்கிறார்கள் மேற்படி அதி மேதாவிகள்.

## ஜனாதிபதித் தேர்தலின் கனம்

இவையெல்லாம் ஒரு வாதத்திற்கு சரி என்றே வைத்துக்கொள்வோம். மாறிவரும் உலக ஒழுங்கைக் கவனத்தில்கொள்ளும், உலக அரசியல் வரைபடத்தைக் கிரமமாக உள்வாங்கிய அதி மேதாவிகள் ஏன் ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலின் கனதியைப் புரிந்துகொள்ளவில்லை?

ஆயுதப் போராட்டம் இனி சாத்தியமே இல்லை என்று அடித்துச் சத்தியம் செய்யும் இவர்கள், இலங்கைத் தீவில் தமிழர்களின் அரசியல் தீர்விற்கு எதை முன்மொழிய விரும்புகிறார்கள்? சந்தர்ப்பவாத, அடிபணிவு, அவல அரசியலில் ஓர் இனத்தையே முழுமையாகச் சிக்கவைத்துக் குழிதோண்டிப் புதைக்க இவர்கள் விரும்புகிறார்கள். அத்துடன் பிரபாகரனை கொடுங்கோலனாக்கிச் 'சாகடிப்பதற்குத்தான்' உலக ஒழுங்கிலிருந்து உள்ளூர் ஒழுங்குவரை

[12ஆம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுபீட்சமும் சமாதானமும் நிலவ ஈழத்து சிதம்பரப் பெருமான் அருள்வாராக

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதி அந்தமற்ற எம்பெருமான், வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களை நீக்கியருளும் பொருட்டு ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்பெறும் காரைநகர் சிவன்கோயிலில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரராக எழுந்தருளி வீற்றிருக்கின்றார்.



இன்று இந்த ஆலயத்தில் தேர்த்திருவிழா. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தருள எம்பெருமான் திருத்தேரிலே ஆரோகணித்து அழகுப் பவனிவரும் அற்புதக்காட்சி கண்கொள்ளாக்காட்சி.

பிறக்கவிருக்கும் புத்தாண்டு முதலாக ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் சுபீட்சமும் சமாதானமும் நிலவும் வகையில் சுகமே இருக்க வேண்டுமென இன்று ரதத்திலே எழுந்தருளும் ஈழத்துச்சிதம்பரப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பேருவகை அடைகின்றோம்.

பஞ்சரதப் பவனிவரும் பஞ்சமூர்த்திகளும் பக்தகோடிகளுக்குப் பரிபூரணமான திருவருட்சக்தி கிட்டும் வகையில் அருள்பாலிக்க வேண்டும் என எல்லாம் வல்ல நமது பரம்பொருளான எம்பெருமானுடைய பாதக்கமலம் பணிந்து நல்லைக் குருமணியையும் வழுத்தி சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

தேரிலே வரும் தேவாதி தேவனான சிவபெருமானுடைய அருட் கடாட்சத்தால் அடியார்கள் அனைவரும் அல்லல் நீங்கி ஆனந்த சுகவாழ்வு வாழப் பிரார்த்தித்து அருளாசிகளை நல்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## சிவாகமநெறி தவறாது நடைபெறும் பூசை விழாக்கள்

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று வடமொழி வேத சிவாகம நெறி தவறாது பூசை விழாக்கள் நடைபெறும் ஈழத்துச் சிதம்பர புண்ணிய ஷேத்திரத்தில் வருடத்தில் மூன்றுமுறை நடைபெறும் மஹோற்சவத்தில் சாந்தீக மஹோற்சவமாகிய திருவெம்பாவை உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும் இவ்வேளையில் இன்று காலை தில்லைக்கூத்தன் சிவகாமி அம்பாள் சமேதராகவும் ஏனைய பரிவார மூர்த்தங்களோடும் பஞ்சரதத்தில் பவனிவரும் கண்கொள்ளாக் காட்சியினையும்





"ஆர்த்த பிறவித்துயர் கெட நாம்
ஆர்த்தாடும் தீர்த்தன் நற்தில்லைச் சிற்றம்பலத்தே
தீயாடும் கூத்தன்"

இரவு நடைபெறும் ஆருத்திரா அபிஷேகத்தினையும் நாளை மாலை நடைபெறும் திருவூடல் விழாவினையும் அடியார்கள் யாவரும் தரிசனம் செய்து சகல சௌபாக்கியங்களோடும் வாழ எம்பெருமான் திருவருளை இறைஞ்சி ஆசி கூறுவதில் பெருமை அடைகின்றோம்.

ஆ.அம்பலவிமுருகன், மூ.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தாக்கள்.




## கண்கொள்ளாக் காட்சி

மலர் என்றால் தாமரை என்பது போல் கோயில் என்றால் சிதம்பரத்தையே குறிக்கும். சிவத்தலமாகிய சிதம்பரத்திற்குச் சென்று வழிபாடு இயற்ற முடியாத பக்தர்கள் ஈழத்துச் சிதம்பரநாதனை சேவித்து உய்வடைகின்றார்கள்.

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ளது காரைநகர். இங்குள்ள திண்ணபுரத்தில் உள்ள சிவத்தலமே ஈழத்துச் சிதம்பரமெனப் போற்றப்பட்டு வருகின்றது. திருவாதிரை உற்சவம் ஈழத்துச்சிதம்பரத்தில் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் சைவ மக்கள் அனைவரும் ஈழத்துச் சிதம்பரத்தை நோக்கி ஓடுகின்றனர். காரைநகர் மக்களுக்கு திருவாசகமே பேச்சும் மூச்சும் ஆகும். இந்த அனுபவத்தை அங்கு நேரில் காணமுடியும். காவடி எடுத்து ஆடுவார்கள். சொற்பொழிவுகளைக் கேட்டு நயப்பார்கள். ஆனந்த நடராஜனின் திருக்கூத்தைக் கண்களினால் பருகுவார்கள். இக்காலத்தில் இவ்வாறு பலரும் காட்சியளிப்பார்கள். பொன்னம்பலவன் திருக்கூத்திலே திளைப்பவர்கள் பலர். அங்கு நடைபெறும் பக்திபூர்வமான பூசையிலே பங்குபற்றுபவர்கள் பலர். வீதிகள் எங்கும் அடியார் கூட்டம் திருவாசகத்தை ஓதி, ஓதி வலம் வரும். மார்கழி மாதம் ஆகையால் மழையும் பனியும் குளிரைத் தந்துகொண்டிருக்கும். ஆனாலும் பக்தர் கூட்டம் இறைவனையே பாடுவதும் காவடி ஆடுவதும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை

**ஈஸ்வரன் றேடர்ஸ்**
**ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை**
இன்றே நாடுங்கள் உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்.
இல: 69,115 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2813, 021 222 2437

**சிங்கப்பூர் ஜுவல்லறி**
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஈ.எஸ்.பி.நாகரத்தினம் சக நிறுவனம்**
**கஜமுகன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
சகலவிதமான கட்டடப்பொருள்களும் மோட்டார் சைக்கிள், சைக்கிள், அதற்குரிய உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல:50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ முருகன்**
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**வெங்கடேஸ்வரா**
சைக்கிள், அதற்குரிய உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
125 A, 127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8306
**வெங்கடேஸ்வரா ரான்ஸ் போட் சேர்விஸ்**
கிளை:- 127,Old Moor Street, Colombo -12.



பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ[து] இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ [illegible]

**ஏகாம்பரம் புடைவை மாளிகை**
72 (9), பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

**சீமாட்டி புடைவைக்கடல்**
122, [illegible]ன்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**தி.தெய்வேந்திரம்**
பல்பொருள் வாணிபம்
63,95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## அற்புதம் வாய்ந்தது மூர்த்தியின் திருவுருவம்



காரைநகர் சைவ ஆலயங்கள் அனைத்திற்கும் இருதயம்போல் விளங்குவது இங்குள்ள சிவன் ஆலயமாகும்.

இங்கு ஆலயக் கிரியைகள் யாவும் சிதம்பரத்தைப் பின்பற்றியே நடைபெற்று வருகின்றன. எனவே ஆலயம் அமைந்துள்ள தலம் ஈழத்துச் சிதம்பரம் என்றும் பெயரைப் பெறலாயிற்று.

இங்குள்ள நடராஜர் மூர்த்தியின் திருவுருவம் மிகவும் அற்புதமானது. பதஞ்சலி, வியாக்கிரமபாதர் என்னும் முனிவர்களுடன் கூடியது. இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடராஜர், அம்பிகை சமேதரராக அமைந்திருக்கும் பாவனை உள்ள திருவுருவம் இந் தியாவிலே கூட ஒரு சில தலங்களில்தான் உள்ளன. இவ்வாறு சிறப்புப் பொருந்திய நடராஜர் ஈழத்துச் சிதம்பரத்தில் இருந்து அருளாட்சி புரிகின்றார்.

மார்கழித் திருவாதிரையின்போது சைவ உலகம் சிதம்பரத்தை நோக்கும் எனினும் பல காரணங்களினால் அங்கு செல்ல முடியாதவர்கள் அதே கூத்தப்பெருமான் ஈழத்துச் சிதம்பரத்தில் காட்சி அளிப்பதால் இங்கே வந்து எம்பெருமானை வழிபட்டு மனநிறைவுடன் வாழ்கின்றனர்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக் கும் திருவாதிரை விழாவின் ஓர் அங்கமாகிய இர தோற் சவம் இன்று நடைபெறுகின்றது. நடராஜப் பெருமானும், சிவகாமசுந்தரி அம்பாளும் ஆண்டி கேணி ஐயனாருடனும் ஏனைய பரிவார மூர்த்திகளுடனும் ஐந்து தேர்களில் வீதிவலம்வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன்றைய பஞ்சரதப் பவனியையும் தொடர்ந்து இடம்பெறும் ஆருத்ரா அபிஷேகத்தையும், ஆருத்ரா தரிசனத்தையும் கண்டுகளித்து இறைவன் திருவருளைப் பெற்றுய்ய எம்பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசிகூறி அமைகின்றேன்.

**வீ.ஈஸ்வரக்குருக்கள்,** *பிரதம சிவாச்சாரியார்.*



## திண்ணைபுரப் பதியின் தேர்

திண்ணை புரப்பதியின் தேர்இன்று: காரைநகர்
மண்ணிருந்து இந்த மாநிலத்தை புனிதமாக்கி
எண்ணில்லா அற்புதம் புரிந்து இடர்களைந்து
பண்ணோடு திருவெம் பாவை படித்துருக
விண்ணோதும் பாணர விழிதிறந்து ஈசன்.....நம்
முன்வந்தருள் புரிவான்; மோன ஞானம் நல்கிடுவான்!
வண்ண மணிமாடம், மண்டபங்கள், புதுப் பொன்னாய்
மின்னுகையிற் தேரேறி வெற்றி நமக்கருள்வான்

மார்கழியின் குளுமை மனதைக் குளிரவைக்கும்
மாரிமழை வெள்ளத்துள் தேர்ஐந்து அணிவகுக்கும்
ஊரே அருளமுது அருந்தி வடம்பிடிக்கும்
ஆனந்தக் கண்ணீரை.... 'அரனின்' எழில் கண்ட
யாவரது கண்களும் பொழிய நிலம் சிலிர்க்கும்
ஈழத்துச் சிதம்பரத்தில் குடியிருக்கும் ஈசனவன்
பாதத்தில் நாமும் பணிவோம்; நம் முன்வினைகள்
யாவும் விழும்; அமைதி மழை மண்ணில் நிதம் பொழியும்!

**இ.த.ஜெயசீலன்,**
*உதவி அரசாங்க அதிபர், காரைநகர்.*

## ...சி தரும் பஞ்சரதப் பவனி

*தர்ஷிகா*

வீரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன் திருநாமம்
தரிப்பார் பொன்னம்பலத்தாடும்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே!

திருவாசகத்தில் கோயில் மூத்த திருப்பதிகத்தில் அமைந்த பாடல் இதுவாகும். அம்பலத்தாடும் அப்பனையும் அம்மையையும் முற்றாக அனுபவித்தவர் மாணிக்கவாசகர். அவரே அழுது அழுது எம் பெருமான் திருவடியை அடைந்தவர் ஆவார். எனவே கூத்தப்பெருமானையும் மணிவாசகப் பெருமானையும் ஒரு சேர வணங்கி ஆனந்தம் அடைவோமாக. அந்தவகையில் பக்திப் பரவசமாக நடைபெறும் உற்சவத்தில் பஞ்சரதம் பவனிவரும் விழா சிறப்பானது. ஆடலே புரியும் ஆனந்தக் கூத்தன் சிவகாம சுந்தரியுடனும் பரிவார மூர்த்திகளுடனும் தேரில் ஆரோகணிக்க வரும்போது அந்தணர்கள் வேதம் ஒலிக்க, சங்கு நாதம்முழங்க நாதஸ்வரத் தவில் வித்துவான்கள் கான இசைபொழிய, பக்தர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய ஆனந்தக் கூத்தாடி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

புதிய அழகிய சித்திரத் தேரில் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் ஆரோகணிக்க ஆண்டிகேணி ஐயனாரும் புதிய தேரில் ஆரோகணிக்க ஐந்து தேர்கள் பெரும் வீதியாகிய மூன்றாம் வீதியில் ஆடி அசைந்து பவனிவரும் காட்சி மனத்திற்கும், கண்ணுக்கும் இனிய காட்சியாகும்.

**சிவகணேசன் ஸ்ரோஸ்**
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**லக்சுமி பென்சி**
அழகுசாதனப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
மைலன் கட்டடம், 271, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**கே.கே.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்**
318 (A),
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ரூபா பன்முக வர்த்தக நிலையம்**
இல.104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி.: 011 5830217, 011 5830219, தொலைநகல்.: 011 2392412
GLAXO SMITHKLINE LTD., HEMAS MARKETING (PTE) LTD.
RECKITT BENCKISER (LANKA) LTD., A.B.MAURI LANKA LTD.
CEYLON BISCUITS (LANKA) LTD.
மேற்குறிப்பிட்ட நிறுவனங்களது விற்பனைப் பொருள்களுக்கு ஏக விநியோகஸ்தர்கள்

**மகாராணி பட்டுச்சோலை,**
50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**அற்புதா ரேடிங் கொம்பனி, மல்ரிப் பிளேஸ்**
சகலவிதமான ஆடம்பரப்பொருள்கள், துவிச்சக்கரவண்டி அதன் உதிரிப்பாகங்கள், விட்டுத்தளபாடங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

**லலிதா புடைவை மாளிகை**
இல: 5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்**
இல:57,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**திருமுருகன் கொம் நெற்**
259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.

**கணேசன் ஸ்ரோஸ்**
201, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிகளைக் கொண்டே .......

[9ஆம் பக்கத் தொடர்ச்சி]

### இழுக்கிறார்களே ஒழிய வேறொன்றுமில்லை

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கச் சொல்லி சிலர் சொல்கிறார்கள். வேறு சிலரோ மஹிந்த ராஷபக்ஷ அவர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்கின்றனர். இவை கூடப் பரவாயில்லை. வேறு சிலர் சொல்வதுதான் சினத்தை மூட்டுகிறது. நாம் எமது ஒற்றுமையை உலகுக்கு உணர்த்த ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கிறார்கள் அவர்கள். இன்று உலகிலேயே உள்ள அயோக்கியத்தனமான சொல்லாடல் ஒன்றென்றால் 'ஈழத் தமிழர் நாம் ஒற்றுமையாக இருக்கிறோம்' என்பதுதான். நாங்கள் ஒற்றுமையாக இருந்து புலிகளைக் காலைவாரியது காணும்.

நாம் முன்பே குறிப்பிட்டது போல் தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதில் ஸ்ரீலங்கா மட்டத்தில் மட்டுமல்ல உலகளவிலும் நிறைய இராஜதந்திரங்களும் அரசியல் சாணக்கியத்தனங்களும் நிறைந்திருக்கின்றன. இப்போது பந்து எம்மிடம். நாம் ஒற்றுமையாக இருந்து அரசியல் ரீதியாகத் தேர்தலின் வழி - ஜனநாயகத்தின் அடிப்படையில் - இதை 'எதிர்கொள்வதென்பது நம்மை நாமே ஏமாற்றுவதுபோலானது.

### இதுவே இராஜதந்திரம்

நாமும் இராஜதந்திரங்களின் அடிப்படையில் சாணக்கியத்தனங்களை பிரயோகிக்க வேண்டியதுதான். எம்மை அழித்தவனுக்கு வாக்களிப்பதா என்ற வாதம் எல்லாம் இங்கு எடுபடாது. நாங்கள் வெளிப்படையாகவே சொல்கிறோம். சரத்பொன்சேகாவுக்கு நாம் வாக்களித்து வெற்றிபெறச் செய்யவேண்டும். மஹிந்தவின் வாக்கு வங்கியை உடைப்பதற்கு நாம் என்ன அரசியல் எல்லாம் செய்ய முடியுமோ செய்ய வேண்டியதுதான்.

முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் வழி ஒருமித்த ஏகாதிபத்தியமாய்த் திரண்டிருந்த சிங்களம் இப்போது இரண்டாய் உடைந்திருக்கிறது, நாம் கனவில் கூட இப்படியொரு நிகழ்வு நடைபெறும் என்று நினைக்கவில்லை. இதை நாம் எமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதில் மஹிந்ததான் எமது முதன்மையான எதிரி. மஹிந்த தமது பதவியை இழக்கும்வரை எமக்குக் கிடைக்கப்போகும் இராஜதந்திர அனுகூலங்கள் மிக முக்கியமானவை.

தற்போது அரசியல் நிலைவரப்படி ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவிற்குப் பாதகமான முடிவுகள் கிடைக்குமாயின் இனப்படுகொலையின் சூத்திரதாரிகளான மஹிந்தவும் அவரது சகோதரர்களும் சரத்பொன் சேகாவால் கைது செய்யப்படலாம். அல்லது நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம். அல்லது அவர்களாகவே வெளியேறலாம் என்ற பலவகையான கருத்துக்கள் உலா வருகின்றன. எது நடந்தாலும் நமக்கு அது ஆதாயம்தான். அத்தோடு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீழ்ச்சிக்கு துணை நின்ற டக்ளஸ்,கருணா போன்றவர்களும் சரத் பொன்சேகாவின் இலக்குகளாக மாறியிருக்கிறார்கள். இவர்கள் இருவரில் குறிப்பாகக் கருணா நாட்டைவிட்டு தப்பியோடலாம் அல்லது சரத்பொன்சேகாவால் கைது செய்யப்படலாம் அல்லது கொல்லப்படலாம் என்றே ஆருடம் கூறப்படுகிறது. எதிரிகளைக் கொண்டே எதிரிகளை அழிக்கும் சூழ்ச்சி தமிழர்களுக்கு ஒரு வாய்ப்பாகக் கிடைத்திருக்கிறது.

எனவே, சரத்பொன்சேகா என்ற எமது ஒற்றை எதிரியை வெல்லச் செய்வதன் மூலம் எமது பல எதிரிகளை நாம் வெளியேற்றுகிறோம். ஒரு வகையில் எமது அடுத்த கட்ட அரசியலுக்குள் கால் எடுத்து வைக்கிறோம் என்றுதான் சொல்லவேண்டும்.

### அபத்த முயற்சி

எங்களுக்கு ஒன்று புரியவேயில்லை. நாம் ஸ்ரீலங்கா என்ற தேசத்துடன் சேர்ந்து வாழ முடியாது என்று கூறி தமிழீழம் என்ற ஒரு நிலப்பரப்பை எமக்கானதாக வரையறுத்து தனிநாடு கேட்டுப் போராடியவர்கள். ஸ்ரீலங்கா என்ற தேசத்தின் ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்துவது எவ்வளவு அபத்தம்? இது எமது நீண்டகாலப் போராட்டத்தை - அதன் நியாயத்தை - நீர்த்துப்போகச் செய்யும் முயற்சி.

நாம் இனி ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்த முடியாது என்பது எவ்வளவு உண்மையோ, அதேயளவு உண்மை ஸ்ரீலங்கா என்ற தேசத்திற்குள் நாம் எமக்கான தனித்துவ அரசியலையும் செய்ய முடியாது என்பதும், ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது, நாம் பேசித் தீர்ப்போம் என்று சொல்பவர்கள் இதைக் கவனத்தில் கொண்டவர்கள் மாதிரியே தெரியவில்லை.

### உலகுக்கு உண்மையை நிரூபிக்க முயல்வோம்

எமக்கு இருக்கிற ஒரே வழி முள்ளிவாய்க்கால் படுகொலைகள் 'போர்க்குற்றங்களின் வழி நடந்தேறிய இனப்படுகொலைகள்' என்பதையும், அது ஓர் இனச் சுத்திகரிப்பு என்பதையும் இந்த உலகுக்கு நிரூபிப்பதுதான். உலகுக்கு அது தெரியாது என்றல்ல. அவர்கள் கண்முன்னால்தான் இந்தப் படுகொலைகள் நடந்தேறின. பிராந்திய- பூகோள அரசியலின் ஒரு விளைவும் மௌனமும் அது. இப்போது அதே பிராந்திய பூகோள அரசியல் ஸ்ரீலங்காவிற்கு எதிராகத் திரும்பியிருக்கிறது. நாம் இதைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

எமது அடுத்த கட்ட அரசியல் என்பதே இந்த இனப்படுகொலையை அம்பலப்படுத்துவதும் அதன்மூலம் எமக்கான நியாயத்தை சர்வதேசத்திடம் கோருவதுமாகும். இப்போதைய பூகோள அரசியல் எமது கருத்தை செவிமடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. இனம்,நிலம், மொழி, பண்பாடு என்ற அடிப்படையில் நாம் அழித்தொழிப்புக்குள்ளானமையை நிறுவுவோமானால் எமது தாயகம்,தேசியம், சுயநிர்ணயம் குறித்த எமது அரசியல்கனவு நிறைவேறும்.

முன்பே குறிப்பிட்டதைப் போல் உலகுக்கு இது தெரியாததல்ல. ஆனால்,தற்போது ஆதாரங்களை எதிர்பார்க்கிறார்கள். ஆதாரங்களை இந்த ஜனாதிபதித் தேர்தலினூடாக இனப்படுகொலையின் சூத்திரதாரிகளே வழங்கத் தயாராகி வருகிறார்கள். நாம் அதற்கு வழி சமைத்துக் கொடுத்தால் மட்டும் போதுமானது. ஆயுதமும் தூக்கத் தேவையில்லை. மக்களிடம் நிதியும் திரட்டத் தேவையில்லை. இறுதி இலக்கை நோக்கி நாம் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது யாரும் உதவி செய்யத்தேவையில்லை. உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதும்.

சரத் பொன்சேகா வெல்லும்போது அவரது நடவடிக்கைகள் இயல்பாகவே ஒரு இராணுவத் தோற்றத்தைக் கொடுக்கும். அவர் பதவியைத் துறந்து தேர்தலின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டாலும் உலகத்தைப் பொறுத்தவரையில் ஒரு இராணுவ ஜெனரலின் ஆட்சி நடைபெறும் தேசமாகவே ஸ்ரீலங்கா பார்க்கப்படும். இந்த அடிப்படையே எமக்குப் போர்க்குற்றம், இனப்படுகொலை தொடர்பான சார்பான விளைவுகளை உருவாக்கும். அவரே முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் பங்குதாரர்களில் ஒருவர் என்பது எமக்கு மேலதிக அனுகூலங்களைக் கொடுக்கும். ஜனாதிபதித் தேர்தல் எமக்குக் கற்றுத்தருகின்ற தெளிவான அரசியல் இது.

### எதிர்கால வழி

இப்போதே போதுமான அளவு ஆதாரங்களை சரத் பொன்சேகா வழங்கிவிட்டார். வரும் நாட்கள், தேர்தலின் தோல்வி மறுதரப்பிடமிருந்தும் பல உண்மைகளை வரவழைக்கும். நாம் அவற்றைச் சேகரித்து உலக அரங்கை நோக்கிக்கொண்டு நகர்த்துவதில்தான் எமது எதிர்காலமே இருக்கிறது.

ஆனால் நாம் குண்டுச் சட்டிக்குள் குதிரையோடிக் கொண்டிருக்கிறோம்.போதாததிற்கு எமக்கு நாமே குழிபறிப்பதிலேயே காலத்தையும் கடத்திச் செல்கிறோம்.

நாம் முன்பே கூறியதுபோல நாம் ஒன்றும் செய்யத்தேவையில்லை.'ஐணணனுணு இடிஞுது கணுறனுண்ண்' இதைத் தூசிதட்டி கேள்விக்கணைகளைத் தொடுக்கத் தொடங்கி விட்டது.' இடச்ணணனுடு ஊணிதனு' ஏற்கனவே வெளியான இனப்படுகொலை ஆதார ஒளிப்பிரதியை உண்மையானது என ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளது.

ஐ.நாவுக்கும் ஸ்ரீலங்கா அதிகாரிகளுக்குமிடையில் அறிக்கைப் போர் தொடங்கி விட்டது. இது வரும் நாட்களில் விரிவாக்கம் பெறும். நாம் செய்யவேண்டியது மீண்டும் மக்களை வீதியில் இறக்குவதும் அவர்களுக்கு ' குண்டுச்சட்டி' அசியல் செய்பவர்கள் உபத்திரவம் தராமல் பார்த்துக் கொள்ளுவதுமாகும். மீதியை வரலாறு எழுதும்.

கே: இதை தலைவர் பிரபாகரனின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிங்களம் வந்து சேர்ந்து விட்டது என்று வரையறுக்கலாமா....?

ப: அப்படித்தான் நாங்கள் கருதுகின்றோம். புலிகளின் தோல்விக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஈழச்சூழலில் புலிகளை ஆதரித்தவர்கள் பலர் இன்று அந்தத் தோல்விக்குப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் காரணமாகக் காட்டும் அபத்தம் எல்லாம் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. ஆனால் ஈழச்சூழலுக்கு வெளியில் உலக அளவில் ஆரோக்கியமான முறையில் புலிகளின் பின்னடைவு விரிவாக ஆராயப்படுகிறது. ஏனெனில், எதிர்ப்பு அரசியல் என்ற முறையில் உலகின் தனித்துவமான விடுதலை அமைப்பாக புலிகள் இருந்ததை ஏற்றுக்கொள்ளும் இந்த ஆய்வுகள், பல விமர்சனங்களின் மத்தியிலும் தலைவர் பிரபாகரனது போராட்ட முறைகளையும் அது மாறிவரும் உலக ஒழுங்கின் பிரகாரம் எப்படி அழிவுற்றது என்பதையும் ஆராயத் தொடங்கியிருக்கின்றன.

மாறுதல் கால பயங்கரங்கள் (Horror of Transition) துயர் சார் அரசியல் (Politics of Agony) தாள முடியாத நிகழ்வியல் (Unbearable Reality) என்ற அரசியல் தத்துவார்த்த சொல்லாடல்களினூடாக முள்ளிவாய்க்காலில் வைத்துப் புலிகள் அழிக்கப்பட்டதை ஒரு கருத்தியல் அடையாளமாகக் கொண்டுவருகிறார்கள். இந்த ஆய்வுகள் தலைவர் பிரபாகரனை விமர்சித்தபோதும் ஒரு மேன்மையான இடத்திலேயே அவரை வைத்து ஆராய்கின்றன. திரும்பிப்போக முடியாத ஒரு நிலை என்று இதை வர்ணிக்கின்றார்கள்.

இங்கு ஈழச் சூழலிருந்து விமர்சனம் செய்ய முறீபடுபவர்கள் ஒரு விடயத்தை மறந்து விடுகிறார்கள். பிரபாகரன் நடத்தியது ஆயுதப் போராட்டம். அது கொல்லுதலையும் கொல்லப் படுதலையும் ஆதாரமாகக் கொண்டது. வெற்றியாயினும் தோல்வியாயினும் அங்கு மிஞ்சுவது அழிவுதான். உடலிலே குண்டுகளைக் கட்டிக்கொண்டு போய் சிதறுபவர்களின் உயிர்த் துறப்பில் நாம் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்தோம். இப்போது தூற்றுபவர்கள் இதை ஏன் முன்னுணரவில்லை?

இவர்கள் சூரியத்தேவன், வரலாற்று நாயகன், நெசவாளி என்று பிரபாகரனுக்கு சூட்டாத நாமமில்லை. முள்ளிவாய்க்காலுக்கு முன்புவரை பிரபாகரன் புகழ் பாடிய- அவரது போராட்டத்தை ஏற்றுக் கொண்ட- யாருக்குமே அவரை விமர்சிக்கிற தகுதியோ அருகதையோ கிடையாது. இன்று அதீத புகழ்பாடிய அவர்களே அவரை விமர்சிக்கவும் தலைப்படுகிறார்கள். இதைச் சந்தர்ப்பவாதம் என்றில்லாமல் வேறு எப்படியழைப்பது?

### பிரபா எதிர்பாராதது

பிரபாகரன் 15 வயதில் வீட்டை விட்டு வெளியேறும்போது பின்லேடன் இரட்டைக் கோபுரத்தைத் தகர்ப்பார் என்று முன்னுணர முடியாது. அன்றைய உலக ஒழுங்கின் பிரகாரம் சிங்கள இனவாத அரசை எதிர்ப்பதற்கு ஆயுதப் போராட்டம்தான் அவருக்கு வசதியைக் கொடுத்தது.

காலத்திற்குக் காலம் மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப தமது செயற்திட்டங்களை அவர் மாற்றிக்கொண்டு வந்தார் என்பது உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கே புரியும். ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக அவர் சமாதானத்தைக் கடைப்பிடித்தமையை பலர் மறந்து கதைக்கிறார்கள். அதுவே அவருக்குப் புதைகுழியாகியதையும் மறந்துவிடுகிறார்கள்.

இதையெல்லாம் அவர் ஓரளவிற்கு முன்னுணர்ந்துள்ளார் என்பதைத் தற்போது ஆராயும்போது புரிகிறது. தாம் ஒரு மரபு'வழி இராணுவமாக இனி நிலையெடுக்க முடியாது என்பதை உணர்ந்தவராகவே அவர் பின்வாங்கியிருக்கிறார். அந்தப் புரிதலினூடாகவே அவர் ஓர் அரசியலை முள்ளிவாய்க்காலில் வைத்து செய்திருக்கிறார் என்று புரிகிறது. அது என்னவென்பதை காலம்தான் நமக்கு உணர்த்தும்.

இன்றைய சிங்களத்தின் உடைவு அதை லேசாகக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு வாதத்திற்கு புலிகள் இராணுவத்தை விரட்டியடித்து முழுத் தமிழீழ நிலப்பரப்பையும் மீளக் கைப்பற்றுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தப் போரின்போது கூட முள்ளிவாய்க்காலில் வைத்து கொல்லப்பட்டதற்கும் அதிகளவிலான பொதுமக்களையும் போராளிகளையும் இழந்தே நாம் அதை அடையவேண்டியிருந்திருக்கும். ஆனால், இன்றைய உலக ஒழுங்கின் பிரகாரம் ஓர் அந்நிய இராணுவத்தை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கும் அல்லது அதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருக்காது. மீண்டும் ஒரு போருக்கு நாம் முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆனால், இன்று பிரபாகரன் தனது தீர்க்கதரிசனத்தின் சாய்வுகளையும் சறுக்கல்களையும் மீறி எமது விடுதலையை ஒரு முக்கியமான கட்டத்தில் கொண்டுவந்து விட்டிருக்கிறார். தானும் 'மறைந்து' தனது குடும்பத்தினரையும் தளபதிகள், போராளிகள், அவர்களின் குடும்பத்தினர் என்று இந்தப் போராட்டத்தை மூன்று தசாப்தங்களாகத் தாங்கிய அனைவரையும் காவு கொடுத்து, ஒரு இனப்படுகொலையின் - இனச்சுத்திகரிப்பின்- அவர்கள் சாட்சிகளாக மடிந்திருக்கிறார்கள்.

இனம், நிலம், மொழி, பண்பாடு என்ற அடிப்படையில் தமிழன் அழித்தொழிப்புக்குள்ளானதை நிறுவி,எமது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அரசியல் கனவை நிறைவேற்றுமாறு சொல்லிவிட்டு'மறைந்திருக்கிறார்' அவர். இதன் பின்னணியில் இதற்கு ஒரு சர்வதேச அங்கீகாரம் இருக்கிறது.

இந்த அடிப்படையில் பார்த்தால் அவர் 'மறைந்தும்' சிங்களம் அவரின் நிகழ்ச்சி நிரலுக்குள்ளே சிக்கிச் சுழல்வது போல்தான் தெரிகிறது. இதுவும் முள்ளிவாய்க்காலில் வைத்து பிரபாகரன் சிங்களத்திற்கு வைத்த 'இறுதியும்' அறுதியுமான 'செக்'!

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 16★08★1982







அன்னையின் மடியில் 27★09★1986

அற்புததேவன் காங்கேசன்

அன்னையின் மடியில்: 25★12★1952
ஆழியின் பிடியில்: 26★12★2004
**முத்துக்கிருஸ்ணர் அற்புததேவன்**

அற்புததேவன் யதீசன்

எம் குடும்பத்தின் குலதீபங்களே! நீங்கள் இல்லா எமதில்லம் ஒளியிழந்து போய் ஐந்தாண்டு ஆனதுவோ - உங்களை ஈன்றவள் தினமும் கதறித் துடிக்கின்றாள். உங்கள் நினைவுகள் அடி நெஞ்சில் தீயை மூட்டுகின்றன. ஆண்டுகள் பல சென்றாலும் அழியாத சொத்து உம் நினைவுகள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாவடி வடக்கு, கொக்குவில். குடும்பத்தினர்.

(சி/586586)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
[illegible]
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## ஓராண்டு நினைவலைகள்



**திருமதி ஆறுமுகம் தையல்நாயகி**

மலர்வு:10★08★1932 உதிர்வு:02.01.2009

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும் அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எமது நினைவில் அகலவில்லை
இந்நாளில் இறைவனை வணங்கித் துதிக்கின்றோம்

என்றும் நினைவுடன்:
அன்புக் கணவர்
கா.ஆறுமுகம் V.C
குடும்பத்தினர்.

கைதடி மேற்கு,
கைதடி. (91958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடையுடன் கூடிய ஒரு தலைப்பாகை...
இதுதான் அவன் உருவம்
அவனின் தலைக்கனம் என்பதெல்லாம்...
அவனின் தலைப்பாகையில்தான்
ஆனால்... என்னே பரிதாபம்....
சீறிக் கொண்டெழும்- அவனது
உக்கிர தணலை....
ஒரு துளி மழைத்துளி....
லேசாய் அடக்கிச் சென்றது....

சி.சஸ்ரூபி
இணை மருத்துவ விஞ்ஞானம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# தீ....குச்சி



# அமெரிக்கக் கழுகு



அமெரிக்காவின் தேசிய பறவையாக கழுத்து வெண்கழுகு விளங்குகின்றது. அமெரிக்காவில் மட்டும் காணக்கூடிய பறவை இதுவாகும். (bald eagle-Haliaetus Leucocepholus) இது கடற்கழுகு. ஆயினும் உள்நாட்டில் நதிகளையும், ஏரிகளையும் அடுத்துக் காணப்படும். நன்கு வளர்ந்த கழுகு ஒரு மீற்றர் வரையிலான நீளத்தையும், கபில நிறத்தையும் கொண்டதாக இருக்கும். இதன் கழுத்தும் வாலும் வெண்மையாக இருக்கும். அலகு, கண்கள், கால்கள் என்பன மஞ்சள் நிறமுடையவை. அமெரிக்க கழுகுகள் மீன்களுள்ள பகுதிகளைக் கண்டறிய கடற்பறவைகளைப் பின்தொடரும் இயல்பின. மீன்பிடிக்கும் பறவைகளிடமிருந்து மீனைக் களவாடியும், இறந்த விலங்குகளின் இறைச்சியையும் உண்ணுமியல்பின. நதிகளின் மத்தியிலுள்ள தீவுகளில் தனிமரத்தில் கூடுகட்டும். நீர் நிலைகள் மாசடைவதால் இந்தப் பறவைகள் பாதிப்புற்றுள்ளன.

அலாஸ்காவில் 1917-40ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஒரு லட்சம் கழுகுகள் வேட்டையாடப்பட்டன. மீன்பிடித் தொழிலுக்கு இவை தடங்கலாக உள்ளன என்பதால் இவ்வாறு வேட்டையாடப்பட்டன. ஆனால் இக்கழுகை வேட்டையாடக் கூடாதென அமெரிக்காவில் பாதுகாப்புச் சட்டமியற்றப்பட்டுள்ளது. அலாஸ்கா தவிர்ந்த அமெரிக்கப் பரப்பில் ஏறத்தாழ 5000 இவ்வகைக் கழுகுகள் இருப்பதாகக் கணித்துள்ளனர்.

சியாமினி தேவராசா
41, கொண்டலடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மாணவர் 1: கறுப்பாக இருக்கிற மேகம் மட்டும் ஏன் "ஸ்பீட்டாய்" போகுது?
மாணவர் 2: ஏனெண்டால் இது "கார் மேகம்" அதுதான்.

மாணவர் 1: எங்கட ரீச்சர் ரெம்ப நல்லவங்க!
மாணவர் 2: சனிக்கிழமை வகுப்பு வைச்சு எங்களை நித்திரையாக்கினாவே அதை வைச்சுத்தானே இப்படிச் சொல்கிறாய்.

அஞ்சு: இது பொங்கலுக்கு வாங்கின சட்டையா மஞ்சு?
மஞ்சு: இல்லை இது எனக்கு வாங்கின சட்டை.

லக்ஷி இளங்கோ,
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

# சிரிக்க வாங்க!



# தெரிந்த உயிரினம் பற்றி தெரியாத சில விடயங்கள்



* எறும்புகளில் 5037 இனங்கள் உண்டு
* உலகில் மனித இனம் தோன்ற முன்பே எறும்புகள் தோன்றி விட்டன
* எறும்புகளுக்கு 38 பற்கள் உள்ளன
* ஒரு புற்றில் ஒரு ராணி எறும்புதான் இருக்கும்
* காவல் எறும்புகளின் வாயில் பார்மிக் அமிலம் இருக்கும் இவைதான் மனிதரைக் கடிக்கும்
* எறும்புகள் தன் எடையைப் போல் 20 மடங்கு எடையைத் தூக்கும்
* எறும்பின் சராசரி வாழ்நாள் 55 நாள்கள் மட்டும்தான்
* எறும்புக்கு நுரையீரல் இல்லை சிறு துளைகள் மூலம் சுவாசிக்கும்
* நிலத்தடியில் வாழும் எறும்புகளுக்கு கண்கள் கிடையாது நிலத்திற்கு மேல் வாழும் எறும்புகளுக்கு சிவப்பு நிறம் மட்டுமே தெரியும்
* ராணி எறும்பு ஆயுட்காலம் முழுவதும் முட்டையிடும்.

சா.ஜிந்துஜா
கோண்டாவில்.

# சிந்தனைத் துளிகள்....

★ இன்று நீ சொல்லும் பொய்யானது நாளையும் உன்னைப் பொய் சொல்ல வைக்கும்.
★ அன்புக் கண்ணீர் துன்பம் தராது அலை முத்துக்களாக மாறிவிடும்.
★ பட்டமும் பதவியும் பெற்றுயர்ந்தாலும் கணவனுக்குப் பணிவதே பெண்ணுக்குப் பெருமை.
★ கண்ணாடிக்குமுன் நின்று பலமுறை பேசிப் பார்த்தவனுக்கு மேடையேறுவதில் தயக்கம் இருக்காது.
★ குருவை முறைப்படி அணுகுபவன் ஞான இன்பத்தைப் பெறுவான்.

சா.பரிசன்
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

## கேள்விக்கு என்ன பதில்? -55

சார்கோகேகாக்மான்சோகோகேகாக்சோபுனாகஞ்காமாக் (CHARGOGGAGOGGMANCHAUGGA UGGAGOGGCHAUBUNAGUNGAM AUGG) -என்றால் என்ன? சிலவேளைகளில் தவறுதலாக இப்படி அச்சாகிவிட்டதோ என்று எண்ணுவீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. இது ஏரியில் மறுபெயர். அந்த ஏரியின் பெயர்?

## கேள்விக்கு என்ன பதில்?-53இன் சரியான விடை

01. ஐந்து வளையங்கள்
02. அவை ஐந்து கண்டங்களையும் குறிக்கும்.

## கேள்விக்கு என்ன பதில்? 53 இல் பரிசு பெறுவோர்

01) சி.சுகந்தினி, கருணாலயம், திருநெல்வேலி
02) கோபாலகிருஷ்ணன் டினா பெரியமாவடி வீதி, சாவகச்சேரி
03) இ. கீர்த்தனா கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-....................................
முகவரி :-....................................
:-....................................
.................. ..................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




# இந்த வாரம் வரலாற்றில்

**டிசெம்பர் 25**



இயேசுவின் பிறப்பு நிகழ்ந்த டிசெம்பர் 25 ஆம் திகதியை உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் 'கிறிஸ்மஸ்' பண்டிகையாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

**டிசெம்பர் 26**

மேரி கியூரி மற்றும் பீரேகியூரி தம்பதியினர் 1898 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி விஞ்ஞானத் துறையில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய 'ரேடியத்தைக்' கண்டுபிடித்தனர்.




**டிசெம்பர் 27**



தன்னுடைய விஞ்ஞான ஆய்வுகளை, விரிவுகளை நடத்தும் நோக்குடன், கூர்ப்புக் கோட்பாட்டைக் கண்டறிந்தவரான 'சார்ள்ஸ் டார்வின்' 1831 ஆம் ஆண்டு டிசெம்பர் 27 ஆம் திகதி 'பீகிள்' என்ற [illegible] பயணத்தை ஆரம்பித்தார்.

**டிசெம்பர் 28**

மெக்ஸிக்கோ நாட்டின் சுதந்திரப் பிரகடனத்தை 1836 ஆம் ஆண்டு டிசெம்பர் 28 ஆம் திகதி ஸ்பெயின் நாடு ஏற்றுக் கொண்டது. அதுவரை காலமும் ஸ்பெயினின் கட்டுப் பாட்டிலேயே மெக்ஸிக்கோ இருந்து வந்தது.



**டிசெம்பர் 29**



கென்ரிபரி தேவாலயத்தின் 40 ஆவது பிஷப்பான சென்.தோமஸ் எ பெக்கட் அவரது தேவாலயத்துக் குள்ளேயே -இரண்டாம் ஹென்றி மன்னனின் கட்டளைப்படி 'நைற்' வீரர்களால் 1170 ஆம் ஆண்டு டிசெம்பர் 29 ஆம் திகதி கொல்லப்பட்டார்.

**டிசெம்பர் 30**

1922 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி சோவியத் யூனியன் நிறுவப்பட்டது. இது பின்னர் 1990 களின் முற் பகுதியில் சிதறுண்டு போனது.



**டிசெம்பர் 31**



பிரபலம் மிக்க லண்டன் 'பிக்பென்' கடிகாரக் கோபுரத்தின் ஒலியை 1923 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி பி.பி.ஸி. வானொலியில் முதன்முறையாக ஒலிபரப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மெய்வன்மைச் சங்கமும் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கமும் இணைந்து முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான தடகளப் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தின.

வலிகாமம் கல்விவலய ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் நிறைவில் விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இலங்கை மெய்வன்மைச் சங்கத் தலைவர் பன்னவெல நினைவுப் பரிசொன்றை வழங்குவதையும், பயிற்சி முகாமில் பங்கு கொண்டவர்களுடன் அமைச்சர் கலந்துரையாடுவதையும் முதல் இரு படங்களிலும், பயிற்சி முகாமில் கலந்துகொண்ட சிறுவன் ஒருவனுக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:- நேசன்)

### 13வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட்

# கொக்குவில் இந்துக் கல்லூரியை வீழ்த்தியது வவுனியா விபுலானந்தா

வலி.வடக்கு, டிசெ.31

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஆட்டம் ஒன்றில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரி 23 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் 13 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய விபுலானந்தாக் கல்லூரி 40.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. எஸ்.மகிந்தன் 37 ஓட்டங்களையும், பானுஜன் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விதுசன் 8.2 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் நிதர்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன்24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், விதுசன் 08 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 18 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

102 ஓட்டங்களைப் வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 40.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களைக் பெற்றுக் கொண்டது. நிக்ஷன் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

விபுலானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த நிரோசன் 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் ரஞ்சிதன் 06 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் பானுசன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

(50-86)

## இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெறும்.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(50-23-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
04 . 10 . 1926



அம்பிகை அடியில்
10 . 01 . 2009

ஆயுள்வேத வைத்திய கலாநிதி
**அமரர் தம்பையா மயில்வாகனம்**
(நயினாதீவு)
திதி: பூரணை

பேர்பெற்ற மருத்துவனாய் பெருமைபெற்று விளங்கியதால்
ஊர்மக்கள் எல்லோரும் உமைத்தேடிவந்தார்கள்
வேர் அறுந்த விருட்சங்களை விழுது விடச் செய்தவரே!
பார்போற்ற உன் நாமம் பல காலம் வாழுமையா!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 10.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பையா மயில்வாகனம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (31.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு அனைவரும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், [illegible]
பேரப்பிள்ளைகள், [illegible]

2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(சி/563577)


## கிராமங்களுக்கு இடையிலான ஓட்டப் போட்டி ஜனவரி மாதம் 9 ஆம் திகதி கரவெட்டியில்

யாழ்ப்பாணம், டிசெ.31

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் முதலாவதாக கிராமங்களுக்கு இடையே ஊடறுத்துச் செல்லும் ஓட்டப்போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டி வடமராட்சி, கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மேற் கொள்வது சம்பந்தமான கலந்துரையாடல் வடமாகாண விளையாட்டுத் திணைக் கள உதவிப்பணிப்பாளர் எஸ்.அண்ணாத் துரை தலைமையில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கடந்த 29 ஆம் திகதி நடை பெற்றது.

யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர், கரவெட்டிப் பிரதேச செயலர், விளையாட்டு அலுவலர்கள், கிராம அலுவலர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

முதற் கட்டமாக வடமராட்சி இளைஞர்களுக்கு இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கிராமங்களுக்கு இடையே குறுக்கறுத்து ஓடும் போட்டியை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து வடமாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு இடையே 12 மைல் குறுக்கறுத்து ஓடும் போட்டியை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (50-68-70)

## பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் சங்கானை விளையாட்டுக் கழகம் வென்றது

யாழ்ப்பாணம்,டிசெ.31

யாழ்.பல்கலைக் கழக மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை றக்கா வீதியில் அமைந்துள்ள மாவட்டக் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் சங்கானை விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கானை விளை யாட்டுக் கழக அணி மோதியது.

இதில் சங்கானை விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை 3:0 என்ற செற்கணக்கில் வெற்றிகொண்டது. (50-23-86)

## சென்றலைட்ஸ் வி.க. வெற்றி

வலி.வடக்கு,டிசெ.31

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை யிறுதி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்தி சனசமூக நிலைய விளையாட்டுக்கழக 'பி' அணியும் மோதிக்கொண்டன.

இப்போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 68:47 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழக அணியை வென்றது. (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.10.1986

★யாழ்.கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்படும் 'ஷெல்' தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும்படியும், அம் முகாமை அகற்றக் கோரியும் யாழ்.செயலக அதிகாரிகளும், ஊழியர்களும் வெளிநடப்புப் போராட்டம்.

★ மன்னார், அடம்பன் மோதலின்போது விடுதலைப்புலிகளால் யுத்தக் கைதிகளாகக் கைதுசெய்யப்பட்ட இரு இராணுவ வீரர்கள் சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

17.10.1986

★அமெரிக்க வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் இராணுவ உதவி, கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படுமெனக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி தெரிவிப்பு.

★ இலங்கைத் தமிழரில் பெரும்பாலோர் போராளிகளுக்கு ஆதரவாகவே உள்ளதாக இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஸ் பண்டாரி தெரிவிப்பு.

18.10.1986

★புங்குடுதீவு - குறிகாட்டுவான் கடற்பகுதியில் படகில் சென்ற 13 தமிழர்கள் கடற்படையினரால் குத்தியும் வெட்டியும் படுகொலை.

★பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசுக்கு உதவ அமெரிக்கா முன்வந்துள்ளதாகத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.

19.10.1986

★ தம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட இரு இராணுவத்தினரை விடுவிக்க வேண்டுமானால் அரசு சிறைப்பிடித்து வைத்துள்ள இரு போராளிகளை விடுவிக்க வேண்டுமென்ற விடுதலைப் புலிகளது நிபந்தனை குறித்து மக்கள் கட்சிச் செயலாளர் விஜேகுமாரணதுங்க மத்தியஸ்த முயற்சி மேற்கொள்ள இணக்கம்.

★ தாம் உயிருடன் இருக்கும்வரை, இந்த அரசாங்கம் பதவியில் இருக்கும்வரை இந்த நாட்டில் ஈழம் அமைக்க அனுமதிக்கப் போவதில்லை என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.

20.10.1986

★இந்த ஆண்டு முடிவுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் இனிமேல் வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படமாட்டாதென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்து விட்டதாக கலாசார அமைச்சர் ஹூருள்ள தெரிவிப்பு.

★ தம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட இரு இராணுவ வீரர்களை விடுவிப்பதற்குப் பதிலாக, விடுவிக்கப்பட வேண்டுமெனத் தாம் கோரும் இரு இயக்கப் போராளிகளின் பெயர்களை விடுதலைப்புலிகள் இன்று வெளியிடுவரென மக்கள் கட்சிச் செயலாளர் விஜேகுமாரணதுங்க தெரிவிப்பு.

21.10.1986

★யாழ்ப்பாணம் வரும் விஜேகுமாரணதுங்க மற்றும் ஒஸி குணசேகரவை விடுதலைப்புலிகள் அமைப்பின் யாழ். மாவட்டத்தளபதி கிட்டு வரவேற்கும் நிகழ்வில் யாழ்.கோட்டை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலையும் உடனிருப்பார்.

★ ஷெல் தாக்குதல்களிலிருந்தும் இராணுவத்தினரின் தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றுவேனென என்னால் உறுதிமொழி வழங்க இயலாதென யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு.

22.10.1986

★தமிழர் தாயகக் கோட்பாட்டைத் தாம் ஏற்பதாகவும், வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கு ஆட்சி உரிமை வழங்க வேண் டுமெனவும் யாழ்ப்பாணத்தில் வைத்து மக்கள் கட்சித் தலைவர் விஜேகுமாரணதுங்க தெரிவிப்பு.

★கோட்டை இராணுவ உயரதிகாரிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் இடையே நேற்றுக் காலை உணர்ச்சிபூர்வ சந்திப்பு.

★விடுதலைபபுலிகளால சிறைபிடிக்கப்பட்ட இரு இராணுவச்சிப்பாய்களை விடுவிப்பது குறித்து விஜேகுமாரணதுங்க இன்று ஜனாதிபதி ஜே.ஆருடன் பேசுகிறார்.

23.10.1986

★ மக்கள் கட்சித் தலைவர் விஜேகுமாரணதுங்க யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்த வேளையில் அங்கு நடமாடிய சி.ஐ.டி. ஒருவரையும் இனங்கண்டு விடுதலைப் புலிகள் எச்சரித்து அனுப்பினர்.

★நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து ஏவபபட்ட ஷெல்லினால் தனது இரு பிள்ளைகளைப் பறிகொடுத்த தாயின் சோகக்கதை கேட்டு விஜேகுமா ரணதுங்க கண் கலங்கினார்.

24.10.1986

★ இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் திவாரியுடன் இந்தியத் தூது வர் டிக்ஸிற் ஆராய்வு.

★ விடுதலைப்புலிகளால் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இரு இராணுவ வீரர்களை விடுவிக்க அரசு எந்தவொரு நிபந்தனைக்கும் இணங்கியிருக்கவில்லை என அரசு தெரிவிப்பு.

25.10.1986

★குடாநாட்டில் உள்ள 116 கிராம சேவகர் பிரிவுகளிலும் விடுதலைப் புலிகளால் தமிழீழ கிராம நீதிமன்றங்கள் உருவாக்கம்.

★போராளிகளின் கட்டுப்பாட்டி லுள்ள யாழ். குடாநாட்டுக்கு மின்சார விநியோகத்தைத் துண்டித்து விடுவது நல்லதா? கூடாதா என்பது பற்றி நாடா ளுமன்றத்தில் விவாதம்.

★ பொய் வானொலித் தகவல்களைத் தமது வானொலிச் சாதனங்கள் மூலம் விடுத்து படையினரின் நடமாட்டங் களை விடுதலைப்புலிகள் திசை திருப்பி வருவதாக பாதுகாப்பு வட்டா ரங்கள் தெரிவிப்பு.

26.10.1986

★ மன்னார்- அடம்பனில் இடம் பெற்ற படையினர்- புலிகள் மோதலால் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குக் கடும் சேதம்.

★ தீவிரவாதத்துக்கு முடிவு கட்டும் நோக்குடன் அரசு வடபகுதிக்கு இராணுவத்தளபதிகள் பலரை அனுப்பி வைத் தும் பலனேதும் கிட்டவில்லை என கல வான நாடாளுமன்ற உறுப்பினர் டியூ குணசேகர விமர்சிப்பு.

27.10.1986

★ இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் தமிழீழப் போராளிகள் குழுக்களைப் பங்குபற்றுமாறு தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வேண்டுகோள்.

★ சமாதானத்துக்கான பிரார்த்தனை தினத்தை முன்னிட்டு பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோளை ஏற்று இன்று அரச படைகளும் தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களும் போர் தவிர்ப்பைக் கடைப் பிடிக்க இணக்கம் தெரிவிப்பு.

28.10.1986

★ சிவில் நிர்வாகத்தைக் கையாள தமிழீழ செயலகம் நிறுவ விடுதலைப் புலிகள் ஏற்பாடு.

★ பரிசுத்த பாப்பரசரின் யுத்த தவிர்ப்பு வேண்டுகோளை ஏற்ற அரசு யுத்த நிறுத்தத்தையும் மீறி மட்டக்களப்பில் தாக்குதலை மேற்கொண்டமைக்கு மட்டக் களப்பு ஆயர் கண்டனம்.

★ பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையின் பலத்தை அதிகரிக்கும் நோக்குடன் அரசு இஸ்ரேலிடமிருந்து அதிவேக ரோந்துக் கப்பல்களை வாங்கத் தீர்மானம்.

29.10.1986

★ இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இந்திய அரசியல் நிபுணர்கள் புதிய திட்டமொன்று தயாரிப்பு என சென்னை வட்டாரங்கள் தகவல்.

★ இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான யோசனைகளைப் பார்க்கும்போது தீர்வு ஒன்று ஏற்படலாம் என்ற நம்பிக்கை தோன்றுவதாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவிப்பு.

★ மட்டக்களப்பு - திருகோணமலை ஆயர்-வணகிங்ஸ்லி சுவாம்பிள்ளை அதிரடிப்படைப் பொலிஸ் படையினரால் அவமதிக்கப்பட்டார்.

30.10.1986

★ 'புளொட்' எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தமிழீழத்தில் தற்காலிகமாக இயங்க மாட்டாது என் அவ் இயக்கத்தின் செயற்குழு தெரிவிப்பு.

★ சுதந்திர தமிழீழத்தை உருவாக்கும் பிரகடனம் 1987 ஜனவரி மாதம் முதலாம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் என ஏ.எப்.பி செய்தி ஸ்தா பனம் தெரிவிப்பு.

31.10.1986

★ யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் யாழ். மத்திய கல்லூரியில் பாடசாலை நேரத்தில் மாணவர் ஒருவர் பலி.

★ தமிழீழப்போராளிகளின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து சார்க் மாநாட்டுக்கு முன்னர் தமக்கு அறியத் தருமாறு இந்திய மத்திய அரசு தமிழ்நாடு மாநில அரசைக் கோரியுள்ளது.

# அத்தியாவசிய பொருள்களுக்கு செயற்கைத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அரசை நெருக்கடியில் தள்ளுவதற்கு முயற்சி

## பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 31

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கி அரசிற்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார் அவர்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதுமுற்றிலும் பிழையான தகவல்.அரசை நெருக்கடியான நிலைக்குள் தள்ளுவதற்காக சில தனியார் துறையினர் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கியுள்ளனர். இதன்மூலம் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்க அவர்கள் முயல்கின்றனர்.

குறிப்பாக அரிசித் தட்டுப்பாடு நிலவுவது போன்ற தோற்றமொன்றை உருவாக்கியுள்ளனர்.

எனினும், உண்மையில் நாட்டில் போதியளவு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளன. அரிசி எவ்விதத் தட்டுப்பாடுமின்றி சந்தைக்கு வழங்கப்படுகின்றது.

இதேவேளை, வரட்சி காரணமாக உள்ளூர் அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதையும், உலக உணவு நெருக்கடியையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ஓரளவு நியாய விலையிலேயே விற்கப்படுகின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்குபவர்கள், உயர்ந்த விலைக்கு விற்பவர்கள் அல்லது செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குபவர்கள் போன்றோரை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியும். - என்றார் அவர். (சி)

# புலிகளின் சொத்து தம்மிடம் இருப்பதாக எந்த நாட்டு அரசும் ஏற்றுக் கொள்ளாது

கொழும்பு, டிசெ. 31

எந்தவொரு வெளிநாட்டு அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சொத்துக்கள் தம்மிடம் இருப்பதாக ஏற்றுக் கொள்ளாது - என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

அவ்வாறு ஒப்புக் கொள்வதன் மூலம் குறித்த நாடு பயங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியது என அர்த்தப்பட்டு விடும் என்பதே இதற்கான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு சொத்துக்கள் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

உலக நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சொத்துக்கள் காணப்படுகின்றன எனவும், அதனைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் பாதகமான விளைவுகள் ஏற்படும்.

இவ்வாறு சொத்து விவரங்களை வெளியிடுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

பணப் பரிமாற்றம், ஆள்கடத்தல் மற்றும் ஆயுத விநியோகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமிருந்து தகவல்கள் கிடைக்கப் பெற்று வருகின்றன - என்றார். (சி)

# அரச சொத்து துஷ்பிரயோகம் குறித்து வாராந்த அறிக்கை வெளியிடப்படும்

## 'ட்ரான்பரன்ஸி இன்டர் நஷனல்' தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 31

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பில் வாராந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச வளங்கள் மற்றும் பணம் எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலின்போது துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பது குறித்து வாராந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என ட்ரான்பரன்ஸி இன்ரர் நஷனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

மாகாண மற்றும் மத்திய அரசாங்க மட்டத்தில் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் இதன் மூலம் வெளிச்சப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உபாலி செனவிரட்ன தலைமையிலான குழுவினர் நடத்திய விசாரணைகளின் போது அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பிலான 80 சம்பவங்கள் விசாரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிர்வாகக் கட்டடப்பாவனை, வாகனங்கள், ஆளணி, பணம் போன்றவற்றை ஆளும் கட்சி தேர்தலில் பயன்படுத்தி வருகின்றமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ட்ரான்பெரன்ஸி இன்டர் நஷனல் அமைப்பின் முதலாவது வாராந்த அறிக்கை இந்த வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும், இது மூன்று பக்கங்களைக் கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# 'ஓசியானிக்' கப்பல் அகதிகள் தொடர்பில் ஆஸியின் புதிய அணுகுமுறை அவசியம்

## கிரீன்ஸ் கட்சி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 31

'ஓசியானிக் வைக்கிங்' கப்பலில் இருந்து தரையிறங்கி இந்தோனேஷியா தடுப்பு முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் ஆஸ்திரேலிய அரசு புதிய அணு குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் - என்று கிரீன்ஸ் கட்சி மீண்டும் வலி யுறுத்தியுள்ளது.

இந்தக் கப்பலில் இருந்து தரையிறங்கிய 78 பேரில், 15 பேர் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் குடியமர்த்தப்பட்டனர்.

இரண்டு பேர் ஆஸ்திரேலியாவிலும், 13 பேர் கனடாவிலும் குடியமர்த்தப்பட்ட நிலையில் எஞ்சியுள்ள 63 பேர் தொடர்பில் ஆஸ்திரேலியா சரியான முன்னெடுப்பை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வலியுறுத்தலை ஆஸ்திரேலிய கிரீன்ஸ் கட்சியின் செனட் உறுப்பினர் சாராஹ் ஹன்சன்யங் விடுத்துள்ளார்.

அவர்கள் எங்கு அனுப்பப்படவுள்ளனர், மற்றும் அவர்களை பொறுப்பேற்க ஏனைய நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்தல் போன்ற அறிவிப்புகளை அரசு வெளியிட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

புதுவருடம் ஆரம்பிக்கும் நிலையில், அவர்கள் தொடர்பில் ஒரு புதிய அணுகுமுறை கையாளப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

இதேவேளை அவர்களை காலம் தாழ்த்தாது ஆஸ்திரேலியாவுக்கு கொண்டு வர வேண்டும் எனவும், ஆஸ்திரேலியா வழங்கிய உறுதிமொழி பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



கௌரவ யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியின்
புதல்வனும் சென். ஜோன்ஸ் கல்லூரியின்
பழைய மாணவனுமான

**விக்னராஜா சஞ்ஜேந்திரா**

அவர்கள் 15.12.2009 செவ்வாய்க்கிழமை பிரதம நீதியரசர் கௌரவ அசோக டீ சில்வா முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையை முன்னிட்டு எங்கள் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் சட்டத்துறையில் மேலும் பிரகாசிக்க எமது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர் யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகவும், நீதி அமைச்சின் சட்ட இணைப்பாளராகவும், மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் கடமையாற்றியவர் என்பது குறிப் பிடத்தக்கது.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

N. ஜெயரட்ணம்
குடும்பம்.

## புதுவருட நற்கருணை வழிபாடுகள்

வடமராட்சி, டிசெ.31

நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிறக்கும் புத்தாண்டை ஒட்டி பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகரப்பிரிவில் ஆறு தேவாலயங்களில் அன்றைய தினம் காலை புதுவருட நற்கருணை வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சேகரப் போதகர் அருட் திரு.என். அருள் நாதன் தெரிவித்தார்.

அல்வாய், கற்கோவளம், இடைக்குறிஞ்சிஆகியதேவாலயங்களில் காலை 7மணிக்கும், பருத்தித்துறை, கட்டைவேலி, நெல்லியடி ஆகிய தேவாலயங்களில் காலை 8.30 மணிக்கும் இப் புதுவருட நற்கருணை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

இதேவேளை புதுவருட விழிப்புணர்வு வழிபாடுகள் அந்தத்தச் சபைகளில் இரவு 10 மணிமுதல் 12மணி வரை நடை பெறும் என பருத்தித்துறை கட்டைவேலி சேகரப் போதகர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-236)

## அமிலதேரரின் விளக்கமறியல் 8ஆம் திகதி வரையிலும் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 31

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவார் எனக்கூறி சிலரிடம் பணத்தை வாங்கி ஏமாற்றினார் என்று தெரிவிக்கப்படும் குற்றச் சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த வண.தம் பர அமிலதேரரின் விளக்கமறியல் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அவர் பண்டாரகம நீதிவான் நீதி மன்றத்தில் நீதிவான் அனுர செனிவிரத்ன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம், அவரை விளக்க மறியலில் தொடர்ந்து தடுத்து வைத்திருக் கும் உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் தலைவரான வண.அமிலதேரர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பிரதான வேட்பாளரான சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகத் தீவிர பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தார்.

அதற்கு மத்தியிலேயே கடந்த ஞாயிறன்று பண்டாரகமப் பகுதியில் வைத்து குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். (சி)

## மத்தியஸ்தர்சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள்

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் அண்மையில் வழங்கப்பட்டுள் ளன.

சபை அங்கத்தவர்களுக்கென நிதி, சட்டமறுசீரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை களை பருத்தித்துறை மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் ஆ.வடிவேலு பொறுப்பேற்று எடுத்து வந்து பருத்தித்துறை வேலாயுதமகா [illegible] வழங்கினார். (ஓ-236)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1152 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 06 12 50 54

29-12-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 216,605 | 20/- | 4,332,100/- |
| 2 இலக்கங்கள் | 19,892 | 40/- | 795,680/- |
| 1 இல. + லக்கினம் | 19,649 | 60/- | 1,178,940/- |
| 2 இல. + லக்கினம் | 1,797 | 200/- | 359,400/- |
| 3 இலக்கங்கள் | 521 | 1000/- | 521,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,347,120/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 258,528 | | 8,847,120/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,966,850/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ஏ.சி.இராமநாயக்க கடவத்த

கைத்தொலைபேசி வெற்றியாளர்: சுமித்ரா வினோதினி இரதமலான

2010 ஜனவரி 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100.000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 400842066-9-36 |
| மட்டக்களப்பு | 400838521-7-33 |
| கம்பஹா | 400834601-1-05 |
| கம்பஹா | 400829732-1-15 |
| கொழும்பு | 400844380-0-45 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 ★ 07 ★ 1941



மறைவு 01 ★ 12 ★ 2009

### அமரர் முருகன் நடராஜா (நடா)

*(யாழ்.இந்துக் கல்லூரி-கன்ரீன்)*

கடந்த 01.12.2009 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரில்வந்தும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும். மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பலவழிகளில் எமக்கு உதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (31.12.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

26/4, அராலி வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (91994)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் தரம் 8 E வகுப்பு மாணவி
செல்வி **முருகபாலன் துலக்ஷனா**
25.12.2009 அன்று அகாலமரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தரம் 8 E வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(சி/563587)

## மரண அறிவித்தல்

### *செல்லம்மா செகராஜசிங்கம்* (மதுபாலசிங்கம்)



வல்லியானந்தம், துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா செகராஜசிங்கம் கடந்த திங்கட் கிழமை (28.12.2009) காலமாகிவிட்டார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் (துன்னாலை காசிநாதர் வித்தியாலய ஸ்தாபகர்) - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை செகராஜசிங்கத்தின் (இளைப்பாறிய கணக்காளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனக சபாபதி, நமசிவாயம், இலட்சுமியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தநாயகி (இளைப்பாறிய ஆசிரியர்), வசந்தநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), காலஞ்சென்ற கமலநாயகி, நாகராஜா (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும். இராஜேந்திரன், காலஞ்சென்ற இராதாகிருஷ்ணன், இரதிதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோரஞ்சன் - சிவகாந்தினி (கனடா), சஞ்ஜீவ், ஹம்சானந்தி (கொழும்பு), நிரோஷி, நிதர்ஷி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுசானி, சானுஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு நடைபெற்று பூத வுடல் அன்னாரது குடும்பப் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்:

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வல்லியானந்தம்',
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

*தகவல் :*
*குடும்பத்தினர்.*
தொ. பே: 0777571960, 0213737785

(91014)

### *பரம்சோதி அன்னம்மா*



தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும், கொண்ட பரம்சோதி அன்னம்மா கடந்த திங்கள் (28.12.2009) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரம்சோதியின் அன்பு மனைவியும், அமரர்களான அன்னலக்சுமி, கணேசபிள்ளை, சிவபாக்கியம், மகேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரன் (கனடா), புவனேஸ்வரி(கனடா), நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயரும், சரோஜா (கனடா), சிவலிங்கம் (கனடா), நித்தியானந்தராஜா, சற்குணரட்ணம்(கனடா), அமரர் கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தாபன், குருதாபன், சஜனி, சரணியா, பிருந்தா, கீர்த்தி, சியானி, றிவியா ஆகியோரது பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.12.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்மேற்கு, கொக்குவில். (91997)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராச்சி குண்டுத்தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஷியா பிரிவினர் ஆர்ப்பாட்டம்; கடைகளுக்கு தீ வைப்பு

## பலியானோரின் எண்ணிக்கை 67 ஆக உயர்வு

கராச்சி, டிச. 31

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுதாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது. இத்தாக்குதலில் 30 பேர் அவ்விடத்திலேயே மரணித்துள்ளனர். 137 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 37 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி பலியாகியுள்ளனர்.

இத்தற்கொலைத் தாக்குதலை அடுத்து, ஆத்திரமடைந்த ஷியா பிரிவு மக்கள் கார்களுக்கும், கடைகளுக்கும் தீ மூட்டினர். வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். பாதுகாப்பு பணிகளை முறையாக மேற்கொள்ளவில்லை என காரணங்கூறி பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தினர்.

கராச்சியின் கேந்திர பகுதியிலுள்ள ஜின்னா வீதியிலும், புல்டோன் வீதியிலும் நூற்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு தீ மூட்டப்பட்டது. புல்டோன் சந்தையிலுள்ள பல அடுக்கு மாடிக்கட்டடத்திலும் தீ பரவியது. இதனால் அதன் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இரவு முழுவதும் கடைகள் எரிந்தன. நகரம் அல்லோலகல்லோலப்பட்டது.

தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டனர். தீயணைப்புப் பணியில் நாற்பதுக்கு மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. பகீரதப்பிரயத்தனத்தால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அத்துடன் மேலும் பரவாமலும் தடுக்கப்பட்டது.

கராச்சி நகரில் மொகரம் தினத்தையொட்டி ஷியா முஸ்லிம்கள் மேற்கொண்ட ஊர்வலத்தில் இக்குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஊர்வலத்தில் ஊடுருவி வந்த தற்கொலைக் குண்டுதாரி, ஊர்வலம் முஹம்மது அலி ஜின்னா வீதி வழியாக சென்றுகொண்டிருந்த போது, தான் மறைத்துவைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

# பாகிஸ்தானில் தலிபான் தளபதி சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், டிச. 31

தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் தலிபான் தளபதி சுட்டுக்கொல்லப்பட்டார். மேலும் 11 தீவிரவாதிகள் பிடிபட்டனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் ஷார்பார் துணை மண்டலத்திற்கு உட்பட்ட ஸ்வாட் பள்ளத்தாக்குப் பகுதியில் இராணுவத்தினருக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே இந்த கடும் மோதல் ஏற்பட்டது.

தலிபான் அமைப்பின் தளபதி சித்திக் என்ற அபு ஸார் தலைமையிலான தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதையடுத்து, இரு தரப்புகளுக்குமிடையே மூண்ட இந்த மோதலில் சித்திக் உயிரிழந்தார். காயங்களுடன் 2 தீவிரவாதிகள் சிக்கினர். இந்த இருவரும் சித்திக்கின் நண்பர்களாவார்.

கொல்லப்பட்ட சித்திக் பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர் என விசாரணையில் தெரியவந்தது. இந்நிலையில், மற்றொரு தளபதி ஷேர் அலி உட்பட 9 தீவிரவாதிகளை கைபர் பழங்குடியினர் பகுதியில் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

# நைஜீரியாவில் பயங்கரக் கலவரம்: 30 பேர் பலி; 74 பேர் படுகாயம்

அபுஜா, டிச. 31

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் முஸ்லிம்களுக்கிடையே மூண்ட மோதல் கலவரமாக வெடித்தது. இதில் 30 பேர் கொல்லப்பட்டனர். 74 பேர் படுகாயமடைந்தனர். கட்டடங்கள், கடைகள் ஆகியவை சேதமாக்கப்பட்டன.

நைஜீரியாவின் வடமாநிலமான பவுசியில் முஸ்லிம்களுக்கிடையே இந்த மோதல் மூண்டது. இதில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. எதிரும் புதிருமான கோஷ்டிகளுக்கிடையே துப்பாக்கிச் சமரும் இடம்பெற்றது.

இக்கலவரத்தால் பலரின் வீடுகள் தீமூட்டிக் கொளுத்தப்பட்டுள்ளன. வீடுகளை இழந்தவர்கள், அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். கலவரம் தலைதூக்கிய பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கலவரத்தில் ஈடுபட்ட 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஏ.கே.47 ரக துப்பாக்கிகள், வெடிகுண்டு, குண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# ஈராக்கில் இரட்டைக் குண்டுத்தாக்குதல் 23 பேர் உயிரிழப்பு; 32 பேர் படுகாயம்

ஈராக்கில் அன்பார் மாகாண தலைநகரான ரமாதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 23 பேர் கொல்லப்பட்டனர். 32 பேர் படுகாயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஒரு குண்டுத்தாக்குதலில் அன்பார் ஆளுநர் காசீம் மொஹம்மத் காயமடைந்தார். அதிகாரிகள் பயணித்த வாகன அணி ஒன்றை இலக்கு வைத்து, ரமாதியில் உள்ள அதியுயர் பாதுகாப்பு மண்டலப் பகுதியில் முதல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாகாண நிர்வாகக் கட்டடத்துக்கருகில் இந்த கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதிகாரிகளின் வாகன அணியை இலக்கு வைத்து கார்க்குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

அதே பகுதியில் கால்நடையாக வந்த மற்றுமொரு குண்டுதாரி, மக்கள் கூடியிருந்த இடத்தில்தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துள்ளார். இந்த இரு குண்டுத்தாக்குதல்களிலும் 23 பேர் பலியாகியுள்ளனர் என்றும் மேற்படி வட்டாரம் குறிப்பிட்டது.

முதல் குண்டுவெடிப்பில் ஏற்பட்ட அனர்த்தங்களைப் பார்வையிட ஆளுநர் காசீம் மொஹம்மத் அப்பகுதிக்கு வந்தார். அச்சமயம் இரண்டாவது குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இதில் அவர் காயமடைந்தார் என ஆளுநர் அலுவலக அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

# தீவிரவாதி விமானத்துக்குள் செல்ல பாதுகாப்புக் குறைபாடே காரணம்

## அமெ. ஜனாதிபதி ஒபாமா

வாஷிங்டன், டிச. 31

''பாதுகாப்பு முறைமையில் காணப்பட்ட குறைபாடே தீவிரவாதி விமானத்திற்குள் செல்ல வழிகோலியுள்ளது. இது விடயத்தில் அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரிகளினதும், பாதுகாப்பு




அதிகாரிகளினதும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்திலிருந்து அமெரிக்கப் பாதுகாப்புத்துறை பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

23 வயதான பாரூக் அப்துல் முத்தலிப் என்ற நைஜீரிய தீவிரவாதி ஒருவர் அமெரிக்க விமானத்தை வெடி வைத்துத் தகர்க்க மேற்கொண்ட முயற்சியையொட்டி பராக் ஒபாமா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

''இவ்வாறான தீவிரவாதத் தாக்குதல் குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடங்களை விரைவில் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''புலனாய்வுப் பிரிவினரும், அமெரிக்க பாதுகாப்புப் பிரிவினரும் இதனை விட சிரத்தையுடன் பாதுகாப்புக் கடமைகளை முன்னெடுக்க வேண்டும்'' என்றும் அவர் கோரியுள்ளார்.

அதேவேளை, டெட்ராய்ட் நகருக்கு வந்த அமெரிக்க விமானத்தைத் தகர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்க விமானங்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளில் இருக்கும் அமெரிக்கர்களுக்கும் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்யும் அமெரிக்கர்களுக்கும் சில எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

# அமெ. விமானத்தைத் தகர்க்கும் முயற்சி தொழில்நுட்பக் கோளாறால் தோல்வி

## அல்-குவைதா சவூதி பிரிவு தெரிவிப்பு

வாஷிங்டன், டிச. 31

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே அமெரிக்க விமானத்தைத் தகர்க்கும் தங்களது முயற்சி தோல்வியைத் தழுவியுள்ளது என அல்-குவைதா தெரிவித்துள்ளது.

கிறிஸ்மஸ் தினத்தன்று அமெரிக்க விமானத்தை நடுவானில் தகர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு அல்-குவைதா அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

''278 பயணிகளுடன் அமெரிக்க விமானத்தை நடுவானில் தகர்க்கத் திட்டமிட்டோம். ஆனால், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக எங்களது திட்டம் நிறைவேறாமல் போய்விட்டது'' என அல்-குவைதாவின் அரேபிய பிராந்தியப் பிரிவினர் தெரிவித்துள்ளனர் என அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமிலிருந்து அமெரிக்காவின் டெட்ராய்ட்டுக்கு வந்து கொண்டிருந்த அமெரிக்க விமானத்தைத் தகர்க்கும் முயற்சி தோல்வியைத் தழுவியதை அடுத்து அல்-குவைதா அமைப்பின் அரேபிய பிரிவினர் தங்களது தலைவர்களுக்கு அளித்த விளக்கத்தில் இவ்விதம் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், அமெரிக்காவை சீர்குலைக்கும் தங்களது திட்டம் நாளுக்கு நாள் வலிமை அடைந்து வருகிறது என அந்த அமைப்பினர் குறிப்பிட்டுள்ளனர் என்றும் அமெரிக்க புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

# இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட்: தோல்வியை நோக்கி தென்னாபிரிக்கா

டர்பன், டிச.31

டர்பனில் நடந்து வரும் இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்டில், தென்னாபிரிக்க அணி படுதோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

முன்னதாக, முதல் இன்னிங்ஸில் முந்தைய நாள் ஓட்ட எண்ணிக்கையான 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 386 ஓட்டங்களுடன் நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, 9விக்கெட் இழப்புக்கு575 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இது தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸை விட 232 ஓட்டங்கள் அதிகமாகும். இயன் பெல் 141 ஓட்டங்களையும், மேத் பிரையர்60 ஓட்டங்களையும் விளாசினர்.

தொடர்ந்து பலத்த நெருக்கடிக்கு மத்தியில் தனது 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணியை, இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்ருவர்ட் பிராட்டும், சுழற்பந்து வீச்சாளரான ஸ்வானும் மிரள வைத்தனர்.

அவர்களது பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பிரின்ஸ் (16), ஆம்லா (6), கலிஸ் (3), டிவில்லியர்ஸ் (2), டுமினி (0), அணிதலைவர் ஸ்மித் (22) ஆகியோர் வரிசையாகப் 'பெவிலியன்' திரும்பினர்.

இறுதியில் 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவின்போது தென்னாபிரிக்க அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 76 ஓட்டங்களுடன் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. பௌச்சர் (20), மோர்கல் (7) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து அணி சார்பாகப் பந்துவீச்சில் பிராட், ஸ்வான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இன்னும் 156 ஓட்டங்களை எடுக்க வேண்டியிருப்பதால், இங்கிலாந்து அணியின் வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக உள்ளது.




## பங்களாதேஷ் முக்கோணத் தொடர்:

# இலங்கை அணியில் முன்னணி வீரர்கள் 'அவுட்'

பங்களாதேஷில் அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ள முத்தரப் புப் போட்டிக்கான இலங்[illegible] மெண்டிஸ், [illegible] ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, காயம் காரணமாக ஜெயவர்த்தன, மத்யூஸ், முரளிதரன், பெர்னாண்டோ ஆகியோரும் அணியில் இடம் பெறவில்லை.

முக்கோணத் தொடருக்கான இலங்கை அணியின் விவரம் வருமாறு:-

சங்கக்கார (அணித்தலைவர்), டில்ஷான், தரங்க, சமரவீர, கண்டம்பி, சாமர சில்வா, திரிமனே, திஸார பெரேரா, புஷ்ப குமார, பண்டார, ரன்டிவ், துஷார, லக்மல், குலசேகரா, வெலகெதர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற காங்கிரஸால் மட்டுமே முடியும்

## பெருமிதத்துடன் கூறுகிறார் சுதர்சனம்



திருவொற்றியூர், டிச. 31

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற காங்கிரஸால் மட்டுமே முடியும். இந்தியாவில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஜனநாயகம் தழைத்திருப்பதற்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம் - என்று சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் டி. சுதர்சனம் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி 125ஆவது ஆண்டு விழா, சோனியாகாந்தி, ஜி.கே.வாசன் பிறந்த நாள் என முப்பெரும் விழா சென்னை ராயபுரத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு பேசினார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

125 ஆண்டுகளுக்கு முன்பு ஏழைகளின் நலனைக் காக்க தொடங்கப்பட்ட காங்கிரஸ் கட்சி ஜனநாயகத்தைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவுடன் சம காலத்தில் சுதந்திரம் பெற்ற பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை ஆகிய நாடுகளில் இன்று முழுமையான ஜனநாயகம் இல்லை. இந்தியாவில் தொடர்ந்து ஜனநாயகம் தழைக்க காங்கிரஸ் கட்சிதான் காரணம்.

மதவாதத்தை வளர்க்க பா.ஜ.க. உருவானது. கடவுள் மறுப்புக் கொள்கையின் காரணமாக திராவிடர் கழகம் பிறந்தது. பெரியாருடைய திருமண பிரச்சினையின் காரணமாகவே தி.மு.க தொடங்கப்பட்டது. கணக்கு கேட்டதன் காரணமாக அ.தி.மு.க ஆரம்பிக்கப்பட்டது. பதவி காரணமாக ம.தி.மு.க. பிறந்தது. ஆனால் ஏழைகள் நலன் காக்கப்படவேண்டும் என்ற கொள்கைக்காக தொடங்கப்பட்ட ஒரேகட்சி காங்கிரஸ் கட்சிதான்.

மதவாதத்தால் மகாத்மா காந்தி உயிர் துறந்தார். சீன ஆக்கிரமிப்பால் மனம் வருந்தி உயிரை விட்டார் நேரு. நாட்டிற்காக தியாகம் செய்தவர்கள் காங்கிரஸார் மட்டுமே.

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற ராஜீவ்காந்தி பல்வேறு முடிவுகளை மேற்கொண்டார். ஆனால் இலங்கையின் விடுதலைப் புலிகளால் அவர் கொல்லப்பட்டார். இருப்பினும் இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற காங்கிரஸால் மட்டுமே முடியும் - என்றார்.

# தெலுங்கானாப் பிரச்சினை; காங். உயர் குழு ஆலோசனை

புதுடில்லி, டிச. 31

தனித் தெலுங்கானா பிரச்சினை குறித்து காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக்குழு கூடி நேற்றுமுன்தினம் விவாதித்தது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் மன் மோகன்சிங், காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி உட்பட பல மத்திய அமைச்சர்களும், கட்சியின் உயர்நிலை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடந்த இந்தக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்ற விவரம் வெளியாகவில்லை.

தனித் தெலுங்கானா அமைக்க வலியுறுத்தி ஆந்திராவைச் சேர்ந்த 13 அமைச்சர்கள் ராஜினாமா செய்துள்ளனர். அவர்களது ராஜினாமாவை வாபஸ் வாங்கும்படி கட்சியின் தலைமை கேட்டுக்கொண்டதை அவர்கள் ஏற்கவில்லை. இந்த நிலையில் கட்சியின் உயர்மட்டக்குழு கூட்டம் நடந்தது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# தஞ்சையில் சாகும்வரை உண்ணாவிரதம்: 120 பட்டதாரித் தமிழாசிரியர்கள் கைது

தஞ்சை, டிச. 31

தஞ்சாவூரில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முயன்ற 120 வேலையில்லாப் பட்டதாரி தமிழாசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்.

வேலையில்லாப் பட்டதாரி தமிழ் ஆசிரியர்கள் சங்கத்தினர், தங்களுக்கு அரசு உடனே வேலை வழங்கக் கோரி தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தின் முன்பு கடந்த திங்களன்று சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினர்.

இந்த நிலையில் கடந்த திங்களன்று நள்ளிரவு 12 மணியளவில் பொலிஸார் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து பந்தலை பிரித்து எடுத்துச் சென்று விட்டனர்.

இதனால், தமிழாசிரியர்கள் வெட்ட வெளியில் அமர்ந்து தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் தொடர்ந்தனர். இந்நிலையில் நேற்றுமுன் தினம் காலை 10 மணியளவில் உண்ணாவிரத பகுதிக்கு வந்த பொலிஸார் 120 வேலையில்லா தமிழாசிரியர்களையும் கைது செய்தனர்.

## இந்தியச் செய்திகள்

# உலக அமைதி வேண்டி 108 மணி நேர இசை வேள்வி தர்மபுரியில் அரங்கேற்றம்

தர்மபுரி, டிச. 31

தர்மபுரியை அடுத்த பாப்பாரப்பட்டியில் உலக அமைதி வேண்டி 108 மணி நேர தொடர் இசை வேள்வி நடந்து வருகிறது.

தர்மபுரியை அடுத்த பாப்பாரப்பட்டியில் உலக அமைதி வேண்டியும், வன்முறை,



இயற்கைச் சீற்றங்கள் நிகழாமல் இருக்க இயல், இசை, நாடக அனைத்து கலைஞர்களை ஒருங்கிணைத்து 108 மணி நேரம் தொடர் இசை வேள்ளி நடத்தப்பட்டு வருகி றது.

பாப்பாரப்பட்டி புதிய சிவசுப்பிரமணி ஸ்வாமி கோவில் வளாகத்தில் கடந்த 26 ஆம் திகதி இரவு 11 மணிக்கு தொடங்கி இன்று 31ஆம் திகதி பகல் 11 மணி வரையில் நடக்கிறது. இந்நிகழ்ச்சியில் நாதஸ்வரம், தவில், கிராமிய, நாடக, பரதநாட்டிய, பம்பை கலைஞர்கள் கலந்து கொண்டு தொடர்ந்து நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர்.

இதில், தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து 2,500 கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

# அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் அமெ., சீனா ஒப்பமிட்ட பின்னரே இந்தியா கைச்சாத்திடும்

## பிரதமர் மன்மோகன் சிங் உறுதி



புதுடில்லி, டிச. 31

ஒருங்கிணைந்த அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தத்தில் (சிடிபிடி) அமெரிக்காவும், சீனாவும் கையெழுத்திட்ட பின்னரே இந்தியா கையெழுத்திடும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜப்பான் பிரதமர் யுகியோ ஹடோயமாவுடன் செவ்வாய்க்கிழமை பேச்சு நடத்திய பின்னர் இரு தலைவர்களும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பிரதமர் மன்மோகன் சிங் கூறியவை வருமாறு -

சிடிபிடியில் இந்தியா கையெழுத்திட வேண்டும் என்று ஜப்பான் விரும்புகிறது. ஆனால் அணு சக்தியில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவும், சீனாவும் கையெழுத்திட்ட பின்னரே கையெழுத்திடுவது என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது.

இந்தியாவின் ஆக்க பூர்வ அணுசக்தி தேவைகளுக்கான அணுசக்தி மூலப்பொருளை வழங்குவதில் ஜப்பான் உறுதியான உத்தரவாதம் எதையும் அளிக்கவில்லை. அனைத்து நாடுகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய பாரபட்சம் இல்லாத அணு வெடிப்பு தடை ஒப்பந்தத்தை இந்தியா ஏற்பதில் எவ்வித தடையும் இல்லை. 1998 ஆம் ஆண்டு இந்தியா அணுகுண்டு சோதனை நடத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜப்பான் பிரதமரிடம் விளக்கினேன்.

சிடிபிடியில் கையெழுத்திடாவிட்டாலும் அணு உலைகளுக்குத் தேவையான மூலப் பொருளை இந்தியாவுக்கு வழங்குவதற்கு 45 நாடுகள் கொண்ட கூட்டமைப்பு ஒப்புக் கொண்டதையும் ஜப்பான் பிரதமரிடம் கூறினேன் - என்றார்.

ஜப்பான் பிரதமர் கூறியவை வருமாறு -

அணு ஆயுதங்களை இந்தியா முற்றிலுமாகக் கைவிட வேண்டும் என்றே ஜப்பான் எதிர்பார்க்கிறது. தற்போதைய சூழலில் இந்தியாவுக்கு அணு உலைகளுக்குத் தேவையான மூலப் பொருள் வழங்குவது குறித்து எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து விரிவாக ஆராய்ந்த பின்னரே முடிவு செய்யப்படும். இருப்பினும் இப்பிராந்தியத்தை அணு ஆயுதமற்ற பகுதியாக உருவாக்க வேண்டும் என்ற கருத்தை பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்டார்.

எனவே இரு நாடுகளும் இணைந்து இக்கருத்தை முதலில் செயல்படுத்த உள்ளன. அணு ஆயுதங்களே இல்லாத உலகத்தை உருவாக்க வேண்டும் என்பதே இலக்கு. அதை நோக்கி செயற்படுவோம் - என்றார்.

# மும்பை பாபா அணு மையத்தில் தீ; 2 இளம் விஞ்ஞானிகள் கருகிப் பலி!

மும்பை, டிச. 31

தீவிரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ள மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் நேற்றுமுன்தினம் திடீரென தீப்பற்றியது. இதில் 2 இளம் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கருகிப் பலியாகினர்.

பிரசித்தி பெற்ற பாபா அணு ஆராய்ச்சி மையம் மும்பை புறநகர் டிராம்பேயில் மலை மீது உள்ளது. இது நாட்டின் அணு மின்சக்தி உற்பத்தியிலும், ஆராய்ச்சியிலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இங்கு ஏராளமான அணு உலைகள் உள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த பாபா அணு ஆராய்ச்சி மையத்தை அமெரிக்காவில் கடந்த ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி கைதான லஷ்கர்இதொய்பா தீவிரவாதி டேவிட் ஹெட்லி, அரபிக்கடலில் படகில் பயணித்து படம் பிடித்துச் சென்றிருந்தமை சமீபத்தில் தேசிய புலனாய்வு அமைப்பின் (என்.ஐ.ஏ.) விசாரணையில் தெரியவந்தது. இதனால் அவன் பாபா அணு ஆராய்ச்சி மையத்தைத் தகர்க்க சதித் திட்டம் தீட்டி அதன் காரணமாகவே நோட்டமிட்டு, படம் பிடித்து இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இப்படி தீவிரவாத தாக்குதல் அச்சுறுத்தல் உள்ளதால் பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில்பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் மூன்றாவது தளத்தில் அமைந்துள்ள இரசாயன ஆய்வகத்தில் எதிர்பாராத விதமாக நேற்றுமுன்தினம் தீப்பற்றியது. இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதுகுறித்து உடனடியாக தீயணைப்பு படையினருக்கு தகவல் தரப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து 45 நிமிடங்களில் தீயை அணைத்து விட்டனர். அத்துடன்தீயில்சிக்கி இருவர்கருகிப்பலியாகினர்.

தீ விபத்துக்கு காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை.

# மும்பையில் தீவிரவாதிகள் ஊடுருவலா? ஹோட்டல்களில் பொலிஸார் சல்லடை!

மும்பையில் நாசவேலைகளை அரங்கேற்றுவதற்காக தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கக்கூடும் என்று உளவுத்துறை தகவல் எச்சரித்ததைத் தொடர்ந்து பொலிஸார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அண்டை நாடுகளில் இருந்து தீவிரவாதிகள் மும்பையில் கடல்வழி உள்ளிட்ட பல்வேறு மார்க்கங்களில் ஊடுருவியுள்ளனர் என உளவுத்துறை, மும்பைப் பொலிஸாரை உஷார்படுத்தியுள்ளது.

குறிப்பாக மும்பையில் நாசவேலைகளை அரங்கேற்ற சதித்திட்டம் தீட்டி பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் இருந்து தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கும் வாய்ப்புகள் உள்ளன என உளவுத்தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து மும்பையில் உள்ள 5 நட்சத்திர ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள் உட்பட 500 இற்கும் மேற்பட்ட ஹோட்டல்களில் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர். சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் யாரும் தங்கி உள்ளனரா, சட்டவிரோதமாக அயல்நாட்டினர் யாரும் ஊடுருவி உள்ளனரா என்று சல்லடை போட்டுத் தேடினர். ஆனால் யாரும் சிக்கியதாகத் தெரியவில்லை. மும்பையில் வந்து தங்கியுள்ள பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் பிரஜைகளின் ஆவணங்களும் [illegible] சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

# இன்று நள்ளிரவு சந்திர கிரகணம்

மதுரை, டிச. 31

புத்தாண்டு பிறக்கும் வேளையில், சந்திர கிரகணம் நிகழ்கிறது. இதையொட்டி பரிகாரம் செய்ய வேண்டியவர்கள் யார் என்று பஞ்சாங்கத்தில் கணிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு பிறக்கும் வேளையில் இன்று (வியாழக்கிழமை) நள்ளிரவு 12.21 மணியில் இருந்து 1.23 மணிவரையில் சந்திர கிரகணம் நிகழ்கிறது. எனவே, இன்று [illegible]க்குள் சாப்பிட்டுவிட வேண்டும். இந்த கிரகணத்தால் மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், வியாழக்கிழமையில் பிறந்தவர்களும் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

கிரகணம் முடிந்த புத்தாண்டு தினத்தன்று (வெள்ளிக்கிழமை) அருகிலுள்ள சிவன் கோயில்களில் சுவாமி, அம்பாளையும், நவக்கிரக மண்டபத்தில் உள்ள சந்திரனையும் வழிபட வேண்டும். பின், வானத்தில் உள்ள சந்திரனை (நிலா) தரிசிப்பது சிறப்பான பலன் தரும். இத்தகவல் வாக்கிய பஞ்சாங்கத்தில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் முதிர்ச்சி அற்ற விமர்சனம்

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்பது சங் ககால இலக்கியங்களில் வரும் ஒரு மேற்கோளாகும். ஒருவர் நல்லதைச் செய்ய முடியாவிட்டால் அதற்கு எதிரானதைச் செய்யாதிருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களது வாக்கையும் போக்கையும் பார்க்கையில் மேற்படி கூற்றுத்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

இன்று, அரசியலில் ஒற்றுமைதான். எமது பலமாகும். இதைத்தான் உயர்நீதிமன்ற நீதியரசராக விளங்கிய மேதகு சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் வற்புறுதியுள்ளார். இந்தச் சட்ட மேதையின் கருத்துக்கள் அனைத்தும் தமிழ்த் தலைவர்கள் அனைவராலும் மனங்கொள்ளப்படவேண்டியவை.

மிகமிக மனம் நொந்து போயுள்ள தமிழ் மக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரின் நடவடிக்கைகளைப் பார்த்து மேலும் மனம் வேதனைப்படுவதையே அவதானிக்க முடிகிறது.

இன்றைய மக்களில் பலரும் அரசியல் ஞானம் உடையவர்கள். சாதாரண ஏழைத் தொழிலாளர்கள் முதல் ஆசிரியர்கள், பொதுமக்கள், மாண வர்கள் உட்படச் சகலருமே அரசியல் ஞானம் உடை யவர்கள். யார் என்ன திருகுதாளம் விட்டாலும் அதை அவர் களால் புரிந்து கொள்ளமுடியும். எல்லோரும் இன்று கேட் கும் ஒரு கேள்வி, ஏன் இந்தப் பேய்க் கூத்துக்கள் எல்லாம் என்பதுதான்.




தந்தை செல்வா அவர்கள் எமக்குக் கற்றுத்தந்த அரசியல் பாடங்களை எவரும் என்றும் மறப்பதற்கில்லை. தமிழ்த் தலைவர்கள் பலரும் காலத்திற்குக் காலம் வாழ்ந்து காட்டிய முன்மாதிரிகள் இன்றும் மக்கள் மனதிலுள்ளன. கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம், கோப்பாய் எஸ். கதிரவேற்பிள்ளை, மன்னார் வி.ஏ. அழகக்கோன், ஊர்காவற்றுறை வி.ஏ. கந்தையா, திருகோணமலை என்.ஆர். இராசவரோதயம், பட்டிருப்பு எஸ்.எம். இராசமாணிக்கம், சாவகச்சேரி வி.என். நவரத்தினம், வட்டுக்கோட்டை அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி எம். சிவசிதம்பரம், பொன் கந்தையா என எமது அரசியல் தலைவர்கள் பின்பற்றிய அரசியல் நாகரிகத்தை இன்று மனம் குழம்புவோர் ஒரு கணம் திரும்பிப் பார்ப்பது நல்லது. மேற்படி தலைவர்களது பட்டியல் மிகமிக நீளமானது. விரிவஞ்சிப் பலரது பெயர்களைத் தவிர்த்துக் கொண்டேன். மேற்படி தலைவர்கள் எவரும் தமது அரசியல் வாழ்வில் தான்தோன்றித் தனமாக நடந்தார்கள் என்பதற்கு ஆதாரமே கிடையாது. அப்படி நடந்து கொண்ட ஓரிருவர் இன்று அரசியலில் விலாசமே இல்லாது போய்விட்டார்கள்.

மட்டக்களப்பின் முடிசூடா மன்னன் எனப் புகழ்படைத்த ஒரு தமிழ்த் தலைவர் 1977 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசில் அற்ப மந்திரிப் பதவிக்காகக் கட்சித் தலைமையை மீறி இணைந்து கொண்டார். இன்று அவரது முகவரியே எவருக்கும் தெரியாமல் உள்ளது. இந்த உதாரணத்தை இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுக்கோப்பை எம்.கே. சிவாஜிலிங்கம் போன்று மீறுவோர், மீறமுனைவோர் நினைத்துப் பார்ப்பது அவர்களுக்கும் நல்லது; தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கும் நல்லது.

**பத்திரிகையாளனின் அறம்.**

"ஒரு கருத்தை என்மனம் ஏற்றது என்றால் அதை எடுத்துரைப்பேன். எதிர்த்து எவரினும் அஞ்சேன்" என்பதுதான் ஒரு பத்திரிகையாளனின் அறம் எனப்படும். இதுதான் உதயன் ஆசிரியர் ந. வித்தியாதரனது அறமாகவும், இருப்பதாக நான் காண்கிறேன். கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக உதயன் நெருப்பாற்றைக் கடந்த வரலாறு படைத்த ஒரு பத்திரிகை. இப்பத்திரிகை என்ன சொல்கிறது என்பதை உலகில் பல பத்திரிகைகளும், எழுத்தாளர்களும், அரசியல் வாதிகளும், இராஜதந்திரிகளும் நோக்குகிறார்கள்.

பிராந்தியப் பத்திரிகையாக இருந்தபோதிலும் ஒரு தேசியப் பத்திரிகையின் தரத்தை உடையது. பத்திரிகையின் நிலைபாட்டுக்கு மதிப்புக் கொடுக்கும் மக்கள் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். இப்பத்திரிகையின் ஆசிரியரையோ, அதன் நிர்வாக இயக்குநரையோ தனிப்பட்ட முறையில். வம்புக்கிழுப்பது அரசியல் நாகரிகமாகாது. எப்பொழுதும் பத்திரிகையாளர்கள் உண்மை புனிதமானது, விமர்சனம் தாராளமானது என்பார்கள். இதை உணர்ந்து கொண்டால் எவருக்குமே பிரச்சினைகள் எழ இடமில்லை.

**நல்லதைச் செய்யத்தான் துணிச்சல் அதிகம் தேவை**

துணிச்சலான பத்திரிகைக்கான விருதினைப் பெற்றுக்கொண்ட பத்திரிகை உதயன். இந்த விருதினைப் பெற்றமைக்கான பாராட்டு விழாவில் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் உரையாற்றுகையில், "நல்லதைச் செய்யத்தான் துணிச்சல் அதிகம் தேவை" என்று குறிப்பிட்டார். துணிச்சலுடன் நல்லதைச் செய்யும் உதயனைப் பாராட்ட வேண்டும். அரசியல் நாகரிகத்துடன் பத்திரிகை விமர்சனங்களை எதிர்கொள்வதே சாலவும் சிறந்தது என்பதற்கு ஒரு முன்மாதிரியை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அகில இலங்கை சோனகர் சங்கத் தலைவராக விளங்கிய சேர். ராசீக் பரீத் அவர்கள், "நான் லேக் ஹவுஸ் பத்திரிகைக் காரியாலயத்தில் பணியாற்றிய வேளை" 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தலில் ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டார். பின்னர் 1960 ஜூலை மாதப் பொதுத் தேர்தலில் இன்னொரு கட்சிக்குத் தாவி அக்கட்சி சார்பில் போட்டியிட்டார். அப்பொழுது தினகரனில் கேலிச்சித்திரக்காரராக பணியாற்றிய ஜிப்ரி ஜூனுஸ் கேலிச்சித் திரமொன்றை எனது யோசனையின்படி வரைந்தார். அதில் சேர் ராசீக் பரீத் அவர்கள் தனது சோனகத் தொப்பியுடன் நிலத்தில் இருந்து மேலே துள்ளிக்குதித்து எழும்பி பல குத்துக்கரணங்களை அடித்தார். கடைசியாகத் தனது பிந்திய நிலைக்குத் தரையில் கால் பதித்து நிற்கிறார். ஒவ்வொரு குத்துக் கரணத்திலும் அவருடைய அரசியல் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. இக்கேலிச் சித்திரம் வெளியான போது சேர். ராசீக் கோபடையவில்லை. அவர் தினகரனையோ அதன் ஆசிரியரையோ அல்லது கேலிச்சித்திரக் காரரையோ திட் டித் தீர்க்கவுமில்லை. வசைபாடவுமில்லை. மாறாக "லேக் ஹவுஸ்" நிறுவனத்துக்கு வந்து அன்றைய தினகரனில் பல நூறு பிரதிகளை வாங்கித் தன் ஆதரவாளர்களுக்கு விநியோ கித்தார். மற்றைய பெரும் அரசியல் புள்ளிகளைப் போலத் தன்னையும் ஒரு அரசியல் வாதியாகத் தினகரன் உயர்த்திவிட்டது எனப் பெருமைப்பட்டுக் கொண்டாராம் சேர் ராசீக். அவரது கேலிச்சித்திரத்துக்குப் போட்ட தலைப்பு "அடி இன்னொரு குத்துக் கரணம்" என்பது. இதுதான் அரசியல் நாகரிகம்.!

இதைத் தெரிந்துகொள்ளாமல், நுணலும் தன் வாயால் கெடும் என்பது என்ற மாதிரி, என்.கே.சிவாஜிலிங்கம், உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனை விமர்சித்திருப்பது அரசியல் முதிர்ச்சியைக் காட்டுவதாக அமையவில்லை.

பெரியவர் சி.வி. விக்கினேஸ்வரன் ஐயா அவர்கள் கூறியது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதன் தலைவர் தலமையில் ஒன்றுபட்டு நிற்பதையே தமிழ் மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என் பதையே அவதானிக்க முடிகிறது.

**செல்லப்பா நடராசா** (மூத்த பத்திரிகையாளர், கோண்டாவில்)

---

# இந்தோனேஷியக் கடலில் 3 மாதங்களாகப் படகில் பரிதவிக்கும் 250 தமிழர்கள் தொற்றுநோய்ப் பிடியில்!

இந்தோனேஷியாவின் மெராக் துறைமுகத்தில் இருநூற்றியைம்பதுக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களுடன் சுமார் மூன்று மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகில் இருப்பவர்களுக்குத் தொற்றுநோய் பரவத் தொடங்கியுள்ளதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் வழியில் இலங்கையர்களுடன் பிடிபட்ட படகை இந்தோனேஷிய அதிகாரிகள் கடந்த மூன்று மாதங்களாகப் கடலிலேயே தடுத்து வைத்துள்ளனர்.

இந்தப் படகிலிருந்த இலங்கையர் ஒருவர் கடந்த வாரம் நோய்வாய்ப்பட்டு மரணித்திருந்தார். இந்த நிலையில் படகில் உள்ள மேலும் பல இலங்கையர்கள் தொற்று நோய்த் தாக் கத்திற்குள்ளாகியுள்ளனர்.

தொடர்ச்சியாக இரத்த வாந்தி எடுத்ததைத் தொடர்ந்து வினுஜா எனும் ஏழு வயதுச் சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேவேளை, 43 வயது நபர் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மெராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகின் நிலைமை மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளது எனத் தெரிவித்துள்ள அகதிகள் பலர், தாங்கள் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

படகில் தொற்றுநோய் பரவியுள்ளதா என்பதை அறிவதற்கு வைத்தியர் ஒருவரை அனுப்புமாறும் அவர்கள்கோரியுள்ளனர் என்று கூறப்பட்டது.

---

# இ.தொ.காவின் அணியில் ஒன்று......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நேற்று அவர்கள் இருவரும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி மேற்படி விடயம் தொடர்பாக விளக்கமளித்தனர். அங்கு யோகராஜன் கூறியவை வருமாறு:-

மலையக மக்களின் பெரும் சக்தியுடன் கட்டியெழுப்பப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை விட்டு இன்று மலையக மக்கள் தூரச் சென்றுகொண்டிருக்கின்றனர். இந்த அரசுடன் நாம் இணைந்திருப்பதை அவர்கள் விரும்பாமையே இதற்குக் காரணம்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல்களில் நாம் கடும் வீழ்ச்சியைச் சந்தித்தோம். நுவரெலியாவில் எமக்கிருந்த மாகாண சபை உறுப்பினர்கள் ஐவரில் ஒருவரை இழந்தோம். சப்ரகமுவவில் ஓர் ஆசனமும் பெறவில்லை.

இந்த வீழ்ச்சிக்கான காரணத்தை நான் கட்சியின் தலைமைத்துவத்திடம் எடுத்துக் கூறினேன். நாம் அரசுடன் இணைந்திருப்பதை மக்கள் விரும்பவில்லை. இந்த அரசு சிறுபான்மை இன மக்களுக்கு எதிரானது என்று எமது மக்கள் நினைக்கின்றனர். இதை நான் கட்சியின் தலைமையிடம் எடுத்துக் கூறியபோது அது கவனத்தில் எடுக்கப்படவில்லை.

அதேபோல் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு 13 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக அரசியல் தீர்வை முன்வைக்கும் எண்ணம் அரசிடம் இல்லை. ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனை அறிக்கைக்கு என்ன நடந்ததென்றே தெரியாது.

தமது மக்களுக்குப் பிரச்சினை வருகின்ற போது அதைத் தட்டிக் கேட்கும் துணிச்சல் நேற்று அரசியலுக்கு வந்த பிள்ளையானுக்கு வருகிறது. ஆனால், அறுபது வருடங்களாக அரசியல் செய் யும் இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸுக்கு அந்தத் துணிச்சல் இல்லை.

இப்படிப்பட்ட கட்சியுடன் தொடர்ந்தும் இணைந்திருந்தால் நாம் மக்களை முற்றாக இழந்துவிடுவோம். மக்களின் விருப்பத் தின்படிதான் நாம் செயற்பட வேண்டும். ஆகவேதான், நாம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய முடிவெடுத்துள்ளோம். எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை நாம் ஆதரிக்கத் தீர்மானித்துள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்று இன்னும் முடிவெடுக்கவில்லை. நான்காம் திகதி அவர்கள் கூடி முடிவெடுப்பர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாம் இப்போது எடுத்திருக்கும் இந்த முடிவு கூட்டமைப்பின் தீர்மானத்தில் தாக்கம் செலுத்தும் என்று நாம் நம்புகின்றோம். யாரை ஆதரிப்பது என்று இன்னும் தீர்மானிக்காமல் இருக்கும் மற்றும் சிலருக்கும் எமது முடிவு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

எமது இந்தத் தீர்மானத்திற்கு இந்தியா எந்த வகையிலும் பின்னணியில் இல்லை என்பதை நாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இந்தியாவின் தலையீடு இதில் அறவே இல்லை. - என்றார் அவர்.(சி)

## பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம், டிசெ.31

மறைந்த முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான தி.மகேஸ்வரனின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் நடத்தப்படும் இந் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் நல்லூர் கல்வியங்காடு பலவன் வீதியிலுள்ள முக்குளிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (ஓ-7)

---

# இன்று மாலையில் மத அனுஷ்டானம்

2009ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற வெற்றியின் பின்னர் தேசிய மறுமலர்ச்சிக்காக இன்று மாலை 6 மணி தொடக்கம் இரு மணித்தியாலங்கள் மத அனுஷ்டானங்களை மேற்கொள்ளுமாறு சகல மதத்தினரையும் மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு கேட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இது தொடர்பான சுற்றறிக்கையை அந்த அமைச்சு விடுத்துள்ளது. (ஓ-01)

## தேர்த்திருவிழா

சாவகச்சேரி, டிசெ.31

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருழா இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்தத்திருவிழா வெள்ளி மு.ப. 10 மணிக்கு ஆலய பிரதமகுரு நாகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பொறும். (ஓ-131)

## அரசியல் நிலை குறித்து கருத்தரங்கு

யாழ். சமூக ஆய்வுக் குழுவின் ஏற்பாட்டில் இன்றைய அரசியல் நிலைபற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தோழர் து. குகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அரசமைப்பு மற்றும் தேசிய நல்லிணக்க விவகார அமைச்சர் டி.ஈ. டபிள்யு குணசேகர கருத்துரை வழங்குவார். (ஓ-07)

---

# வாக்களிப்பது எவ்வாறு என்பதனை விளக்கி கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.31.

சிந்தனைக் கூடம் - யாழ்ப்பாணம், , என்னும் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டு மக்கள் நலன் கருதி இலங்கை ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் எவ்வாறு எமது வாக்குகளைப் பதிவு செய்வது என்னும் கருப்பொருளில் விழிப்புணர்வுக் கருத் தரங்கு நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி மாணவர்கள் கிராமங்கள் தோறும் சென்று மக்களை, சமூக அமைப்புக்களைச் சந்தித்து இது பற்றி முழுமையான விளக்கமளிக்கவுள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் இக் கருத்தரங்குத்தொடர் கிராமங்கள் தோறும் இடம்பெறவுள்ளதாக சிந்தனைக் கூடத்தின் அமைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கைத் தங்கள் கிரர்மங்களில் ஏற்பாடு செய்ய விரும்பும் சமூக, மத, தொண்டு நிறுவனங்கள் ஐ.ஐ.ரி. நிறுவனம் யாழ்.கிளை, 182, பிறவுண் றோட், யாழப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மேயர் மீது தாக்குதல்: கிழக்கு மாகாண உறுப்பினர் கைது

கொழும்பு, டிச. 31

கல்முனை மாநகர சபை மேயர் எச்.எம்.எம்.ஹரீஸை வழிமறித்துத் தாக்க முற்பட்டதாகக் கூறப்படும் தேசிய காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துல்கத் நஸீம் மற்றும் அவரது சகாக்கள் மீது மக்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் ஒன்று நேற்றுக் காலை கல்முனையில் இடம்பெற்றது.

இது தொடர்பாக கல்முனை மேயர் ஹரீஸ் கூறியவை வருமாறு-

கல்முனை மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைப்பதற்காக நான் இன்று (நேற்று) காலை 10 மணிக்கு அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்தேன்.

அப்போது தேசிய காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துல்கர் நஸீம், அவரது சகாக்கள் சிலரை அழைத்து வந்து என்னை வழிமறித்துத் தாக்க முற்பட்டார்.

இதைக் கேள்விப்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டு வந்து நஸீம் மீது தாக்குதல் நடத்தினர். அவர் சிறிது நேரம் மாநகர சபை அலுவலக அறையில் அடைத்து வைக்கப்பட்டு மக்களால் முற்றுகையிடப்பட்டிருந்தார்.

சம்பவம் இடம்பெற்ற அரைமணி நேரம் கழித்துப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்தனர். 'துல்கர் நஸீமை கைதுசெய்யாவிட்டால் நாம் இங்கிருந்து போகமாட்டோம்' - என்று மக்கள் கூறினர். இதனால், பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

அவரது சகாக்கள் மேற்கொண்ட தாக்குதலால் மாநகர சபைக்குச் சொந்தமான வாகனத்தின் முன் கண்ணாடி சேதமாகியது. அலுவலகக் கதிரை மேசைகளும் சேதமாகின.

அவர்களின் அடாவடித் தனத்தை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன். இவ்வாறான அராஜகங்களை மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். - என்றார். (அ-சி)

## திருவாசக முற்றோதல்

சுழிபுரம்,டிசெ.31

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் திருவாசகம் முற்றும் ஓதுதலை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பயன் பெறுமாறும், முற்றோதலில் பங்கு கொள்பவர்களுக்கு நண்பகல் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-28)

## தென்னாசியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதக்குற்றச்சாட்டின் பெயரில் ஜே.எஸ். திஸநாயகத்திற்கு விதிக்கப்பட்ட 20 வருடச் சிறைத்தண்டனையும் ஊடக சுதந்திரம் மிகவும் கீழ் நிலைக்கு இலங்கையில் சென்றுவிட்டதைப் புலப்படுத்தியுள்ளன என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை சுமுகநிலைக்குத் திரும்பிவரும் நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையின் பேரிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (சி)

## டீசல்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 421 ரூபாவாக இருக்கும். எனினும், 'ஷெல்' காஸின் விலையில் மாற்றங்கள் ஏற்படாது.

பெற்றோல் விலை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து டீசல் மற்றும் மண்ணெண்ணையின் விலைகளும் குறைக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது என்று அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- போன்றவை உட்படப் பல விடயங்களை ஆனந்தசங்கரி இந்தக் கோரிக்கைக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## வெளிநாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன எனவும் யாழ்ப்பாணம், வவுனியாவுடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலைப்பகுதிகளில் இருந்தும் நாளாந்தம் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அனுராதபுரம், பொலநறுவை, புத்தளம், குருநாகல் போன்ற பிரதேசங்களில் இருந்து வரும் பெரும்பாலான விண்ணப்பதாரிகள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிவதற்காக கடவுச்சீட்டுக்களைப் பெறுகின்றனர் எனவும் கடந்த வருடம் மொத்தமாக 14 ஆயிரத்து 839 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார். (அ-சி)


**NEW SCIENCE CENTRE**
யாழ்.நகர் (வெலிங்டன்)
A/L 2012
CHE : அன்பு, யயோதயன்
PHY : ஸ்பெல்மன், எடிசன்
COM.MAT : ரி.சசி
BIO : கே.சுதாகரன்
ஆரம்பம்: 02.01.2010 சனி காலை 8 மணி

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY-2012 A/L
ஆரம்பம்- 31/12/2009
வியாழன்-3.00 - 4.00 பி.ப
BY. சு.பொன்திவாகரன் (91999)

**Physics**
A/L 2012
( உரிய காலத்தில் பாடத்திட்டம் முடிக்கப்படும்)
ஆசிரியர்: திரு ம.ஸ்பெல்மன் (B.Sc)
ஆரம்பம் : 2/1/ 2010 5 pm
இடம் : MS CENTRE
No,18 அச்சுக்கூட வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
( பெரிய கோவில் அருகாமையில்)

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம் | கே.கே.எஸ்.றோட், இணுவில்.
(இருஇடத்தில்)
ஆரம்பமாகின்றது
A/L - 2012
கலை, வர்த்தகப்பிரிவு
ஜனவரி 2 இல்
எமது மற்ற நிறுவனமான
BARATHY
சித்தன்கேணியில்
அங்கும் இதே நாளில் ஆரம்பமாகின் றது.
உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்.
சி/563558

**உயர் கலைக் கல்லூரி**
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்
2012 A/L
கலைப்பிரிவுகள் ஆரம்பம்
01.01.2010
வெள்ளி காலை 7.00 மணிக்கு

| | |
|---|---|
| தமிழ் | R.S.சந்திரசேகர் |
| இந்துநாகரிகம் | S.சிறீதரன் |
| புவியியல் | P.S.குமரன் |
| அரசறிவியல் | K.S.இளங்கோ |
| வரலாறு | M.பத்மன் |
| இந்துசமயம் | S.சிறீதரன் |
| நாடகமும் அரங்கியலும் | S.ரமேஷ் |
| அளவையியல் | பிரபல ஆசிரியர் |
| கிறிஸ்தவம் | A.யூட் |

அறிவை அறிவால் அறிவோம். (91973)

INFORMATION TECHNOLOG PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology
MPCS Build g,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 23/01/2010
வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 25/01/2010
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம்: 250/-
Centre for Information Technology
-Executive Officer

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
AAT (Sri Lanka)
Foundation Level & intermediate level & Final
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 02.01.2010 சனிக்கிழமை
மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
PHARMACIST (EXTERNAL) Examination course
(Ceylon Medical College Council, University of Colombo)
கல்வித் தகைமைகள்: GCE O/L ஆங்கில பாடம் சித்தி, GCE A/L இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி.
விரிவுரைகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் காலை 8.30 - பி.ப 1 மணி வரை. புதிய பிரிவுகள் ஆரம்பம்: 02.01.2010
Certificate Course in English
Course commencing on
18.01.2010 8.30 am Week day batch
16.01.2010 8.00 am Week end batch
External Degree (Jaffna University)
GAQ, BA 1& BA Final
1st in Com, B.Com. (1&11), Final
ஆரம்பம்: 02.01.2010 (Saturday) 9.00 am
Furthur Detail
Drector
Jaffna College Undergraduate Dept,
464, Hospital Road, Jaffna.

DMI Jaffna.
A/L - 2012

டெங்கு காய்ச்சல் பற்றி விழிப்பாக இருப்போம்





- டெங்கு நோயைப் பரப்புகின்ற நுளம்புகள் பகல் வேளை லேயே எம்மைக் கடிப்பதால் எமது வீடு, அலுவலகம், கல்விக்கூடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகாது பார் துக் கொள்வதன் மூலமே எம்மை டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.
- உங்களது சுற்றாடலில், மழைநீர் தேங்கக் கூடிய சிறிய கொள்கலன்கள், சிரட்டைகள், கோம்பைகள் பூச்சாடிகளில் நீர் தேங்கி நிற்காது பார்த்துக் கொள்ளுங்கள்.
- நீர் சேகரிக்கும் பாத்திரங்கள், தொட்டிகளை நன்கு தேய்த்துக் கழுவி வாரமொரு முறை நீரை மாற்றுங்கள்.

தகவல்:
சுகாதாரத் திணைக்களம்
யாழ்ப்பாணம்.
TRRO LIMITED
UNHCR
அனுசரணை TRRO
நிதியுதவி UNHCR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.